
www.padippakam.com

# செம்பருத்தி

MAJALAH BULANAN SEMPARUTHI
http://www.malarweb.com/semparuti

PP 9823\5\2000 *ஆவணி - புரட்டாசி* திருவள்ளுவர் ஆண்டு 2031

## சிட்னி 2000 புத்தாயிரத்தின் முதல் ஓட்டம்!




SEPTEMBER
செப்டம்பர்
2000
RM.3.00

**முன்னேறத் துடிக்கும் சமூகத்தின் எழுச்சிக்குரல்!**

படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com





**4**

தூரநோக்குப் பள்ளிகள் எனப்படும் வவாசான் பள்ளிகளின் அமைப்பு பற்றிய முழு விபரங்களும் அரசினால் வெளியிடப்படாத நிலையில் அது பற்றிய ஆதரவுக் குரல்களும் விமர்சனக் குரல்களும் எழுந்துள்ளன. அதிபற்றி விபரம் தருகிறார் மலேசியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் P. இராமசாமி...

**40**

மலேசிய நீதித்துறை வரலாற்றில் நீண்ட நாள்கள் நடைபெற்ற வழக்கான முன்னாள் துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வாரின் வழக்கின் தீர்ப்பு வெளிவந்துள்ளது. அதுபற்றிய கண்ணோட்டம்..



**51**

தமிழீழம் உருவாக்கப்பட்டால் அரசு நிர்வாகம் எத்தகைய தன்மையதாக இருக்கும்? அது சிவில் நிர்வாகத்தின் கீழ் இருக்குமா? அல்லது விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டில் இருக்குமா? .. அதுபற்றி...




முன்னேறத் துடிக்கும் சமூகத்தின் எழுச்சிக் குரல்!



படிப்பகம்

www.padippakam.com



நிர்வாக ஆசிரியர்:
**அந்தோணி சார்ல்ஸ்**
**B.Sc. (Hons) UKM**

பொறுப்பாசிரியர்:
**மணியம் சின்னப்பன்**

விற்பனை / விளம்பரம்:
**செல்வி ரோஸ்லின் தோமஸ்**
**நா. ரமா B.ECON (Hons) UPM**
**சந்தா:**
**தொலைபேசி :**
**03-3810193**
**தொலைநகல்:**
**03-3810192**

கணினி வடிவமைப்பு:
**உஷா · சங்கர்**
**ப. ரஜினிகாந்த்**

அட்டையில்:
**சிட்னி 2000**
**புத்தாயிரத்தின் முதல் ஓட்டம்!**

தொடர்பு முகவரி:

SEMPARUTHI PUBLICATIONS SDN. BHD.
LOT 2-6-8, MENARA KLH
BUSINESS CENTER,
NO2, JALAN KASIPILLAY OFF 2 1/2 MILE
JALAN IPOH, 51200 KUALA LUMPUR.

**SEMPARUTHI**
**PETI SURAT 10915,**
**PEJABAT POS BESAR,**
**50728 KUALA LUMPUR.**

# தூரநோக்குப் பள்ளிகள்

தூரநோக்கு அல்லது வவாசான் பள்ளி என்றால் மலாய், சீனம் மற்றும் தமிழ் மொழிகளைப் போதனா மொழிகளாகக் கொண்டு இயங்கும் பள்ளிகளை ஒரே வளாகத்தில் அமைக்கும் திட்டமாகும். இதன்படி ஒரே வளாகத்தினுள் மூன்று வகையான பள்ளிகள் இருக்கும். பல்லின மாணவர்களைக் கொண்டுள்ள தேசியப் பள்ளி, பெரும்பான்மைச் சீனர்களைக் கொண்டுள்ள சீனப்பள்ளி மற்றும் இந்தியர்களை மட்டுமே கொண்டுள்ள தமிழ்ப்பள்ளி ஆகியவை ஒரே இடத்தில் அமையப் பெற்றிருக்கும்.

இந்த தூரநோக்குப் பள்ளித்திட்டம் அமுலாக்கம் காண்பதற்கு முன்பு அனைவருக்கும் அது சார்பான விளக்கங்களை அளிக்க வேண்டும் என்று பெற்றோர்கள், ஆசிரியர்கள், பொது இயக்கங்கள், அரசியல்வாதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்தத் திட்டத்தினால் தமிழ்ப்பள்ளிகளின் நிலைமை என்னவாகும் என்ற வினாவும் எழுந்துள்ளது. இதற்குப் பதிலளிக்கும் வகையில் ம.இகாவின் தேசியத் தலைவர் இத்திட்டத்தை வரவேற்றுள்ளார். ம.இ.கா அரசாங்கக் கொள்கைகளுக்கு முரண்பாடான கருத்துக்களை முன்வைக்கும் நிலையற்ற நிலையில் அதனை ஆமோதிக்கும் கருத்தை நாம் சற்றே தள்ளிவைத்துவிட்டு, இந்நாட்டில் தமிழ்ப்பள்ளிகளின் நிலை பாதுகாக்கப்பட வேண்டுமானால் அதற்கு இந்த தூர நோக்குப் பள்ளித்திட்டம் பயனளிக்குமா எனப் பார்க்க வேண்டும்.

அதன் அடிப்படையில் இந்தத் தூரநோக்குப் பள்ளித்திட்டம், பள்ளிகளை முழு அரசாங்கப் பள்ளிகளாக மாற்றும். பல்லின மாணவர்களும் ஒரே வளாகத்தில் கூடுவதால் அவர்களிடையே இன வேறுபாட்டைக் களைவதற்கான வாய்ப்புகள் உண்டாகலாம் போன்றவை அத்திட்டத்தை வரவேற்கக் கூறப்படும் கருத்துக்கள். ஆனால், இன்று நம்மிடையே உள்ள சமூக - பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் இந்தியர்களின் புறக்கணிக்கப்பட்ட சூழ்நிலைகளும் இன்னும் தொடர்கின்றன. இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையேயும் உயர் கல்விக் கூடங்களிலும் இன ஒற்றுமை அதிகமாகவுள்ளதாகவும் தெரியவில்லை.

அடுத்தபடியாக, கல்விக்கும் சமூக பொருளாதார சூழ்நிலைகளுக்கும் உள்ள நேரடித் தொடர்புகள், அண்மைய ஆய்வுகள் மூலம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தியக் குழந்தைகளின் கல்வி நிலை உயர்த்தப்பட வேண்டுமானால், அவர்களின் சமூக பொருளாதார சூழ்நிலைகள் மாற்றமடைய வேண்டும். எனவே சமூக பொருளாதார சீரமைப்புத் திட்டங்கள் முழு வெற்றியடைந்து, அதனால் இந்தியர்களிடையே காணப்படும் வறுமையும் பிரச்சனைகளும் தீர்க்கப்பட்ட நிலையில், தமிழ்ப்பள்ளிகள் தரமான நிலையில் உருவாகும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

நடைமுறையில் பலவகையான சூழல்களில் சமுதாயம் அல்லல்படும் இத்தருணத்தில், தூரநோக்குப் பள்ளித் திட்டம் நமது நிலைமைக்குப் பேரிடராக உருவாகக்கூடும்.


இந்தியர்களின் வளர்ச்சிநிலை மற்ற இனங்களுக்கு ஈடான நிலையில் உருவாகத் திட்டங்கள் தேவை. தமிழ்ப்பள்ளிகள் ஏழைகளின் குழந்தைகள் கல்வி கற்கும் பள்ளிகள் என்ற நிலை மாறினால் வவாசான் பள்ளித்திட்டம் வெற்றி காணும்.

எனவே, நமது சமுதாயம் சமூக பொருளாதார அடித்தளத்தை உறுதியாகப் பெற்றிருக்க வேண்டும். அதுவே மொழி, கலை, கலாச்சார வளர்ச்சியை நாட்டின் வளர்ச்சியோடு இணைக்க வழிவகுக்கும். அடிப்படைப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணாமல், நாம் இருப்பதை இழந்துவிடச் சம்மதிக்கக் கூடாது.



படிப்பகம்

www.padippakam.com




## செய்தி

வவாசான் பள்ளி பற்றிய விவாதங்கள் தற்போது எழுந்துள்ளன. இந்தப் பள்ளியினால் தமிழ்ப்பள்ளிகளும் சீனப்பள்ளிகளும் பாதிக்கப்படும் என்கிற கருத்துக்கள் எழுந்துள்ளன.



**"குருடர்கள் யானையை அடையாளம் கண்ட கதையாக, இந்த வவாசான் பள்ளி விவகாரம் ஆகிவிடக் கூடாது!"**



படிப்பகம்

www.padippakam.com




**தூரநோக்குப் பள்ளிகள் எனப்படும் வவாசான் பள்ளிகளின் அமைப்பு பற்றிய முழு விபரங்களும் அரசினால் வெளியிடப்படாத நிலையில் சீனக் கல்வியாளர் அமைப்புக்களும், இந்திய அரசியல், சமூக, கல்வி, இயங்கங்களும் தனது கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். ம.இ.கா இந்தத் திட்டத்தை ஆதரிக்கின்ற இவ்வேளையில் மசீச கொள்கையளவில் இந்தத் திட்டத்தை ஆதரித்தாலும் இதுபற்றிய போதுமான விளக்கத்தை அரசிடம் கோரி இருக்கிறது. மலேசிய தேசிய பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறைப் பேராசிரியர் P. இராமசாமியின் இக்கட்டுரை வவாசான் பள்ளிகளின் உருவாக்கத்தை விவரிக்கின்றது. (ஆ.ர்)**

*சமூகவியல் மற்றும் பொருளாதார மாற்றத்தைக் கொண்டுவர கல்வி ஒரு முக்கியமான கருவியாகும். வறுமை, இனங்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வு மற்றும் நன்நெறிகளைப் போதிக்கக் கல்வித் திட்டங்கள் உதவி புரிகின்றன. மலேசிய அரசாங்கம் பொருளாதார மற்றும் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை அதிகரிக்கப் பள்ளி அடிப்படையிலான கல்வித் திட்டங்களைப் பயன்படுத்துகிறது.*

*இதன் அடிப்படையில்தான் கடந்த இருமாதங்களாக அரசாங்கத்தில் வவாசான் பள்ளிக் கொள்கை பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. இக்கல்விக் கொள்கையைப் பற்றிய முழு விபரங்கள் மற்றும் இதன் செயல்பாடுகள் இன்னும் அறிவிக்கப்படாத நிலையில் இருக்கும் தறுவாயில் அரசாங்கம் ஓரிரு மாவட்டங்களில் இத்திட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்துள்ளது. வருங்காலங்களில் தேசியப் பள்ளிகளும், பிறமொழிப் பள்ளிகளும் (சீன, தமிழ்) ஒரே இடத்தில் அமையும் என்ற ஒரு தோற்றத்தை இது உருவாக்கியுள்ளது. இதன் அடிப்படையில் பார்த்தால் மலாய் மற்றும் சீன, தமிழ் பள்ளிகள் ஒரே சுற்று வட்டாரத்தில் அமைவதால், பள்ளித் திடல் மற்றும் சிற்றூண்டிச் சாலை போன்றவற்றை பொதுவாகக் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாகிறது. வவாசான் பள்ளி வடிவமைப்பில் மூவின மாணவர்கள் ஒரே சுற்றுப்புறத்தில் பார்த்துப் பழகுவதால் அவர்களிடையே ஒரு பரஸ்பர உறவை ஏற்படுத்த முடியும் என அரசாங்கம் எண்ணுகிறது.*

*இதைத் தவிர்த்து வவாசான் பள்ளிகளின் அமலாக்கம் அரசாங்கத்தில் செலவீனத்தைக் கட்டுப்படுத்தும். தற்போதைய நிலைமையைப் பார்க்கும்போது, தமிழ்ப்பள்ளிகள் அடிப்படை வசதிகள், நல்ல கட்டடங்கள், பள்ளி அறை, கணினி போன்றவற்றைக் கொண்டிருக்கவில்லை. பெரும்பாலான தமிழ்ப்பள்ளிகள் அரசாங்கத்தின் நேரடி உதவியைப் பெறுவதில்லை. இத்திட்டத்தின் மூலம் இம்மாதிரியான ஏற்றத் தாழ்வுகள் நிவர்த்தி செய்யப்படும் என நம்பலாம்.*

*மேற்குறிப்பிட்டதைத் தவிர்த்து வவாசான் பள்ளித் திட்டம் எதிர்காலத்தில் ஒரே பள்ளித் திட்டமாக (single - school system) கொண்டுவர முடியும் என்று அரசாங்கமும் நம்புகிறது. தாய்மொழிக்கல்விப் பள்ளிகளை அரசாங்கம் அகற்ற எண்ணம் கொண்டிருக்காவிட்டாலும் ஒரே பள்ளித் திட்டம்தான் நாட்டிற்கு உகந்தது என ஒரு எண்ணம் எழுந்துள்ளது. இந்த எண்ணம் அரசாங்கத்தினால் கூறப்படாவிட்டாலும் வவாசான் பள்ளித் திட்டம் அரசாங்கத்தின் எண்ணத்திற்கு ஒரு முன்னோடியாகத் திகழும் என்று கூறலாம்.*

*ஒரு சில காரணங்களுக்காக அரசாங்கத்தின் வவாசான் பள்ளித் திட்டம் பிரச்சனைகளை எதிர் நோக்கும் எனக் கூறலாம். உதாரணமாக இப்பள்ளியைப் பற்றிய அடிப்படைக் கொள்கை இன்னும் பொது மக்களுக்கு விரிவாகத் தெரிவிக்கப்படவில்லை. இத்திட்டத்திற்கு பொதுமக்களின் ஆதரவும் எப்படி இருக்கின்றது எனவும் அறியப்படவில்லை.*

*இரண்டாவது, ஓரிரு இடங்களில் இத்திட்டத்தின் அமலாக்கம் சீனர்கள் மற்றும் இந்தியர்களிடையே சீரிய கவனத்தை ஈர்த்துள்ளது. சிறீ மஞ்சோங் (Sri Manjung) மாவட்டத்தில் அமைந்திருக்கும் புண்டூட் தமிழ்ப்பள்ளி இடத்தை அரசாங்கம் வவாசான் பள்ளித் திட்டத்திற்கு எடுத்துக் கொண்டுள்ளது. அதாவது 82 வருடங்களாக இருந்த தமிழ்ப்பள்ளி இடத்தை இனிமேல் தேசியப் பள்ளியும் சீனப்பள்ளியும் சேர்ந்து பயன்படுத்தப் போகின்றார்கள்.*

*புண்டூட் தமிழ்ப்பள்ளி அமைந்திருந்த வளாகத்தை இந்நிலத்தின் முன்னாள் உரிமை யாளர்களான தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கம் (NLFCS) அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டது.*



படிப்பகம்

www.padippakam.com



இந்தத் தமிழ்ப்பள்ளியின் நிலத்தை அரசாங்கத்திடம் ஒப்படைக்கும் முன்னர் அங்கு வாழும் இந்தியர்களின் ஒப்புதலைப் பெற (NLFCS) தவறிவிட்டது. அரசாங்கம் தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனக் கடந்த சில வருடங்களாகச் சித்தியவான் பகுதியில் வாழும் இந்தியப் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் அரசாங்கத்திற்குப் பலவகையான நெருக்குதல்களைக் கொடுத்து வருகின்றனர். மற்றும் இங்கு வாழும் சீனர்கள்கூட வவாசான் பள்ளித் திட்டத்தை ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை.

மூன்றாவதாக வவாசான் பள்ளித்திட்டம் தேசிய அளவில் அமலாக்கம் செய்யப்பட்டால் அது தற்போதைய தாய்மொழிப் பள்ளிகளின் அந்தஸ்தைப் பாதிக்கும் என அஞ்சப்படுகிறது.

தேசியப்பள்ளியையும் தாய்மொழிப்பள்ளிகளையும் ஒரே சுற்றுவட்டத்தில் அமைத்தால் தேசியப் பள்ளி மாணவர்களை அதிகம் ஈர்க்கும் என வாதிடப் படுகிறது. இம்மாதிரி நடக்குமேயானல் தாய்மொழிப் பள்ளிகளின் மாணவர் எண்ணிக்கை குறைந்து அப்பள்ளிகள் மூடுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது.

இறுதியாக வவாசான் பள்ளிகளைப் பற்றி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மலாய்க்காரர்கள் அல்லாத அரசியல் கட்சிகளின் நடவடிக்கை கவலை அளிக்கின்றது. இதுநாள் வரை எந்தவொரு கட்சியும் அரசாங்கத்திடம் இத்திட்டத்தைப் பற்றித் தங்களுடைய கருத்துக்களையோ அல்லது அரசாங்கத்திற்கு அறிவுரைகளையோ கூறவில்லை.

ஓரிரு இடங்களில் இதன் அமலாக்கம் கடுமையான பிரச்சனைகளை உருவாக்கியுள்ளது. அரசாங்கம் வவாசான் பள்ளியைப் பற்றிய தனது நோக்கத்தைத் தெரியப்படுத்த இதுதான் தகுந்த நேரம்.

பொதுமக்களின் ஆதரவின்றி எந்தவொரு அரசாங்கத் திட்டமும், அது எவ்வளவுதான் நல்ல திட்டமாக இருந்தாலும் பயனற்றுப் போய்விடும்.

**பேராசிரியர் P. இராமசாமி,**
**மலேசிய தேசிய பல்கலைக்கழகம்**

## அஞ்சலி



**நாகலிங்கம் த/பெ சுப்பிரமணியம்**
**மலர்வு: 20-01-1982**
**உதிர்வு: 15-07-2000**

ணர்வாளரும் உலகத் தமிழர் நிவாரண நிதியின் சுங்கைப்பட்டாணி கிளைமூலம் தமிழினப் பணியில் பணியாற்றியவருமான நாகலிங்கம் அவர்கள் 15-07-2000 அன்று ஒரு மோட்டார் விபத்தில் காலமானார். அன்னாரைப் பிரிந்து துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*செம்பருத்தி குடும்பத்தினர்*
*உலகத் தமிழர் நிவாரண நிதி*
*மலேசிய தமிழ்நெறிக் கழகம்*



படிப்பகம்

**வவாசான் பற்றிய மலேசியர்களின் குரல்கள் இவை! தூரநோக்குப் பள்ளிகள் பற்றிய இக்குரல்களைப் பதிவு செய்ய உதவிய இதழ்கள்: மலேசிய நண்பன், தமிழ் நேசன், THE STAR, THE SUN.**

# வவாசான் குரல்கள்



❤ நாம் வாக்குறுதி வழங்கியதை நிறைவேற்றுவோம். கறுப்பு வெள்ளையில் எழுத வேண்டும் என்பது உண்மையில் அவசியமில்லை. நமது வாக்குறுதிகளை நாம் மீற விரும்பினால், எல்லாம் எழுதப்பட்டிருந்தாலும்கூட நாம் அவ்வாறு மீற முடியும்."

***மூசா முகமட்***
***கல்வி அமைச்சர்***



❤ "தூர நோக்குப் பள்ளித் திட்டத்தில் இடம்பெறும் பள்ளிகள் தனித்தனிக் கட்டடங்களையும் சொந்த நிர்வாகங்களையும் கொண்டிருக்கும். ஆனால் காண்டீன், மற்றும் திடல் ஆகியவை மூன்று பள்ளிகளுக்கும் பொதுவாக இருக்கும். ஒரே இடத்தில் அமையவுள்ள மூன்று மொழிப் பள்ளிகளின் கட்டடங்களுக்கான விஷேட வரைபடத்தை பொதுப்பணித்துறை அமைச்சு தற்போது தயாரித்து வருகிறது?

❤ "தூரநோக்குப் பள்ளித் திட்டத்தில் தமிழ்ப்பள்ளிகள் இணைவதால் தமிழ்மொழியோ இந்திய சமுதாயத்தின் அடையாளமோ அழிந்துவிடாது! மாறக இத்திட்டம் இளவயதினர் மத்தியில் இன நல்லிணக்கம் வளர்வதற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்தும். இத்திட்டம் சீன அல்லது தமிழ்ப் பள்ளிகளின் அடையாளத்தைப் பாதிப்பதாக இருந்தால் இதனை எதிர்க்கும் முதல் நபர் நானாகத்தான் இருப்பேன்.

❤ "தமிழ் மற்றும் சீனப் பள்ளிகளின் நோக்கம் மற்றும் அவற்றின் வளர்ச்சி ஆகியவை குறித்து அளிக்கப்பட்டுள்ள உத்தரவாதத்தின் அடிப்படையிலேயே தேசிய முன்னணியின் உணர்வைக் கருத்திற்கொண்டு இந்தத் தொலைநோக்குப் பள்ளித் திட்டத்தை நான் தற்காக்கிறேன்"

***ச. சாமிவேலு***
***பொதுப்பணித்துறை அமைச்சர், ம.இ.கா தேசியத் தலைவர்***



❤" வவாசான் பள்ளிகளின் நடைமுறை வழிகாட்டி விதிகளை கறுப்பு வெள்ளையில் எழுதிக் கொள்வது நல்லது. ஏனெனில் சில சிறந்த கொள்கைகளும் அமுலாக்கத்தின் போது நாளடைவில் திசைமாறிப் போவதுண்டு."

❤ "இந்தத் திட்டத்தை அமுல்படுத்தினால் தமிழ் மற்றும் சீனப்பள்ளிகளின் நிர்வாகம் பாதிக்கப்படுவதுடன் மாணவர்களின் தாய்மொழிப் பயனீடு காலப்போக்கில் அழியக்கூடும் என்று அஞ்சுகிறேன்."

***லிங் லியோங் சிக்***
***ம.சீ.ச. தலைவர், போக்குவரத்துத் துறை அமைச்சர்.***

❤ "இதுவரை இத்தகைய வாவாசான் பள்ளிமுறைத் திட்டத்தில் ஒரு சில பள்ளிகளே இணைந்திருந்தன. இதனால் அதன் விளைவுகள் நன்கு உணரப்படவில்லை. இனி, அதிகமான பள்ளிகள் அத்திட்டத்தில் அங்கம் பெற இருப்பதால் அதன் விளைவுகள் நன்கு ஆராயப்பட வேண்டும். அதற்கு முன்னால் பல வட்டாரங்களில் வவாசான் பள்ளித் திட்டம் பரீட்சார்ந்த ரீதியில் அமுல்படுத்தப்பட்டு ஆய்வு செய்யப்பட வேண்டும். பின்னர் அவசியமானால் அதில் மாற்றங்கள் செய்யலாம். நல்ல கொள்கையும் நல்லவிதமாக நடைமுறைப் படுத்தினால்தான் நல்ல பலன் கிடைக்கும். அதை உறுதி செய்வது அவசியம்.

**மலேசிய நண்பன் ஆசிரியர் தலையங்கம். 7-8-2000**



படிப்பகம்



❤ "தொலைநோக்குப் பள்ளி திட்டமானது ஒரே மாதிரியான பள்ı மானியம் வழங்கும் திட்டமா இருக்குமா? ஏனெனில் ஒ( வளாகத்தில் இருக்கும் பட்சத்தில் சீ( தமிழ்ப்பள்ளிகளுக்கு ஒரு மானியமு( தேசியப்பள்ளிக்கு ஒரு மானியமு வழங்கி இரு மாறுபட்ட மானிய அள என்ற நிலை உருவானால் கால ஓட்டத்தில் அதிக வசதிகளை பெறும் தேசியப் பள்ளி மட்டுமே நிலைத்திருக்கும். பல்வே( வசதிகள் குன்றிய சீன, தமிழ்பள்ளிகளின் மாணவர்கள் நல் வசதிகளைக் கொண்ட தேசியப் பள்ளிக்குச் செல்ல நேரிடு ஏனெனில் ஒரே வளாகத்தில் வசதிகளும் வாய்ப்புகளும் அதிக பெற்ற தேசியப் பள்ளி இயல்பாகவே மற்ற இரு தேசிய வகை பள்ளிகளை வழங்க வாய்ப்புண்டு.

**ஆ. குணநாதன்**
**தமிழ்க் கல்வியாளர் ஒருங்கிணைப்புக் குழு.**



❤ *"வவாசான் பள்ளி அமலாக்கத்தினால் ஏற்படக்கூடிய சாத்தியபூர்வமான சிக்கல்களை அடையாளம் கண்டு அவை எந்தக் காலத்திலும் தமிழ், சீனப் பள்ளிகளின் தனித் தோற்றத்தைப் பாதித்து விடாமல் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு நாடாளுமன்றத்தின் மூலமாக சட்ட பூர்வமான பாதுகாப்புகளை உருவாக்க வேண்டும்."*

**எம்.குலசேகரன்**
**ஜ.செ.க. உதவித் தலைவர்**



❤ *"வவாசான் பள்ளித் திட்டம் உருவாக்கப்படுவதால் தேசிய மாதிரி, சீன மற்றும் தமிழ்ப்பள்ளி களின் தனித்தன்மை பறிபோகாது என்று கல்வி அமைச்சர் அனித்துள்ள உறுதிமொழியை ஆசிரியர் பணியாளர் சங்கம் வரவேற்றுள்ளது. எனினும் வவாசான் பள்ளி முறை பற்றி எல்லா சமூகத் தலைவர்களுக்கும் அமைச்சு போதுமான விளக்கம் அளிக்க வேண்டும். பொறுப்பற்ற தரப்பினர் இந்தப் பள்ளி முறை பற்றி திரித்துக் கூறாமல் இருப்பதற்கு இந்த விளக்கம் அவசியம்"*

**சிவ. சுப்பிரமணியம்**
**ஆசிரியர் பணியாளர் சங்கத்தின் பொதுச் செயலர்**

❤ *"வவாசான்பள்ளித்திட்டம் மேற்கொள்ளப்படுவதன் மூலம் இந்நாட்டில் தமிழ் மற்றும் சீனப்பள்ளிகளை மூடுவதற்கு அரசாங்கம் திட்டமிடவில்லை. இத்திட்டத்தின் வாயிலாக தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்சனைக்கு ஒரு தீர்வை ஏற்படுத்தலாம். ஒரு பிரச்சனை உருவாகும்போது சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் வெளிப் படையாக விவாதிக்க முன்வந்தால் நாடு இன்னும் வளர்ச்சி அடையும்."*

*"தொலைநோக்குப் பள்ளிகளின் வரவினால் சீனம், மற்றும் தமிழை பயின்று மொழியாகக் கொண்டுள்ள ஆசிரியர்கள் தங்களின் மொழி அடையாளத்தை ஒருபோதும் இழந்துவிடக் கூடாது என்பதை நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம்."*

**அப்துல் அஜிஸ் சம்சுடீன்**
**துணைக் கல்வி அமைச்சர்**

# கிளிஞ்சல்கள்!



**கவிதைப் பித்தன்,**
பகாவ்.

*மனக்கரைகளில்
நுரை தட்டும்
ஏக்க அலைகள்!*

*ஈரக்காற்றுக்குள்
உலர்ந்து போன
ஆசை
ஆடைகள்!*

*கொந்தளிப்பில்
கதிகலங்கும்
ஓட்டைப் படகுகள்!*

*அவநம்பிக்கைகளுக்குத்
தோள் கொடுக்கும்
சோர்வுகள்!*

*சரிந்து போன
மணல் மேடுகளாய்
மனசு!*

*அலை
ஒதுக்கிய கிளிஞ்சில்களாக
கோரிக்கையற்ற
வேதனைகள்!*

*வரைபடங்களாக
புறக்கணிக்கப்பட்ட
தீவுகளால்...
தேகம்!*

*தனிமை
நடுக் கடலில்
துடுப்பிழந்த படகாக!*

*நகர்கிறது
இலக்கு இல்லாத
வாழ்க்கைப் பயணம்!*

*இன்றோ!
நாளையோ!
கவிழ்ந்து போகலாம்!*

*அப்பொழுது
நாமும்
வாழ்க்கைக் கரைகளில்
அலைகள் ஒதுக்கிய
கிளிஞ்சலாக!*

## தந்திரக்கணக்கு 9-ன் விடைகள்

**1.** விடை **1.** வேறு விடை கொடுத்திருந்தால் நீங்கள் தலைகீழாக நிற்க வேண்டும்!

**2.** மூன்று, நான்கு, பத்து. **1** முதல் **10** வரை உள்ள மற்ற எண்கள் உயிரெழுத்தில் ஆரம்பமாகின்றன.

**3. 36**

**4. 55.** மற்ற எண்களை கூட்டினால் **12** கிடைக்கும்.

**5. 511.** கடிகாரத்தில் உள்ள நேர் - எதிர் எண்களாகும்.



படிப்பகம்

www.padippakam.com




சினிமாவைப் பாமர மக்கள் எப்படிப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மையக் கருத்தாகக் கொண்ட "நீங்களும் ஹீரோதான்" என்கிற திரைப்படம்தான் வி. சேகரின் முதலாவது படம். அத்திரைப்படம் கதாநாயகர்களின் திரைக்குப் பின்னாலான வாழ்க்கையையும், சினிமாவின் அவலங்களையும் திரையில் சொல்லியது. அதிர்ந்து போன சினிமாக் கதாநாயகர்கள் அந்தத் திரைப்படத்தை தியேட்டரில் இருந்து வெளியேற்றத் தமது ரசிகர்களை ஏவி விட்டனர். படமும் தியேட்டரில் இருந்து சில தினங்களிலேயே தூக்கப்பட்டது.

இயக்குனர் சேகர் சோர்ந்து போய்விடவில்லை. "சராசரி மனிதனின் வாழ்க்கையே திருமணத்திற்குப் பின்புதான் அர்த்தமுள்ளதாக மாறுகிறது. தன் குடும்பத்திற்காக அவன் சிந்தும் இரத்தமும் வியர்வையும்தான் அவன் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றுகிறது. காரணம் நம் நாட்டில் 99% சதவிகித மக்கள் கீழ்த் தட்டு வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். அவர்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டவையே என் படங்கள்" - என்கிற கோட்பாட்டோடு குடும்பக் கதைகளை மையமாகக் கொண்ட படங்களை எடுக்க ஆரம்பித்தார். அத்தனை படங்களும் மக்களின் பேராதரவோடு வெற்றிப் படங்களாவும் அமைந்தன.

அந்த வரிசையில் சமீபத்தில் திரைக்கு வந்திருக்கும் படம் "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" படத்தின் தலைப்பே முழுக்க கதையையும் சொல்லி விடுகிறது. குஷ்பு, நாஸர், கரண், விஜயகுமார், விவேக், கோவை சரளா என்று ஒரு திரைக் கலைஞர் பட்டியல் நீண்டிருக்கிறபோதிலும் மனதில் நிற்கும்படியான ஒரே பாத்திரைப் படைப்பாக குஷ்புவின் பாத்திரம் அமைந்து விடுகிறது.

பெற்றோர்களை இழந்து விட்ட நிலையில் தனது தம்பிகளை வளர்க்க - படிப்பிக்க நினைக்கும் நாஸருக்கு உதவியாகக் குஷ்பு செய்யும் தியாகங்கள் உணர்த்தப் பட்டிருக்கும் காட்சிகள் இயல்பாக அமைந் திருந்தும் அழுத்தம் போதவில்லை. உருப் படாத அரசியல் வாதியாக வடிவேலுவும் அவர் மனைவியாக வரும் கோவை சரளாவும் வழங்கும் நகைச்சுவையில் நகை கொஞ்சம் மிகையாக இருந்தாலும் சுவை குறைவில்லை. ஆளாளுக்குக் கன்னத்தில் அறைகிறார்கள். தியேட்டரில் நம் கன்னத்தில் அறைவதைப் போல் இருக்கிறது.

தேனிசைத் திருடர் மன்னிக்கவும் தேனிசைத் தென்றல் தேவாவின் இசையில் வழக்கமான 'ஏக் தோ தீனுதான்' என்கிற கானாப் பாடலும் உண்டு. பாடல்கள் கேட்கும் ரகம்தான் எனினும் மீண்டும் மீண்டும் ஒரே வகையான மெட்டு அலுப்பையே தருகிறது. உச்சக்கட்டக் காட்சியில் கூட்டம் கூட்டமாக அடித்துக் கொள்வது மிகையான சினிமாத்தனமாக இருந்தாலும் படத்தின் தலைப்பை அது நிறைவு படுத்துகின்றது. படத்தில் நீதியும் நியாயமும் பேசுகின்றவராயும் பணக்காரராயும் தோன்றுகின்ற விஜயகுமார் தோளில் ஒரு சிவப்புத் துண்டைப் போட்டுக் கொண்டே காட்சிகளில் வலம் வருகின்றார். அது இயக்குனர் சார்ந்திருக்கும் அமைப்பையும் அவரது அரசியல் குறியீட்டையும் உணர்த்துகின்றதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்ட மிகையதார்த்தமில்லாத திரைப்படங்கள் எடுப்பது என்பது இன்று முள்ளில் நடப்பது மாதிரியான நிலையில் இருக்கையில் வி. சேகர் மட்டும் ஒரே கொள்கையுடன் திரைப்படத்தைக் கையாள முன்வந்திருப்பது பாராட்டுக் குரியது. "சினிமா மிகச் சிறந்த மக்கள் தொடர்புச் சாதனம்தான். ஆனால் அது நம் மக்களின் கையில் இல்லையே" என்று அன்று லெனின் வருந்தினார். இன்றும் அது தொடரத்தான் செய்கிறது என்கிற போதிலும் சேகர் போன்ற திரைக் கலைஞர்கள் இக்கலையை மக்களின் விழிப்புணர்ச்சிக்கும் நல்வாழ்வுக்கும் மட்டுமே பயன்படுத்துவார்கள் என்று நம்புவோம். ●



படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com




### அமெரிக்கா

"அதிபர் தேர்தலில் போட்டியிடும் நடப்புத் துணை அதிபர் அல்கோரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். புதிய நூற்றாண்டில் நமது நாட்டை வழிநடத்திச் செல்லும் அவருக்கு மட்டுமே உண்டு. 21ம் நூற்றாண்டிலும் அமெரிக்காவே உலகின் முதல் நிலை நாடாக இருக்க வேண்டும். இதற்குச் சரியான வழி மீண்டும் ஜனநாயகக் கட்சியைத் தேர்வு செய்வதாகும்" - மொண்ரோ நகர் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்
அதிபர் பில் கிளிண்டன்.

### கியூபா

கடந்த 40 ஆண்டுகளாக கியூபாவின் ஆட்சியாளரான பிடெல் காஸ்ட்ரோ தனது 74வது பிறந்த நாளைக் கொண்டாடினார். கியூபாவின் புரட்சிகர ஆட்சிக்காக 40 ஆண்டுகளுக்கு முன்பு தான் நடத்திய புரட்சியைத் தொடர்ந்து ஆதரிக்குமாறு கியூபா மக்களுக்கு அவர் தனது பிறந்தநாளில் வேண்டுகோள் விடுத்தார்.

### சீனா

கிழக்கு ஜெருசலத்தைத் தலைநகராகக் கொண்டு சுதந்தர பாலஸ்தீனம் மலர்வதற்குச் சீனா தனது முழுமையான பகிரங்கமான ஆதரவை வழங்குவதாக சீனத் தலைவர் அதிபர் ஜியாங் ஷெமின் சீனாவுக்கு வருகை புரிந்த யாசீர் அரபாத்திக்கு உறிதியளித்துள்ளார்.

### பாகிஸ்தான்

பாகிஸ்தான் அரசியல் சாசனம் ஒரு சிலருக்கு மட்டுமே சாதகமாக இருக்கின்றது. பணக்காரர்கள் இதனை நன்கு பயனபடுத்திக் கொள்கின்றனர். ஏழை எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். இந்நிலை விரைவில் மாற்றப்பட வேண்டும். பாகிஸ்தானின் தலைவிதியை நான் மாற்றிக்காட்டுகிறேன்". - பாகிஸ்தான் சுதந்திரதின உரையில் ஜெனரல் முஷாராப்.

### இந்தோனேசியா

முதுமையினாலும் நோயினாலும் பீடிக்கப்பட்டுள்ள 79 வயதான இந்தோனேசியாவின் முன்னாள் அதிபர் சுகார்த்தோ மே மாதத்தில் இருந்து வீட்டுக் காவலில் அடைக்கப்பட்டிருந்தார். தற்போது அதில் இருந்து அவர் விடுதலை செய்யப்பட்டிருந்தாலும் ஜாகாத்தா நகரை விட்டு வெளியேற அவருக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

### நியூசிலாந்து

"பிஜி நாட்டில் ஜனநாயகத்துக்கு மதிப்பு இல்லாமல் போய் விட்டது. பசுபிக் பிராந்தியம் முழுவதுமே ஜனநாயகத்துக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. 16 உறுப்பு நாடுகளைக் கொண்ட பசுபிக் அமைப்பு எனக்கு ஆதரவாகப் பேசவில்லை. பசுபிக் பிராந்தியத் தீவுகளான பீஜீ போன்ற தீவுகளில் ஜனநாயகத்துக்கு ஏற்படும் ஆபத்துகள் அதிகமாக இருக்கின்றன" நியூசிலாந்துக்கு வருகை தந்தபோது மகேந்திர சௌத்திரி ஆற்றிய உரை.



இந்தோனிசியாவின் எங்கானோ (Enggano)வில் ஏற்பட்ட நிலச்சரிவினால் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இறந்துபோக ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் வீடு வாசல்களை இழந்து அகதிகளானார்கள். அவர்கள் சுமத்திரா தீவின் பெங்குலு நகரத்துக்குள் நுழைந்துகொண்டிருக்கின்றார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

*பைன்ஸ்டேல் நகரத்திற்கு வடக்கில் ஒரு காட்டுத்தீ! உயரெழுந்த தீநாக்குகள் சில நூறு அடிகளுக்கும் மேலாய் ஆகாயத்தை நோக்கி எழுந்தது. பற்றி எரியும் மரங்களின் ஓலம் கேட்கிறதா?*



### ஜப்பான்

மின்னியல் கதிர்களில் இருந்து மனித உடலைப் பாதுகாக்க ஜப்பானில் புதிய ஆடை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. நாம் பரவலாகப் பயன்படுத்தும் REMOTE CONTROL (தொலை இயக்கி) சாதனத்தில் இருந்து வெளியாகும் கதிர்கள் நடமாடும் மனித உடல்களை ஊடுருவியே செல்கின்றன. இதனால் மனிதர்களுக்கு மார்பு சம்பந்தமான நோய்கள் வர வாய்ப்புக்கள் உள்ளன. இந்த வகை ஆடைகளை அணிந்து கொள்வதால் இத்தகைய கதிர்களினால் ஏற்படும் ஆபத்துக்களை தவிர்க்கலாம்.

### ஐ.நா

ஐக்கிய நாடுகளின் புத்தாயிரமாம் ஆண்டு விழாக் கொண்டாடப்படும் செப்டம்பர் 7ம் திகதியன்று தங்களின் உச்சநிலைக்கூட்டத்தை வைத்துக் கொள்வதென ஐ.நா. பாதுகாப்பு மன்றத்தில் உறுப்பியம் பெற்றுள்ள 15 நாடுகளின் அரசாங்கத் தலைவர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். 140 நாடுகளின் அரசுத் தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### லண்டன்

இங்கிலாந்தில் தற்போது பெண்கள் பல்வேறு துறைகளிலும் முன்னேறி வருகின்றனர். மாணவர்களில் ஆண்களைவிடப் பெண்கள் 10% கூடுதலாக உள்ளனர்.பல்கலைக்கழகத்தில்6% அதிகமாகவுள்ளனர். சமீபத்திய ஆய்வுகள் இவை.

### காஸா

பாலஸ்தீன தலைவர் யாசீர் அரபாத்துக்கும் இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பாராக்கிற்கும் இடையே நடைபெற்ற 15 நாள் சமரசப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது ஜெருசலத்தை ஆக்கிரமிக்கும் இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா நடந்துக் கொள்வது கண்டிக்கத்தக்கது. கிழக்கு ஜெருசலத்தைத் தலைநகராகக் கொண்டு சுதந்திர பாலஸ்தீனம் மலர்வதை ஆதரிக்கின்றோம், என அரபு நாடுகள் தெரிவித்துள்ளன.

### காபுல்

"தலிபான் ஆட்சியை எதிர்ப்பவர்கள் தங்களின் எதிர்ப்பைக் கைவிட்டு சரண் அடைய முன்வந்தால் பொது மன்னிப்பு வழங்கப்படும்" எனத் தலிபான் அமைப்பின் உச்சமன்றத் தலைவர் ருல்லா முகம்மது ஒமார் தெரிவித்துள்ளார்.

### லண்டன்

பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் மூத்த உறுப்பினரான முதலாவது எலிசபெத் ராணி தனது 100வது பிறந்தநாளைக் கோலாகலமாகக் கொண்டாடி னார். இங்கிலாந்தில் 100 வயதைக் கடந்த ஒரு அரசியார் என்ற பெருமை பெற்ற இவர், இரண்டு உலகப் போர்களின் போது பிரிட்டனின் அரசியாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### புதுடில்லி


"அழகைவிட மிகவும் முக்கியமானது கல்வி மற்றும் அறிவாற்றல். ஒரு ஆணைப் படிக்க வைத்தால் அது அவனை மட்டுமே உயர்த்துகின்றது. ஒரு பெண்ணைப் படிக்க வைத்தால் ஒரு தேசமே கல்வி அறிவு பெறும். வெறும் உடல் அழகை மட்டும் பார்த்துப் பட்டம் கொடுக்கும் காலம் மலையேறி விட்டது. உணர்வுபூர்வமாகவும் மனதளவிலும் உடலளவிலும் ஆரோக்கியமாக இருக்கும் தகுதியானவருக்கே தற்போது அழகிப் பட்டம் வழங்கப்படுகிறது

- உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட லாரா தத்தா.



படிப்பகம்

www.padippakam.com





# ஆரஞ்சு, சாக்லெட், ஸ்ட்ராபெரி

ஆகிய மூன்று சுவைகளில் தயாரிக்கப்படுகின்றது.

சகல சக்திகளும் ஒன்று திரண்ட ஊட்டச் சத்துள்ள உணவு.
உங்கள் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை உடல்நலத்துடன்
ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க உதவும் உணவு.

ஒரு தடவை சுவைத்துப் பாருங்கள். மாற்றத்தை நீங்கள் நிச்சயம் உணர்வீர்கள்.

**Johor Bahru**
**ESSENTIALLY YOURS**
**Bangunan MIC, Tingkat Lima,**
**No: 49, Jalan Segget, 80000 Johor Bahru.**
**Tel: 07-2249090**

**Kuala Lumpur**
**ESSENTIALLY YOURS**
**LOT; 1-20, 1st Floor,**
**Plaza City One, Jalan Munshi Abdullah,**
**50100 Kuala Lumpur.**
**Tel: 03-2945555**

| | |
|---|---|
| Melaka: *Mr. Venugopal* | 06-2822234 |
| Kluang: *Mr. Venugopal* | 07-7733234 |
| Kajang: Mr. Anthony | 012-3268170 |
| Kedah, Penang | 04-4410107 |


படிப்பகம்

www.padippakam.com




# தவறிய பாதை

வீரன் கிருஷ்ணன்
மெலேவார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

மணிவண்ணன் எப்போதும் போலவே தனது மகனைப் பள்ளியில் இறக்கி விட்டுச் சென்றான். மகனான குமார், தந்தை பள்ளியில் இறக்கி விட்டதும், வழக்கம் போலவே தன் சக நண்பர்களை நோக்கிச் சென்றான். அப்போது "இதோ குமாரும் வந்து விட்டான்" என்றான் குமாரின் நண்பனான ரவி. "குமார்; இன்னிக்கு ஒரே கடுப்புடா" என்றான் மற்றொருவனான சேகர். குமார் "என்னடா சொல்லற" என்றான். அதற்கு ரவி "குமார்; இன்னிக்கு யாரோ ஒரு போலிஸ் அதிகாரியின் கருத்தரங்கு இருக்குதாம். அதனால பள்ளி மண்டபத்தில் நாற்காலிகளை அடுக்க வேண்டுமென பள்ளி தலைமையாசிரியர் சொன்னார்" என்றான்.

அப்படினா என்ன செய்யலாம்" என்றான் குமார். உடனே குமார், "உங்க வீட்டுலதானே, யாரும் இருக்க மாட்டாங்களே" என்றான்.

குமாரின் தந்தை காலையில் வேலைக்கு சென்றால், இரவுதான் வீடு திரும்புவார். அதுமட்டு மல்லாது குமாரின் தாயோ, குமாருக்கு 2 வயது இருக்கும்போதே இறந்து விட்டாள்.

இந்தக் காரணத்தைப் பயன்படுத்தி மூவரும் பள்ளியிலிருந்து வழக்கமாக மட்டம் போட்டு, திருட்டுத் தனமாக வெளியே செல்லும் பாதை வழியாக வீட்டிற்குச் சென்றார்கள். கருத்தரங்கு ஆரம்பிப்பதற்கு முன்பாக ஆசிரியர் அந்தந்த வகுப்பைச் சார்ந்த அனைவரும் இருக்கிறார்களா என்று முத்துவைப் பார்த்துவரச் சொன்னார். முத்துவும் பார்த்துவிட்டு, "ஆசிரியரிடம் "ஐயா, வழக்கம் போலவே குமார், ரவி, சேகர் ஆகிய மூவரையும் காணவில்லை" என்றான்.

ஆசிரியரும், மூவரையும் பள்ளியில் தேடிப் பார்த்தார் காணவில்லை. மாணவர்களை விசாரிக்கும் போது பள்ளி வந்து, அதன் பின்புதான் சென்றிருக்கின்றார்கள் எனத் தெரியவந்தது. ஆசிரியரும் தலைமையாசிரியரிடம் நடந்தவற்றைக் கூறினார்.

மறுநாள் காலையில் மாணவர்கள் அனைவரும் பள்ளியின் மண்டபத்தில் ஒன்று கூடினார்கள். அப்போது தலைமையாசிரியர் அந்த மூவரையும் அழைத்து, நேற்றுக் கருத்தரங்கிற்கு மட்டம் போட்டதைக் கேட்டு விசாரித்து அதன் பிறகு அனைவரின் முன்னால் தண்டனையும் வழங்கினார். அவமானத்தில் கோபம்கொண்ட மூவரும், ஆசிரியரிடம் தகவல் சொன்னது முத்து என்பதை அறிந்து கொண்டார்கள். பள்ளி முடிந்து வீட்டிற்குத் திரும்பும்பொழுது அவனை மூவரும் சேர்ந்து மிரட்டினார்கள்.

அன்று மாலை வகுப்பு ஆசிரியர் குமாரின் தந்தையை பட்டணத்தில் பார்த்தபோது, குமாரின் நடவடிக்கைகளை பற்றிச் சொன்னார். ஆனால் குமாரின் தந்தையோ அதை நம்பவில்லை. தன் மகன் அப்படிப் பட்ட காரியங்களில் ஈடுபடமாட்டான் என்று உறுதியாக கூறிச் சென்றார்.

வீட்டிற்கு வந்தவுடன் குமாரின் தந்தை "குமார், இங்கே வாயேன், ஆமா நீ என்ன பள்ளியில் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக ஆசிரியர் சொன்னார்" என்றான்.

"உடனே குமார் "ஓ"! அதுவா...ப்பா. என்னுடைய நண்பர்கள் தா...ப்பா, அந்த மாதிரியான செயலில் ஈடுபட்டார்கள். அதனால என் பெயரும் பாதிக்கப்பட்டது. அதனாலேயே நா அவங்களிடம் நட்பு வைக்கிறதையே குறைத்துக் கொண்டேன்" என்றான்.

தந்தையோ மகனின் சொல்லை நம்பிச் சென்றார்.

பள்ளிக்கு வந்தவுடன் நண்பர்களிடம் ஆசிரியர் தகப்பனிடம் "நம்பளப் பற்றியெல்லாம் குறை குறையாக சொல்லியுள்ளார்" என்றான் குமார்.

இதைக் கேட்ட மற்றவர்களும் ஆசிரியரைப் பழிவாங்க வேண்டும் என்று எண்ணி, ஆசிரியரின் காரை பழுதாக்கி விடுகிறார்கள். அந்த சமயத்தில் அவ்வழியாக வந்த முத்து இவர்களின் செயலைப் பார்த்து விடுகிறான். பிறகு முத்து விரைவாகச் சென்று ஆசிரியரிடம் நடந்தவற்றை எல்லாம் சொன்னான். ஆசிரியர் மூவரையும் கையும் களவுமாகப் பிடித்து விடுகிறார்.

மூவரையும் பள்ளியிலிருந்து 3 வாரம் தடுத்து (Gantung Sekolah) வைத்திருந்தார்கள். மூவரின் பெற்றோர் களை பள்ளிக்கு வரச்சொல்லிக் கடிதம் கொடுத் தார்கள். ஆனால் மூவரும் தங்கள் பெற்றோர்களிடம் கொடுக்க வில்லை.

மூவரும் முத்துவின் மேல் அதிக கோபமாக இருந்தார்கள். வழக்கம் போல் குமாரின் தந்தை குமாரை காரில் ஏற்றி பள்ளிக்கு வந்தார். குமார், நான் புத்தகம் வாங்க வேண்டும் என்று கூறி இடையிலே இறங்கி விட்டான்.

மூவரும் பள்ளி முடியும் வரை முத்துவிற்காகக் காத்திருந்தார்கள். முத்து பள்ளி முடிந்து, வீடு திரும்பும்போது மூவரும் சேர்ந்து உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் அளவிற்கு அடித்துவிட்டுச் சென்றார்கள்.

மற்ற மாணவர்கள் கொடுத்த தகவலின்படி, ஆசிரியர் முத்துவை மருத்துவமனையில் சேர்த்தார்கள்.

அன்று மாலை குமாரின் வீட்டிற்கு போலீஸ்காரர்கள் வந்து, குமாரின் தந்தையிடம் நடந்ததை கூறி குமாரை கைது செய்து கூட்டிச் சென்றார்கள். இதைப் போன்று சேகரையும் ரவியையும் கைது செய்தார்கள். குமாரின் தந்தை தனது தவற்றை எண்ணி வேதனைப் பட்டார்.

இது ஒரு குமாரின் நிலையல்ல. பல குமார்களின் பிரச்சனை.


இது தொடரப்போகும் கதையா?


படிப்பகம்

www.padippakam.com

# தமிழும் வாழ்வும்

காப்பியன்



"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றார் புரட்சிக் கவி.

"பாடையிலே படுத்துறங்கும்போதும் பைந்தமிழில் அழும் ஓசை கேட்க வேண்டும்" என்றார் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்.

"தமிழுக்கு அமுதென்று பெயர். அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்றார் புதுவைக் கவிஞர்.

உண்மைதானே!

தமிழ்.... தமிழ்........... என்று உச்சரித்துப் பார்த்தோமானால் அமிழ்து....... அமிழ்து என்ற ஒலி நாவில் இருந்து பிறந்து கொண்டே இருக்கும்.

தமிழ்.... வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூவினம் கலந்து; இயல், இசை, நாடகம் என்ற மூவளம் கண்டு; காதல், வீரம், நீதி என்ற தமிழ் உணர்வுகளைத் தன்னகத்தே கொண்டு, காலம் வீறு கொண்டு போர்க்கோலம் கொண்டபோதெல்லாம், வாளோடு நின்று தன்வளம் காத்து, வீரம் விளைவித்த தமிழாகவும் விளங்கி வந்திருப்பது நம் தமிழ்.

## நம் தமிழின் தோற்றம்தான் என்ன?

எல்லா மொழிகளுக்கும் தோற்றம் என்ற ஒன்று இருக்கையில் தமிழ் மொழியின் தோற்றம் எப்படி இருந்தது?

மனிதர்கள் மொழியோடு தோன்றியவர்கள் இல்லை. சைகைகளாலும் அர்த்தமற்ற ஒலிகளாலும் தன்னைப் பரிமாறிக் கொண்ட ஒரு சமூகம். இதுதான் நம் ஆரம்ப சமூகம்.

ஒலிகளுக்கு அர்த்தம் கற்பித்து, அதைப் பேசி, பின் எழுத்துக்களாக்கி அதில் இலக்கியம் செய்து, பின் அதற்கான இலக்கணம் கண்டு, காலத்தால் அழியாத வளமிக்க மொழியாகத் தமிழை ஆக்கி இருக்கிறது என்றால், அதன் தோற்றம் எங்கே இருக்கின்றது?

இந்தக் கேள்வியோடு ஆய்வுக் கரங்கள் கடந்து போன காலச் சுவடுகளை நோக்கி நீண்டன.

ஆயினும், தாய்த் தமிழின் அடிச்சுவடுகளைத் தான் காணமுடிந்ததே அன்றி ஆரம்பச் சுவட்டைக் காண முடியவில்லை.

தேடிப் போன ஆய்வுக் கரங்கள் எல்லாம் கூடி நின்று ஒரு முடிவெடுத்தன.

"கல் தோன்றி, மண்தோன்றாக் காலத்து முன் தோன்றி மூத்த தமிழ்" ஆய்வு செய்தவர்கள் ஓய்ந்து போனார்கள். தேடி ஓடியவர்கள் வாடிப் போனார்கள். வரையின்றி வளர்ந்த தமிழின் வயதைக் கணிக்க யாராலும் முடியவில்லை.

எனவேதான் காலக் கணிப்பு இப்படி முடிந்தது. கி.மு. 300ஆம் ஆண்டளவில் தமிழில் தற்போது கிடைக்கும்



படிப்பகம்

www.padippakam.com

பழம்பெரும் இலக்கியமாகத் தொல்காப்பியம் தோன்றியது என்பது ஆய்வாளர் கூற்று.

தொல்காப்பியர் கருத்துப்படி அகத்தியம் என்றொரு தாய் இலக்கணம் தமிழுக்கு இருந்திருக்கின்றது. அதை எழுதியவர் அகத்தியர் என்பது வரலாற்றுக் குறிப்பு.

இலக்கணம் என்பது இலக்கியத் தோற்றத்திற்குப் பின்புதான் ஏற்படுவது என்பது வரலாற்று நியதி. அப்படியானால் அகத்தியத்துக்கு முன் எழுத்து வளர்ச்சி.... அதற்கு முன் பேச்சு வளர்ச்சி... இப்படி வாழ்ந்துகொண்டு போகையில், கல் தோன்றிய காலம் வந்து விட, தமிழின் தோற்றம் பற்றிய ஆய்வு இந்த அளவோடு நின்று விட்டது.

## சங்ககாலம்

சங்கம் வைத்துத் தமிழ்வளர்த்த பண்புமிக்கதோர் சமூகத்தின் அற்புதமான காலகட்டம் இது!

விண்ணோடும் முகிலோடும் மலையோடும் நதியோடும் அன்னைத் தமிழ் சங்கமித்துப் போயிருந்த தங்கநிகர்க்காலம் இக்காலம்.

திசைகளின் எல்லைகளைத் தெரிந்திருக்காத அந்தக்கால கட்டத்தில், "கணியன் பூங்குன்றன்" என்ற ஓர் அரச கவிஞன் அற்புதமாய் ஒரு பொதுமைக் கருத்தைச் சொன்னான். "யாதும் ஊரே!" - யாவரும் கேளிர்!" எல்லாம் எமது ஊர், எல்லோரும் நமது உறவினர்.

நமக்கு மண்ணிலும் எல்லைகள் இல்லை. மனதிலும் எல்லைகள் இல்லை என்று ஆழமாகச் சொல்லி இருந்தான்.

கடல் கடந்த தேசமெல்லாம் இருக்கும் கண்டமெல்லாம் கண்டறிந்த பின்பா அவன் அப்படிச் சொன்னான்?

இல்லை. அது அந்தக் கவிஞனின் தீர்க்க தரிசனப் பார்வை.

இன்று உலகத்தில் தமிழன் இல்லாத நாடு இல்லை. உலகின் பல்வேறு நாடுகளின் பல்லினக் கலாச்சாரச் சூழல்களில் கணியன் பூங்குன்றன் வாக்குப்படி தமிழ்ச் சமூகம் வாழப் பழகிக் கொண்டிருக்கிறது.

அந்தக் கவிஞன் இன்றிருந்தால் இதைக் கண்டு புளகாங்கிதம் அடைந்திருப்பான்.

ஆனால்.... அன்னைத் தமிழ் அந்தச் சூழலில் தளர்ந்து போகப் போகின்றாள் என்கிற உண்மை இக் கவிஞனுக்கு அன்று தெரியாமல் போய் விட்டது.

இப்படி எழுதுவது எல்லாம் தமிழின் பெருமைகள் அல்ல! அப்படிக் கருதுவது சிற்றெறும்புகள் சிறுதுகள் சுமந்து இமயத்தை உயர்த்த எடுக்கும் முயற்சிக்கு இது சமமாகும்.

தாம் பெற்ற நிறைவில் மிகச் சிறு குறையேதும் அற்ற பெருமை கொண்டது நம் தமிழ். இந்த எழுத்துக்களின் நோக்கம், உலகளாவில் வாழும் அழகு தமிழ் மாந்தர்களுக்கு, தூசு படிந்திருக்கும் அவர்களது தாய் வீட்டு நிறைகளைத் தூசு தட்ட உதவுமா என்பதே!

அவர்களுக்குள்ளே முடங்கிக் கொண்டிருக்கும் கலாச்சார உணர்வுகளுக்குப் புத்துணர்ச்சி ஏற்படுத்த முடியுமா என்பதே!

நம் முன்னோர்கள் வசதியைத் தேடி இங்கே வரவில்லை! வாழ்க்கையைத் தேடிவந்தவர்கள். நிர்ப்பந்தங்களாய் துரத்தப்பட்டவர்கள்.

தமிழர்கள் இன்று உலகமெங்கும் உடைந்த தேங்காய் துண்டுகள் போல் தேசமெங்கும் சிதறிப்போய் இருக்கிறார்கள்.

இப்படி அவர்கள் கொண்டு வந்தது என்ன? கற்றறிந்த தாய்மொழியையும், கவின் பெட்டகமான கலாச்சாரத்தையும் தவிர.

நாம் இங்கு 'ஆல்' போல் தழைத்து வாழலாம். ஆனால் நம் ஆணிவேர் நம்மொழியாகிய தமிழ் மொழியில்தான் இருக்கிறது.

உடலுக்குத் தலை சுமை எனக் கழுத்து ஒருபோதும் கவலைப்பட்டதில்லை!

பெண்ணுக்குக் கரு சுமையென கர்ப்பம் எப்போதும் ஏற்க மறுத்ததில்லை!

மலருக்கு மகரந்தம் சுமையென மரம் எப்போதும் பூக்க மறுத்ததில்லை!

ஆனால்.... மனிதர்கள் நாம் மட்டும் இவற்றைச் சுமை என எண்ணி இறக்கிவிட இடம் தேடும் செயல்தான் நெஞ்சை நெருடுகிறது.

இன்று மொரிசீயஸ் தீவிலும், பிஜித் தீவிலும் தென்னாப்பிரிக்கா, கயானா நாட்டிலும் வாழும் இந்தியர்களின் 'திரிசங்கு' நிலை நாம் நோக்க வேண்டியதொன்றாகும்.

அவர்கள் தம் தாய்மொழியையும் மறந்து, மற்ற வேற்று மொழியாலும் அங்கீகரிப்பப்படாத நிலையில் தமக்கென உண்டான தனித்தன்மைகளை உணர்ந்து, தம்மைத் தாமே அடையாளப்படுத்த முடியாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலை நமது சந்ததியினருக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்கிற எச்சரிக்கை உணர்வு நமக்குத் தேவை.

பல்லின கலாச்சாரத்தினுள் நம்மை அடையாளப்படுத்த நம்மிடம் இருக்கும் ஒரே சாதனம் மொழியும் கலாச்சாரமுமே! அதையும் நாம் தவறவிட்டு விட்டால், நாளை வேற்றின மக்கள் நம்மை எப்படி அடையாளப்படுத்தப் போகிறார்கள்?

மொழியையும் கலாச்சாரத்தையும் மறந்து விடப்போகும் நம் சந்ததியினருக்கு ஏற்படப்போகும் பின் விளைவுகளை இவர்கள் எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள்?

தமிழ் மொழி, கலாச்சாரம், பண்பாடு என்கிற வகையிலான ஓர் ஐக்கிய ஒருமைப்பாடே அவர்களுக்காகக் குரல் கொடுக்கும் ஒரு சக்தியாக இருக்க முடியும். நம் முன்னோர்கள் நமக்காக இங்கு கொண்டு வந்தது அவற்றைத்தான்.

நம் பிற்காலச் சந்ததியினருக்காக நாம் விட்டுச் செல்வது இவையாகவே இருக்கட்டும்.

நாளை அவர்களுக்காக நாம் சேர்த்து வைக்கப்போகும் பொருட்களைவிட அவர்களை வளர்த்து வைத்த விதமே, பிற்கால சமூகத் தலைநிமிர்வதற்கு உறுதுணையாக இருக்கும்.

நாம் சிந்திப்போம்! செய்வோம்!

பயனை அடுத்த தலைமுறை அனுபவிக்கட்டும்!



படிப்பகம்

# உனக்கேதுக்கடி தங்கமே?

**பட்டிக்காட்டுப் பெண்,**
**பெட்டாலிங் ஜெயா.**

பூமிக்கு அடியில் தோண்டியெடுக்கப்படும் உயிரற்ற உணர்வற்ற உலோகத்துக்கு இணையாகப் பெண்கள் வர்ணிக்கப்படுகின்றார்கள்.

பெண்களின் தரத்தையும் தராதரத்தையும் அவர்கள் அணிந்திருக்கும் அல்லது வைத்திருக்கும் தங்கத்தின் அளவைப் பார்த்து உரசிப் பார்க்கின்றது இந்தச் சமூகம்.

இப்படிச் செய்கிற - செய்யப்படுகிற இந்தப் பண்பாடு மிகவும் மோசமானது. இதைக் காணுகின்ற என்போன்ற பெண்களின் மனம் வெட்கப்பட்டுக் கூனிக் குறுகுகின்றது.

பெண்கள் தங்கள் அழகுக்கு அணிகலனாகப் பொன்னை அணிவதாகச் சொல்கிறார்கள். அதுவு மல்லாமல் சிறுகுன்றுமணி அளவு பொன்னாவது ஒரு பெண் அணிந்திருந்தால்தான் பெண்ணுக்குச் சிறப்பு என்றும் கூறிக் கொள்கிறார்கள்.



தங்கம் தங்களுக்கு ஒரு பெரும் கௌரவத்தையும் அந்தஸ்தையும் பெற்றுத் தருவதாகவும் நம்புகின்றார்கள். இது ஓர் அர்த்தமற்ற மூட நம்பிக்கையாகும்.

திருமணச் சடங்குகளில் பெண்கள் தங்களால் சுமக்க முடியாத அளவுக்குத் தங்கம் என்ற உலோகத்தைச் சுமந்து வருகிறார்கள். மணப் பெண்ணின் தங்க அலங்காரம் சொல்ல வேண்டியதில்லை. தன்னிடம் எவ்வளவு தங்கச் சொத்து இருக்கின்றது என்று காண்பித்துப் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள்.

"புன்னகையை மறைத்துப் பொன் நகையைக் காட்டினால் உனக்கேதடி அழகு?" என்று கேட்கத் தோன்றுகிறது. இதைப் பெண்கள் இன்னும் உணராமல் இருப்பது விந்தையாகவும் விநோதமாகவும் உள்ளது.

ஒரு திருமணம் என்றால் நகைகள் இல்லாதவர்கள்கூட அக்கம்பக்கத்தில் இரவல் வாங்கியாவது அணிந்து கொண்டு பகட்டுக் காட்டுகின்றார்கள். இது போலித்தனம் மட்டுமல்ல



படிப்பகம்

தங்களிடம் இல்லாததை மறைக்கும் ஒரு வித மனநோய் என இதைக் குறிப்பிடலாம்.

மற்றவர்கள் முன்னிலையில் தன்னை ஒரு கௌரவமிக்கவராகக் காட்டுவதற்குப் பெண்ணின் அறிவும், தன்னுணர்ச்சியுமே முக்கிய காரணமாகக் கொள்ளாமல் தங்கத்தை முன்னிலைப்படுத்துவது அவர்களை மேலும் அடிமைவாழ்விற்கு இட்டுச் செல்லும் இழிவுநிலை என்பதைப் பெண்கள் உணர வேண்டும்.

பெண்கள் தங்களை முன்னிலைப்படுத்தப் பயன்படும் அளவுகோல் இத்தனை இழிவாக இருக்க வேண்டுமா?

இன்றும்கூட புதிதாக ஒரு நகையைப் பெண் ஒருவர் வாங்கி விட்டால் அதை வீடு வீடாக ஏறி இறங்கிக் காட்டிப் பெருமை பேசும் பழக்கம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. இது இன்னும் மாறவே இல்லை.

இன்று பொருளாதார வசதியற்ற பெண்களின் இலக்குக்கூடத் தங்கம்தான். தங்களது மூக்கு, காது, கைவிரல்களைத் தங்கத்தால் நிரப்பிக் கொண்டால்தான் அது தன் கல்யாணத்திற்கு உத்தரவாதம் தரும் என்று அந்த ஏழைப் பெண் கருதிக் கொண்டிருக்கிறாள்.

இன்றைய பெண்களின் வாழ்வும் வளர்ச்சியும் தங்கத்தின் பிடியில் சிக்கியிருக்கின்றது. இவர்களின் உழைப்பும் உதிரமும் சீனனின் காலடியில் சிக்கியிருப்பதை என்று இவர்கள் உணரக்கூடும்...?

பெண்ணடிமைத்தனத்தின் முக்கிய காரணங்களில் ஒன்று இந்தத் தங்க நகை. இதை ஒவ்வொரு பெண்ணும் உணர வேண்டிய காலகட்டம் இது!

ஒரு குடும்பத்தில் பெண் குழந்தை பிறந்து விட்டால் ஒவ்வொரு பெற்றோரின் நினைவிலும் ஓடுவது தங்கம்தான். இவளுக்குத் தங்க நகைகளை இப்போதில் இருந்தே சேகரிக்க வேண்டும் என்கிற எண்ணம் அவர்கள் உள்ளத்தில் எழுந்து விடுகிறது. அப்போதுதான் அவளுக்கான நல்ல வாழ்க்கைத் துணையை ஏற்படுத்தித் தரமுடியும் என்று நம்புகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் ஆண் குழந்தை பிறந்தால் வரவு என்றும் பெண் குழந்தை பிறந்தால் செலவு என்றும் நடைமுறை வாழ்வில் பேசுவதைக் கேட்க முடிகிறது. பெண் குழந்தை பெற்றோரின் செலவுக்கென்றே பிறந்த சுமையாகவே இன்றுவரை கருதப்படுகின்ற கொடுமை நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றது.

கருவில் பெண் குழந்தை என்று தெரிந்து கொண்டால் கருக்கலைப்புச் செய்து கொள்வதும், பெண் குழந்தை பிறந்து விட்டால் 'பொட்டப் புள்ளையா?' என்று ஏளனம் பேசுவதையும் இன்னும் தொடரத்தான் செய்கின்றனர்.

பெண்களாகிய நம்மை வெட்கம்கெட்ட மானிடப் பிறவியாகத்தான் இன்னும் கருதிக் கொண்டிருக்கிறார்கள். நாம் இன்னும் பொது நிகழ்ச்சி மேடைகளில் அலங்காரப் பதுமைகளாகத்தான் நிறுத்தப்பட்டு வருகிறோம்.

பார்வையாளர்களின் கண்குளிர்மைக்காக ஆடை அணிகலன்கள் பூண்டு மேடையில் நாம் நிற்க வேண்டியிருக்கின்றது.

மேடைகளில் நம் பணி என்ன?

தட்டுக்களை ஏந்திவர,
தலைவர்கள் நடந்துவரும் பாதைகளில் மலர்கள் தூவ,
வருகையாளர்கள் சட்டைப் பொத்தான்களில் மலர்க்கொத்தைச் சூட,
மொத்தத்தில் எடுபிடியாக,

இப்படியாகத்தானே பொதுநிகழ்ச்சி மேடைகளில் நாம் நடத்தப்படுகின்றோம்!

இந்தப் போக்கை நாம் வன்மையாகக் கண்டிக்க வேண்டும். இதற்குத் தங்க நகைகள் ஒரு காரணமாக இருக்குமானால் அதை நாம் ஒழிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு பெண்ணிடம் எத்தனை கிலோ தங்க நகை இருக்கிறது என்பதைக் கணக்கெடுப்பதை விட்டு விட்டு அவளிடம் உள்ள அன்பும் அறிவும் எத்தகையது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பெண்களாகிய நமக்குச் சிந்தனைப் புரட்சி தேவை. அதற்கு நமக்குப் பொது அறிவும் அடிப்படைக் கல்வியுமே தேவை. நம்மை அடக்கி ஆளும் ஆணாதிக்கப் பண்பாட்டில் இருந்து வெளியேறச் சீரிய சிந்தனை தேவை.

பெண்களே! பகுத்தறிவைப் புகட்டிய தந்தை பெரியாரை நினைவில் கொள்ளுங்கள்!

அச்சமில்லை! அச்சமில்லை! என்று அறைந்து கூவிய கவிபாரதியை நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள்!

புரட்சிக் கவிஞன் பாரதிதாசனின் பாடல்களை உள்வாங்கிக் கொள்ளுங்கள்!

புலியை முறத்தால் அடித்து விரட்டிய அந்தப் புறநானூற்றுப் பெண்களின் வழித் தோன்றல்களாய் இன்றைய ஈழப் பெண்கள் தன் உயிர் கருதாது நாடும் மக்களும் உரிமை பெறப் போராடும் அந்தப் பெண்களின் தியாகங்களை நினைவில் கொள்ளுங்கள்.

நமக்கு வேண்டியதெல்லாம் சிந்தனைப் புரட்சிதான். நாம் இழக்க வேண்டியது உரிமைகளையல்ல, தங்க நகைகளையும் போலிக் கௌரவங்களையும் மட்டும்தான்.

இழந்து விட்ட நமது மதிப்பை நாம் மீட்டுக் கொள்ள வேண்டுமானால் நாம் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அலுமாரிகளில் நகைகளாய் பூட்டி வைப்பதை விடுத்து அறிவு நூல்களை நம் மூளையில் திணிக்க வேண்டும்.

அடிப்படையிலும் நடைமுறையிலும் ஆரோக்கியம் இல்லாத தங்க நகை மோகத்தை விரட்டியடிக்கும் உறுதி நமக்கு வர வேண்டும்.

தங்க நகைகளைப் புறக்கணிக்கும் மன உறுதி நம்மிடையே வளர வேண்டும். தங்கம் ஒரு போதும் நம்மை மேன்மைப்படுத்தாது. அறிவும் பண்புமே நம் அடையாளமாகத் திகழ வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com





# சினிமா ஓர் அற்புதமொழி

எம். சிவகுமார்

சில திரைப்படங்களை காலத்தை வென்று நிற்கும்படங்கள் என்று சொல்வர். உண்மையில் சினிமா காலத்தை வென்று நிற்க முடியுமா? நூறு ஆண்டுகள்தான் கழிந்துள்ளன. அதற்குள் மற்றக்கலைகளோடு ஒப்பிடுகையில் சினிமா வெகு இலகுவாய் அழியக்கூடியதாய் உள்ளது. துவக்கத்தில் திரைப்பட சுருள்கள் வெகு சுலபமாய் தீப்பிடித்துக் கொள்ளக் கூடியதாய் இருந்தது. பல படப் பிரதிகள் ஒரு சில பத்தாண்டுகளுக்குள்ளாகவே மங்கி சிதைந்து விடக் கூடியதாய் இருந்தன.

வீடியோ டேப்புகளும் அதேபோல்தான். இந்தியா போன்ற வெப்ப நாடுகளில், குறிப்பாக ஈரப்பதம் அதிகம் உள்ள இடங்களில் வீடியோ டேப்புகள் நான்கைந்து ஆண்டுகளுக் குள்ளாகவே பூஞ்சைக்காளான் பூத்து உபயோகிக்க முடியாமல் போய் விடுகிறது. படப் பிரதிகளையும் வீடியோ டேப்புகளையும் ஒரு சில ஆண்டுகளுக்கு மேல் பாதுகாக்க முடியாது என்பதுதான் நிலைமை. எனவே எப்படிச் சில படங்களை சாகாவரம் பெற்ற படங்கள் என்றழைக்க முடியும். ஆனால் இப்போது புதியவகை நெகட்டிவ் படச்சுருள்களை பல நூற்றாண்டுகள் பாதுகாக்க முடியும் என்று சொல்கின்றனர். அதே போல் வீடியோ டேப்புகளுக்கு பதிலாக, டிஜிட்டல் டிஸ்க்குகள் வந்து விட்டன. அவற்றையும் நீண்டகாலம் பாதுகாக்க முடியும் என்று சொல்லப்படுகிறது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் சினிமாவை தொழில் முறையாக உள்ள ஒரு சிலர்தான் கையாண்டனர். ஆனால் இன்று நிலைமை வேறு. லட்சக்கணக்கானவர்கள் படம் எடுக்கிறார்கள். அல்லது படம் எடுப்பதாக சொல்லிக் கொள்கிறார்கள். பயிற்சி பெற்றவர்கள், பெறாதவர்கள், சினிமாவை அறிந்தவர்கள் அறியாதவர்கள், தொழில் ரீதியானவர்கள், கத்துக்குட்டிகள் என்று எல்லோருமே படம் எடுக்கிறார்கள். வீடியோ கேமராவின் வருகைக்கு பின் இந்நிலைமை இன்னும் மோசமாகி விட்டது. குழந்தை பொம்மையைக் கையாள்வதைப்போல் வீடியோ கேமரா இன்று கையாளப்படுகிறது. திருமணம், பிறந்தநாள் என்று எல்லாமே வீடியோ படமெடுக்கப்படுகிறது. சமீபத்தில் இலங்கை தமிழர்களின் நாடகம் ஒன்றைப் பார்த்தேன். அதில் இலங்கை கிராமம் ஒன்றில்இறந்து போகும் தந்தையின் உடலை பார்க்க வெளிநாடுகளிலிருக்கும் மகன்களும், மகள்களும் வர முடியாததால் அவரின் இறந்த உடலையும், அடக்கத்தையும் வீடியோ எடுத்து, அதை மகன்களுக்கும் மகள்களுக்கும் அனுப்பி விடலாம் என ஊரிலுள்ள உறவுக்காரர்கள் முடிவு செய்கின்றனர். இன்று சினிமா, வீடியோவின் உபயோகம் இந்த அளவுக்கு ஆகி விட்டது.சினிமா தியேட்டர்களோடு நின்று விடவில்லை. டெலிவிஷன் பெட்டி களோடு நின்று விடவில்லை. இவற்றிற்கு வெளியேயும் சினிமா இன்று நிலவுகிறது. நம் தினசரி வாழ்க்கையில் சினிமா ஒரு பாகமாகி விட்டது. நம் பழக்க வழக்கங்களில், உடை அணிவதில் எல்லாவற்றிலும் அது வெளிப்படுகிறது. பத்திரிகைகளில் வரையப்படும் படங்களில் சினிமாவைப் பார்க்கிறோம். எழுதப்படும் கதைகளில் சினிமாவை பார்க்கிறோம்.

கேமராக் கண்கொண்டு பார்ப்பது, நம் இயற்கைக் கண்கொண்டு பார்ப்பதுபோல் ஆகாது. நம் கண்கள் ஒரு பொருளிலிருந்து இன்னொரு பொருளுக்குத் திரும்பும் பொழுது இடையில் தேவையில்லாததை ஒதுக்கி விடுகிறது. கேமரா அப்படிக் கிடையாது. ஒரு பொருளிலிருந்து இன்னொரு பொருளுக்குத் நகரும்பொழுது இடையில் உள்ளவற்றையும் அது படம் பிடிக்கும். அதனால் ஒரு படத்தில் படம்பிடிக்கப்பட்ட எல்லாவற்றையுமே நம் கண்கள் பார்ப்ப தில்லை. அதே நேரத்தில் படம் பிடிக்கத் தவறிய வற்றையும் நம் கண்கள் பார்க்கிறது.

பத்தொன்பதம் நூற்றாண்டில் தொழிற்புரட்சி தொடங்கியது. அப்போது கலை இலக்கியப் படைப்புகளின் பிரதிகள் உற்பத்தி பெருமளவில் பெருகியது. புத்தகங்கள், அச்சிடப்பட்ட ஓவியங்கள், இசைத்தட்டுகள், சிற்பப் பொம்மைகள் போன்றவை பெருமளவில் உற்பத்தி செய்யப் பட்டன. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் சினிமா தோன்றியது. 35மிமீ. 16 மிமீ. பின்னர் டெலிவிஷன், வீடியோ என்று ஒரே படத்தையே பல வடிவங்களில் பார்க்க முடிந்தது. பெரிய திரை, சின்னத்திரை என்பதுபோல், சில இயக்குநர்கள் டெலிவிஷனை சிறிய அளவிலான சினிமா என்று கருதினர். ஆனால் டெலிவிஷன் அவ்வாறு விளங்கவில்லை. பெரிய திரைக்காகத் தயாரிக்கப்பட்ட படங்களை டெலிவிஷனின் சிறிய திரையில் பார்க்கும்போது அவை நசுக்கப்பட்டு, முடக்கப் பட்டு பல நேரங்களில் களையிழந்து காணப்பட்டன. டெலிவிஷனுக்காக மட்டும் எடுக்கப்படும் படங்கள் வேகமாகவும், சினிமா அளவுக்குக் கவனம் செலுத்தப்படாமலும் எடுக்கப்படுகின்றன. நீண்ட தொடர்கள் என்றால் சொல்லவே வேண்டாம். சாதாரண பார்வையாளன்கூட அதன் குறைகளை இனங்காண முடியும். அதே நேரத்தில் டெலிவிஷனுக்காக மட்டுமே எடுக்கப்பட்ட சில படங்களும், சில தொடர்களும் மிகச் சிறப்பாக இருந்தன என்பதையும் மறுக்க முடியாது.

சினிமாவுக்கு இன்னொரு விஷேச சக்தி உண்டு. அது உயிரற்ற பொருள்களுக்குகூட உயிரைக் கொடுக்கக்கூடிய சக்தி, பல படங்களில் முக்கிய திருப்பங் களில் டெலிபோனை உயிருள்ள பொருள் போல பல இயக்குநர்கள் பயன்படுத்தியுள்ளனர். எத்தனையோ படங் களில், ஒரு பெண்ணைப் பலாத்காரம் செய்ய ஆயத்தம் ஆகும் வகையில் ஒரு ஆண் கதாபத்திரம் பேசிக் கொண்டிருக்கும். அப்போது அந்த பெண் மெதுவாக, பின்னுக்கு நகர்ந்து ஒரு மேஜை அறையை திறப்பாள். அதில் ஒரு கத்தியோ துப்பாக்கியோ இருக்கும். அதற்கு பின் அந்த இருவர் பேசுவதை காட்டிவிட்டு மீண்டும் அந்த கத்தியையோ



படிப்பகம்

www.padippakam.com

சென்னையில் 'பிலிம்' சொசைட்டி'யை நிறுவியர்களில் ஒருவரான எம். சிவகுமார் திரைப்படக் கல்லூரியில் பட்டம் பெற்றவர். சினிமா மீதான அவரது ஆழமான காதல் பல கட்டுரைகளில் வெளிப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று இது!

சினிமா பார்ப்பதில் நான்காவது தலைமுறையினர் நாம். இப்போது சினிமா நமக்கு நன்கு பழகி விட்டது. நம் கலாச்சாரப் பதிவின் ஆழத்துக்குச் சினிமா சென்று விட்டது. நம் பழக்கவழக்கங்களை அது வெளிப்படுத்துகின்றது. சினிமா ஒளியாய், ஒலியாய் பிம்பங்களாய், சப்தங்களாய் இருபத்து நான்கு மணி நேரமும் நம்மைச் சுற்றி ஆறுபோல் ஓடுகின்றது. அதில் சுலபமாக நாம் நீந்துகின்றோம். ஆனாலும் பல நேரங்களில், இந்த ஆற்றில் அழுக்கும் அவலமும் நம்மை மூச்சு முட்ட வைக்கிறது என்பதைப் புலப்படுத்துகிறார் கட்டுரையாளர். (ஆர்)

துப்பாக்கியையோ காண்பிக்கும்பொழுது, அது உயிரற்ற ஜடப் பொருளாகத் தெரியாது. மாறாக அடுத்து நிகழப்போகும் அந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான போராட்டத்தில் அந்த கத்தி அல்லது துப்பாக்கி என்ன பங்கு வகிக்கப்போகிறது என்று எதிர்பார்ப்போம்.

சினிமா இருபதாம் நூற்றாண்டில் மட்டுமே தோன்றியிருக்கக்கூடிய ஒரு கலை. வரலாறு தொடங்கியது முதல் எத்தனையோ கலைகள் உருவாகி வளர்ச்சி பெற்றுள்ளன. இந்தக் கலைகளின் வளர்ச்சி இறுதியாக ஒரு புள்ளியில் முடிந்தது. அந்தப் புள்ளிதான் சினிமா என்று சிலர் சொல்கின்றனர். நூறாண்டுகளுக்கு முன்புவரை, சினிமா என்ற கலை இல்லாமல்தான் மக்கள் வாழ்ந்திருக்கின்றனர் என நினைக்கும்போது, அது அதிசயமாகத்தான் தோன்றுகிறது. அந்த மக்கள் மீது பரிதாபம்கூட தோன்றுகிறது. ஆனால் சினிமா, குறிப்பாகக் கலை என்கிற அடிப்படையில் ஒரு நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. மற்ற எந்தக் கலைகளும் இதுபோல் ஒரு நெருக்கடியைச் சந்தித்ததில்லை.

சினிமா தியேட்டர்களும் ரசிகர்களைத் தக்கவைத்துக் கொள்ள தங்களால் முடிந்த அளவு போராடுகின்றன. மிகச் சிறந்த ப்ரொஜக்டர்கள், டால்பி ஸ்டீரியோ ஒலி அமைப்பு என்று தொழில் நுட்பங்கள் மூலம் ரசிகர்களை இழுக்கப் பார்க்கின்றன. ஆனாலும் இது எந்த அளவுக்கு வெற்றிபெறும் என்று சொல்ல முடியாது. ஐரோப்பிய நாடுகளில், குறிப்பாக அவர்கள் நாட்டுப் படங்களைத் தியேட்டரில் பார்க்கப் பார்வையாளர்களை கவர்ந்திழுக்க பல விசேஷ அமைப்புகளே ஏற்பட்டுள்ளன.

தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் தொழில்நுட்ப வளர்ச்சி, எங்கு போய் நிற்கும் என்று தெரியவில்லை. கம்ப்யூட்டரிலும், இண்டர்நெட்டிலும் சினிமா பார்க்க முடியும் என்றாகிவிட்டது. எல்லாவகைப் படங்களும் காம்பாக்ட் டிஸ்க்கில் வந்து விடும்.

அப்படங்களை விருப்பப்படும்பொழுது பார்க்கலாம் என்பது மட்டுமல்ல; விருப்பப்படும் பகுதிகளை மட்டும் பார்க்கலாம். ஒரு குறிப்பிட்ட நடிகரின் படங்களிலிருந்து பாடல் காட்சிகளை மட்டும் பார்க்க வேண்டுமா? அல்லது குறிப்பிட்ட இயக்குநரின் படங்களில் இருந்து நீங்கள் விரும்புகின்ற காட்சிகளை மட்டும் பார்க்கலாம். இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒரு திட்டம் கம்ப்யூட்டரில் வந்து விடும். இதற்கும் ஒரு படி மேலே போய், நாம் பார்த்துக் கொண்டிருக்கும் படங்களின் காட்சிகளை நாம் நினைத்தபடி மாற்றியமைக்கவும் கம்ப்யூட்டர்கள் வழிவகை செய்கின்றன.

ஒரு காட்சியில் உங்களுக்கு பிடித்த நடிகைக்கு பதிலாக வேறொரு நடிகை இருக்கலாம். உடனே கம்ப்யூட்டர் துணை கொண்டு அந்நடிகையை தூக்கியெறிந்துவிட்டு உங்களுக்கு பிடித்த நடிகையை அங்கு கொண்டு வரலாம். அதற்கும் மேலாய், வெர்ச்சுவல் ரியாலிட்டி எனும் தொழில் நுட்பம் மூலம் அந்த காட்சிகளில் நாமும் பங்கு பெறலாம்.

அந்த நடிகர் நடிகைகளோடு நாமும் உறவாடலாம். இதுபோன்ற நிகழ்ச்சிகள் இன்னும் ஒரு சில ஆண்டுகளுக்குள் சர்வசாதாரணமாக எல்லா வீடுகளிலும் நிகழச் சாத்தியமுண்டு. அப்போது சினிமா மக்கள் மயங்கிய ஒரு மாபெரும் கலை என்பது போய், ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட ஒரு நுகர்பொருளாய் மாறக்கூடிய அபாயம் உண்டு. இவற்றை நாம் சினிமா என்று அழைக்க முடியுமா? சினிமா என்பதற்கு அர்த்தம்தான் என்ன. ஒவ்வொரு மொழிகளிலும் ஒவ்வொரு அர்த்தம் உள்ளது.

வரலாற்று ரீதியாகவும் சினிமாவை யோசிக்க முடியவில்லை. அதன் வயது வெறும் நூறுதான் இந்த நூறு ஆண்டுகளில் ஒன்று மட்டும் தெரிகிறது. சினிமாவின் சக்தி எல்லையற்றதல்ல. தற்போது சினிமாவின் சக்தி அதிகரித்துக் கொண்டு போவதற்கு பதிலாக, சுருங்கிக் கொண்டு வருகிறது. அதீத தொழில்நுட்ப வளர்ச்சி சினிமா என்ற கலையின் சக்தியை வளர்க்க உதவவில்லை. கடந்த நூற்றாண்டுகளில் சினிமா ஒரு முழுச் சுற்று வந்து விட்டதா? அல்லது சினிமா இன்னும் தன் குழந்தைப் பருவத்திலேயேதான் உள்ளதா? தற்போது சினிமா இளமையான கலையா? அல்லது முதுமையான கலையா?

சினிமா நமக்குள்ளே பல மாற்றங்களை நிகழ்த்தியுள்ளது. இன்று நாம் உலகைப் பார்ப்பதில், புரிந்து கொள்வதில் சினிமா தன் பங்கை ஆற்றியுள்ளது. நம் பழக்கவழக்கங்களைப் பாதித்ததோடு சினிமா நிற்கவில்லை. நம் உள்ளங்களிலும் புதிய விழிப்புணர்வை உண்டாக்கியது. நம்முள் ஆழப்புதைந்து கிடக்கும் கற்பனைகளை அது தாக்கியது. நம் பாலியல் உணர்வுகளுக்கு, ஆர்வங்களுக்கு சினிமா குறிப்பிட்ட வடிவத்தை தந்தது.

வேகம், அசைவு, காலம் கழிவது ஆகியவற்றின் நுணுக்கமான சந்தோஷங்களை சினிமாதான் நமக்கு அடையாளங்காட்டியது. சமயங்களில் அதிகாரம், அடக்கியாளுதல், கொலை, யுத்தம் குறித்த உணர்வுகளை நமக்குள்ளிருந்து வெளியே எடுத்து நம்மை சங்கடப்படுத்தியும் உள்ளது. இறுதியாக நம் நாயகர்களை, நாயகிகளை, நம் பயங்களை, நம் கனவுக் கன்னிகளை, மடோனாக்களை நமக்குக் காட்டியதும் சினிமாதான், சமயங்களில் வேறு கிரகத்திலிருந்து வந்த உயிரைப்போல் நம்மை ஆட்கொள்வதும் சினிமாதான்.

ஆரம்பத்தில் சினிமாவைப் பார்க்கப் பயந்து கண்ணை மூடிக் கொண்ட ஆப்பிரிக்கப் பழங்குடிகளுக்கு, ஆரம்பத்திலேயே இது தெரியும் போலிருக்கிறது. அதே நேரத்தில் கண்ணை மூடிக் கொண்டதால் வேறு பல விஷயங்களை அவர்கள் இழக்கவில்லையா? சினிமா மொழிகொண்டு நாம் பெற்ற பலன்கள் ஏராளம். அதே நேரத்தில் அது நம்மை மீறிய சக்தியாய் நம்மையே ஆட்கொள்கின்ற போது நாம் இன்னும் அதிக பலன் பெறுகிறோமா அல்லது நம்மிலிருந்து பலவற்றை இழக்கிறோமா? இதுதான் இன்று நம்முன் உள்ள கேள்வி.


படிப்பகம்

www.padippakam.com



# சிகரம் போல

வி. நக்மணி லோகா, ஈப்போ

தலைநகரின் "புடுராயா" பேருந்து நிலையப் பரபரப்பில் உதயசூரியன் நீண்டநேரமாக, ஆவலோடு காதலியின் வரவுக்காகக் காத்திருப்பதுபோல், பேருந்தின் வரவை ஏக்கத்தோடு வழிமேல் விழி வைத்து, பார்வையை ஓடவிட்டுக் கொண்டிருந்தான்.

"பஸ் ஒரு மணி நேரம் லேட்டா வருமாம்" என்ற காத்திருந்த பயணிகளின் கிசுகிசுப்பு உதயசூரியனின் காதிலும் விழத்தான் செய்தது.

"படிக்கும் பழக்கம் அறிவை வளர்க்கும்" என்பதற்கிணங்க நல்ல தமிழ் நூல்களைப் படிக்கும் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டிருந்த உதய சூரியனுக்கு, நேரம்போகக் கையிலிருந்த பேராசிரியர் டாக்டர் ரெ. கார்த்திகேசு அவர்களின் "தேடியிருக்கும் தருணங்கள்" என்ற கதை நூல் கைகொடுத்தது.

மொழிப்பற்றுமிக்க ஆங்கிலேயர்கள் போல் ஒவ்வொரு குழந்தையும் தங்கள் தாய்மொழியில் சிந்திக்கவும், பேசவும் இருந்தால்தான் தாய்மொழிப் பற்றும் பன்மொழித்திறனும் பெறமுடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்த உதயசூரியனின் தந்தையார், அன்பானந்தரின் அவாப்படி, ஆறாண்டு ஆரம்பக் கல்வியைத் தமிழ்ப் பள்ளியில் முடித்த பெருமையோடு, இன்று இரண்டாமாண்டு மாணவனாக மலாயா பல்கலைக் கழகத்தில் பயின்று கொண்டிருந்தான் உதய சூரியன்.

இரண்டுவார விடுப்பில் ஈப்போ நகர் செல்லத்தான் இந்தப் பேருந்து நிலையக் காத்திருப்பு. ஒன்றரை மணி நேரத்தை விழுங்கி விட்டுப் பேருந்தும் வந்து விட்டது. பேருவகையோடு ஏறி இருக்கையில் அமர்கிறான். பேருந்து விரைந்து செல்லும் வேகத்தில், ஓடுகின்ற மரங்களோ, செடிகொடிகளோ, நீளுகின்ற சாலைகளோ, கையிலிருந்த நாவலோ அவன் கண்களுக்குப் புலப்படவில்லை. அவனின் எண்ண அலைகள் பெற்றோரைச் சுற்றியே வலம்வந்து கொண்டிருந்தது.

மின்சார வாரியத்தில் பணிபுரிந்துவந்த அப்பா, இந்த ஆண்டோடு ஓய்வு பெற்றுவிடுவார். அண்ணனும் அக்காளும் மணமுடித்து, பினாங்கிலும், மலாக்காவிலும் தொழில் நிமித்தம் சென்று ஆண்டுகள் ஆறாகிவிட்டன. எப்பவோ வந்து போகும் விருந்தினராகி விட்டனர். அப்பாவையும் அம்மாவையும் விட்டுப் பிரிய மனமின்றி, உயர்கல்வியைத் தொடரத் தலைநகர் வந்ததில், அப்பாவின் ஆசைக்கனவும் அதிலடங்கி இருந்தது. அண்ணனும் அக்காளும் இடைநிலைப் பள்ளியாசிரியர்களாகத்தான் உயர முடிந்தது. அதில் அப்பாவின் மனதிற்குச் சமாதானமே இல்லாதிருந்தது. எனக்கு மருத்துவத் துறையில் பயில இடம் கிடைத்தபோது அப்பாவின் இலட்சியக்கனவு நனவாகிய மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

சமூக நலனில் அப்பாவுக்கு அதிக அக்கறையும், மொழி, இனம் என்றால் முன்னின்று உதவுவதும், மனித நேயத்தோடு பழகுவதும் அவரது நற்பண்புகளாக விளங்கியது. அரசியல் மூலம்தான் மக்களுக்குத் தொண்டாற்ற முடியும் என்ற நோக்கில், ஆரம்பக் காலத்தில் அரசியலில் ஆர்வத்தோடு ஈடுபட்டார். ஆனால் காலப்போக்கில் அதிலிருந்து ஒதுங்கிக் கொண்டார். சங்க மன்றங்களிலெல்லாம் பங்கு பற்றிச் சேவையாற்ற இன்றளவும் தயங்கியதில்லை. சுறுசுறுப்பில் எறும்பாக இயங்கிக் கொண்டிருப்பார்.

இப்போதும் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் பங்குப் பெற்றுச் செயல்பட்டு வருகிறார். இச்சங்க ஏற்பாட்டில்



படிப்பகம்

கலைநிகழ்ச்சியோடு, அப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி உயர்கல்வி பெறுவதற்கு உதவும் பொருட்டு, கல்வி நிதியொன்றைத் தொடங்குவதற்கு ஏற்பாடாகி இருப்ப தாகவும், அதில் கலந்து கொள்ள வேண்டும்" என்றும் தொலைபேசியில் பேசியது, உதயசூரியனின் நினைவில் வந்து நின்றது. பேருந்தும் ஈப்போ நகரை அடைந்து விட்டது.

நிழலின் அருமையை வெய்யிலில் அறிவதுபோல தலைநகரின் பரபரப்பு, ஈப்போ நகர் அவனுக்குத் தாய்வீடல்லவா! நெஞ்சிலே ஒரு சுகமான இனிய ராகம்!

"அம்மா நான் வந்து நாலு நாளாயிடுச்சி. அப்பாகிட்ட உட்கார்ந்து பேசணும்னு நினைக்கிறேன். ஆனா முடியல காலையில் போய் இரவு வீடு திரும்புகிறார். அப்படி என்னம்மா செய்கிறார்" என்றவன் கேள்விக்குறியோடு அம்மாவை நோக்குகிறான்.

"அப்பாவைப் பற்றித்தான் உனக்குத் தெரியுமே. பள்ளிக்கூடத்திலே நிகழ்ச்சி நடத்துறாங்க. அப்பாதான் எல்லாத்துக்கும் பொறுப்பு. அதான் ஓடியாடி வேலைப் பார்த்துக்கிட்டிருக்கிறார். இரண்டு நாளில முடிஞ்சிடும். இன்றைக்கு நிகழ்ச்சி. உன்னையும் கூட்டிப் போறாராம்" என்றார் உதயசூரியனின் தாயார்.

"சரிம்மா, எங்கேயோ போகணும் என்று சொன்னீங்களே!

"ஆமாய்யா நீ வந்ததில் நானும் கொஞ்சம் கவனக்குறைவா இருந்திட்டேன். அப்பாவும் கேட்டுக்கிட்டே இருக்கிறார். "சரி கிளம்பு" கார் சாவியைக் கொண்டு வந்து உதயசூரியனிடம் தருகிறார்.

இருவரையும் சுமந்து சென்ற கார் சிறிது நேரத்தில் கடையோரச் சாலையில் நின்றது. அம்மா கடையில் நுழைந்து சமையல் சாமான்களோடு, உணவுப் பொருட்கள், தின்பண்டங்களென வாங்கிக் கொண்டிருந்தார். அவருக்கு உதவியாக பொருட்களடங்கிய பைகளைத் தூக்கிக் கொண்டு வந்து காரில் வைத்தான். உதயசூரியனின் மனதில் "இவ்வளவு பொருட்களை எதற்கு? என்ற கேள்விக்குறி தொக்கி நிற்க, அம்மா வழிகாட்ட, கேட்க மனமின்றி காரைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

அது ஒரு குடியிருப்புப் பகுதி. காரை நிறுத்தச் சொல்லிவிட்டு, வாங்கிய உணவுப் பைகளில் இரண்டை எடுத்துக் கொண்டு அம்மா கீழே இறங்கினார். இருவரும் ஒரு வீட்டின் முன் நின்றதுதான் தாமதம், அவ்வீட்டிலுள்ள குழந்தைகள் நான்கும் ஓடிவந்து அம்மாவை அன்போடு வளைத்துக் கொண்டனர்.

அம்மாவும் அவர்களைப் பரிவோடு அணைத்துக் கொண்டு "நல்லா இருக்கீங்களா? அம்மா எங்கே? என்று கேட்பதற்கும், முப்பத்தாறு வயது மதிக்கத்தக்க ஒரு பெண் "வணக்கம் அம்மா" என்று சொல்வதற்கும் சரியாக இருந்தது.

"சௌக்கியமா இருக்கியா சிந்தாமணி" என்று கேட்டுக்கொண்டே, கொண்டு வந்த பைகளை சிந்தாமணியிடம் கொடுத்துவிட்டு "நீ கேட்ட பொருட்களெல்லாம் இதிலிருக்கு. இரண்டு நாளைக்குப் பிறகு ஐயா வந்து செலவுக்குக் கொடுப்பார், என்றார் அம்மா.

"நெஞ்சம் நெகிழ நன்றியுணர்வோடு சரிங்கம்மா, ஐயா எப்படி இருக்கிறார்" என்று கேட்டுக் கொண்டே உதயசூரியனைப் பார்ப்பதிலிருந்து அம்மா புரிந்து கொண்டார்.

இவர் என் கடைசி மகன் உதயசூரியன். லீவுக்கு வந்திருக்கிறார். ஐயாவும் நானும் நல்ல சுகமா இருக் கிறோம். பலகாரங்களை எடுத்து பிள்ளைகளுக்குக் கொடு. இவங்க எல்லாம் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காப் போறாங்களா? எப்படிப் படிக்கிறாங்க" என்றார் அம்மா.

"அன்றாடம் படிக்கப் போறாங்கம்மா. படிப்பிலேயும் கெட்டியா இருக்காங்க" என்றாள் சிந்தாமணி.

"எப்பவும் பிள்ளைகள் மேல் கவனமாக இருக்கணும்.ஒவ்வொரு நாளும் பள்ளிப் புத்தகங்களைப் பார்த்து அவங்க படிக்கிறதையும், ஒழுங்கா படிக்கப் போறதையும் உறுதிப்படுத்திக்கணும்" என்றார் அம்மா.

சிந்தாமணி "சரிங்கம்மா" என்றாள்.

சரி, நாங்க புறப்படுகிறோம். கமலாவையும் போய்ப் பார்க்கணும்" என்று சொல்லிக் கொண்டே விடை பெற்றனர்.

சிறிது தூர தொலைவிற்குப் பிறகு அப்பகுதி யிலுள்ள வீடொன்றின் முன் கார் நின்றது.

"உதயா நீ இங்கேயே இரு. நேரமாகிறது. நான் மட்டும் போய் சீக்கிரம் வந்திடறேன்" என்று சொல்லிக் கொண்டே, மீதமிருந்த பைகளைபெடுத்துக் கொண்டு காரிலிருந்து இறங்கினார். கார் சத்தம் கேட்டி அவ்வீட்டிலுள்ள தாயும் ஐந்து பிள்ளைகளும் வெளியே வந்து விட்டனர்.

"வணக்கம் அம்மா, வணக்கம் பாட்டி" என்று முகம் தாமரையாய் மலர கோரஸ்பாடி நின்றனர்.

மனம் நெகிழ்ந்தவராய் அம்மாவும் வணக்கம் கூறி பிள்ளைகளிடம் பைகளைக் கொடுத்து விட்டு, நலம் கேட்டறிந்தார். அவர்கள் விடுத்த வினாக்களுக்கு விடையாக "அடுத்த வாரம் ஐயாவோடு வர்றேன். கவனமா இருக்கணும். பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்கா போகணும்" என்று சுருங்கக் கூறி விரைவாகப் புறப்பட்டார்.

அம்மாவுக்கு அன்பையும் மரியாதையையும் வணக்கமாய்க் கூறி வழியனுப்பினார். எதிர்பார்ப்பு நிறைந்த அந்த மனங்களின் ஏக்கத்தை, கவனித்துக் கொண்டிருந்த உதயசூரியனால் உணர முடிந்தது.

கார் புறப்பட்டது. உதயசூரியனின் இதயத்துள் அடுக்கடுக்கான கேள்விக் கணைகள் கொக்கிப்போட்டு இழுத்தன.

அம்மா இவங்கெல்லாம் யாரும்மா?"

"சொல்றேம்பா, அவசரப்படாதே. நீயும் தெரிந்து கொள்றது நல்லதுதான். இவங்களெல்லாம் யாருமில்லாத ஆதரவற்றவர்கள். குடும்பத்தலைவர்கள் சம்சு, சாராயத் தினால் சமாதியாகி விட்டனர். அவர்களுக்கு நிலையான வேலையில்லாததால் எந்த உதவித் தொகையும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை. சமூக நல இல்லங்களில் பிள்ளைகளுக்கு மட்டுமே இடம் என்பதால் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை விட்டுப் பிரிய மனமின்றி, ஆதரவுதேடி அலைந்தபோது, அப்பாவின் நண்பர்கள் இவர்களை நம்மிடம் கொண்டு வந்து சேர்த்தனர். நண்பர்களோடு கலந்து பேசி, இவர்களைப் பராமரிக்கும் பொறுப்பை அப்பாவிடமே விட்டனர். அவர்களும் அவ்வப்போது வந்து முடிந்த உதவிகளைச் செய்து தருகின்றனர்.

இவர்களைப் போன்று இன்னும் நான்கு குடும்பங்கள் வேறு இடங்களில் இருக்கின்றனர். அப்பாவும் இவர்களுக்குத் தேவையான வீட்டு வசதி, தகுதிக்கேற்ப வேலை வாங்கிக் கொடுத்து, பிள்ளைகளைப் பள்ளியில் பதிந்து, படிக்கும் வசதிகளெல்லாம் செய்து கொடுத்தார். பணப்பற்றாக்குறைக்கு நல்லுள்ளம் படைத்தவர்களின் உதவியையும், சமூக நல இலாகாவின் உதவியையும் பெற்று இவர்களைப் பாதுகாத்து வருகிறோம்" என்றார் அம்மா.



படிப்பகம்

www.padippakam.com

ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டுவந்த உதயசூரியனின் உள்ளம் பனியாய் உருகியது. பேருக்கும் புகழுக்கும், பட்டம் பதவிக்கும் அலையும் மனிதர்களிடையே அப்பாவின் தொண்டு மனம் மாணிக்கமாய் ஒளி வீசியது.

"அம்மா, நீங்கள் சொல்வதிலிருந்து நம் சமுதாயத்தில் ஆதரவற்ற குடும்பங்கள் அதிகம் இருப்பதாக தெரிகிறதே. நம்மின சமுதாய அமைப்புக்களான கோயில்கள், அதைச் சார்ந்த மன்றங்கள், சங்கங்கள் உதவ முடியாதா?

"ஏன் முடியாது? முடியும். மனமுண்டானால் மார்க்கம் உண்டல்லவா! அர்ப்பணிப்பும், மனிதநேயமும் மூலதனமாக இருக்க வேண்டும். ஆலயத்திற் கருகில் பாலர்பள்ளி அமைத்து கல்வியை வளர்ப்பதோடு மக்களுக்குத் தொண்டும் செய்கிறார்கள். நம் இந்துக் கோயில், சமூக அமைப்புகள் இது போன்று செயல்பட முன் வருவதில்லை என்றால் மக்கள் நலனில் அக்கறை இல்லையென்றுதான் தோன்றுகிறது" என்றார் அம்மா.

"நீங்கள் சொல்வதும் சரிதானம்மா. தொண்டுகள் செய்வதற்கும் பொருளாதாரம் தேவையாய் இருக்கிறதே?"

"ஆதரவாற்றவர்களை ஆதரித்து, நல்வழி காட்ட ஆலயங்கள் முன் வந்தால், ஆதரவுக்கரம் நீட்ட எத்தனையோ அன்புள்ளங்கள் இருக்கவே செய்கின்றன. அரசாங்க ஆதரவும் காத்திருக்கிறது. தொண்டென்றால் தொலைதூரம் ஓடும் இவர்களை நினைக்க வருத்தமாக இருக்கிறது" என்றார் அம்மா.

"இறைப்பணி, சமயப்பணியைவிட உயர்வானது. மனிதநேயப்பணி என்று படித்திருக்கிறேனம்மா. மக்கள் நலனுக்குத்தானே கோயில்கள், சமய அமைப்புகள் எல்லாம்", என்றான்.

"அதைப்பற்றி கோயில் நிர்வாகங்களைக் கேட்டால் சமுதாயப் பிரச்சினைகளைக் கவனிக்க அரசியல் அமைப்பு இருக்கிறது. அது எங்கள் வேலை இல்லை என்று சாக்குப்போக்குச் சொல்லி கழற்றிக் கொள்வதோடு, "கோயில்களுக்கு வருமானம் இல்லை" என்று காரணங்காட்டி ஒதுங்கிக் கொள்ளும் செயலை என்னவென்று சொல்வது என்று தன் உள்ளடக்கையை உதய சூரியனிடம் கொட்டினார்.

"அம்மா! உங்கள் சமுதாய நல அக்கறையும் ஆதங்கமும் எல்லாப் பெண்களுக்கும் வர வேண்டும். நீங்கள் "சூப்பர்"தான், என்று பாராட்டியதோடு, அவரின் மீது மரியாதை மதிப்பும் அவனுள் பெருகிற்று.

வீடு வந்தபோது, தன்னை அழைத்துச் செல்வதற்காக அப்பா காத்து நின்றார். பள்ளியில் கலை நிகழ்ச்சியோடு, மாணவர்களின் கல்வி நிதியும் தொடங்குவது முக்கிய அம்சமாக இருந்ததால், ஆர்வத்தோடு அப்பாவுடன் புறப்பட்டான்.

மண்டபம் நிரம்பப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்களென நிரம்பி இருந்தனர். சட்டமன்ற உறுப் பினரும் உயரிய பல விருதுகளைப் பெற்றவருமான வள்ளல் திரு. கந்தசாமி அவர்கள் இந்நிகழ்ச்சியின் தலைவராகவும், கல்வி நிதியைத் தொடக்கி வைப்பவராகவும் இருந்ததால், அவர் வருகைக்காக செயற் குழுவினர் காத்துக் கொண்டிருந்தனர். "வள்ளல் கந்தசாமி" என்றால் அந்த வட்டாரத்தில் அறியாதார் யாருமில்லை என்றே சொல்லலாம். அந்த அளவுக்குப் பிரபலம்.

மணி ஆறரையை நெருங்கிக் கொண்டிருந்தது. "தலைவர் வந்து விட்டார்" என்ற செய்தி காட்டுத்தீப்போல மண்டபம் முழுவதும் பரவி, பரபரப்பாக இருந்தது. நண்பர்கள்புடைசூழ பந்தாவோடு மேடைக்கு வந்தத் தலைவர் வள்ளல் கந்தசாமி. அவர்களை வரவேற்று, பொன்னாடை



போர்த்தி, பூமாலை போட்டு "கருணை வள்ளல்" என புகழாரம் பாடி மணமகனைப் போல் மேடையில் அமர்த்தினர். மக்களின் பலத்தக் கைத்தட்டலோடு, காட்டும் மரியாதை மதிப்பால் உள்ளம் பூரிக்க மெய்சிலிர்க்க "நன்றி, நன்றி" என்று கூறி மேடையிமர்ந்தார்.

வரவேற்புரையோடு மாணவர்களின் ஆடல் பாடல், நாடகம், நகைச்சுவை மாறுவேடப் போட்டியென நிகழ்ச்சி கோலாகலமாக நடந்து முடிந்தன. போட்டியின் வெற்றியாளர்களுக்குத் தலைவர் பரிசளித்துவிட்டு, கல்வி நிதியைத் தொடங்க ஆயத்தமானார்.

செயலாளர் என்ற முறையில் உதயசூரியனின் தந்தை அன்பானந்தர் மேடைக்கு வந்து, "கல்வி நிதியைத் தொடக்கி வைக்கும் கருணைவள்ளல், மக்கள் தொண்டர், சட்டமன்ற உறுப்பினருமான பெருமதிப்பிற்குரிய திரு. கந்தசாமி அவர்கள் பெருமனதோடு ஐந்தாயிரம் ரிங்கிட் கொடுத்து கல்வி நிதியைத் தொடக்கி வைக்கிறார்" என்றதும் பலத்தக் கைத்தட்டலோடு கல்வி நிதி தொடங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு வந்திருந்த பெற்றோர்களும், ஆசிரியர்களும் தங்களால் ஆன தொகையைக் கல்வி நிதிக்கு வரவு வைத்துக் கொண்டிருந்தனர். தலைவர் கந்தசாமி ரிங்கிட் 5000.00 என்று எழுதப்பட்ட கடித உறையை அன்பானந்தரிடம் கொடுத்துவிட்டு, "வேறொரு நிகழ்ச்சியில் பங்குபெற வேண்டிய கட்டாய சூழ்நிலை. என்னை மன்னிக்கவும்" என்று கூறி அவசரமாக விடை பெற்றார்.

நன்கொடை கொடுத்தவர்களின் பெயரோடு அறிவிப்புச் செய்தனர். நிதியளிப்பு முடிந்தபின் மொத்தத் தொகையை அறிவிக்க எண்ணி தலைவர் கருணை வள்ளல் கந்தசாமியின் கடித உறையைத் திறந்தனர். என்ன ஆச்சரியம், காசோலையில் வெறும் நூறு ரிங்கிட் மட்டுமே எழுதியிருந்தது. சிறு சலசலப்பேற்பட்டது. எல்லோருக்கும் திகைப்போடு ஏமாற்றமும் ஆத்திரமும் பொங்கியது. அதில் ஒருவர் "இந்தச் செக்காவது செல்லுமா?" என்று ஏளனமாகக் கேட்டார். அவர்களைச் சமாதானப்படுத்திய அன்பானந்தர் "இவரை நம்பியா நம்ம குழந்தைகள படிக்க வைக்கிறோம். அவரை விட்டு விடுங்கள், இவரைப் போன்ற பலர் தங்களை உயர்த்திக் கொள்ள இப்படித்தான் விளம்பரம் தேடுறாங்க" என்றார்.

எல்லோரும் அமைதியாயினர். அப்பாவின் சொல்வாக்கின் செல்வாக்கை உதயசூரியனால் உணர முடிந்தது. அப்பாவின் கருணை மனமும் காலத்தால் செய்யும் சமூகப் பணிகளும் கடுகளவேயானாலும், அவரின் கடமையும் மனிதநேயமும் கடலளவைக் காட்டுகிறது. வள்ளல் கந்தசாமியையும் அன்பானந்தரையும் ஒப்பீடு செய்யும்போது உதயசூரியனின் மதிப்பீட்டில் அப்பா "சிகரம்போல" உயர்ந்து நின்றார்.



படிப்பகம்

www.padippakam.com





# நோய்களைக் குணமாக்கும் வண்ணங்கள்

**வா**ழ்க்கையை இனிமையாக்கும் வண்ணங்கள் மனிதனுக்கு ஏற்படும் பலவகையான நோய்களையும் குணப்படுத்தும் என்பது பலரும் அறியாத செய்தி. பிரிட்டனில் வண்ண மருத்துவத்தின் மூலம் செலவோ, பிரச்சினைகளோ இன்றி நோய்களைக் குணப்படுத்திக் கொண்டுள்ளனர். இதனால் இந்த மருத்துவம் மிகவும் புகழ் பெற்றுள்ளது. ஆஸ்துமா நோயாளிகள் தினமும் பதினைந்து நிமிடங்கள் நீல விளக்கு எரியும் அறையில் உட்கார்ந்திருந்தால் விரைந்து குணமாவார்கள். மோசமான ஜலதோஷமா? இதே போல் பச்சை நிற விளக்கொளியில் சிறிது நேரம் உட்காருங்கள். இரவு தூங்கும்போது பச்சை நிற விளக்கே இரவு விளக்காக இருக்கட்டும். ஜலதோஷம் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும்.

அமெரிக்காவைச் சேர்ந்த வண்ண முறை மருத்துவர் ரீப்பன் ஆம்பர் என்பவர் வண்ணச் சிகிச்சை முறையில் கொழுத்த சரீரம் உள்ளவர்களை ஒல்லியாக்கி விட்டார். இத்துடன் வழுக்கைத் தலை மனிதர்களைத் தினமும் பதினைந்து நிமிடங்கள் நீல ஒளி வீசும் பல்புகளின் ஒளியில் உட்கார வைத்தார். நீல நிற உடைகளை அணியச் சொன்னார். உடலில் சத்துக்கள் சரிசமமான நிலையில் இருக்கச் சிவப்பு நிறமான பழங்களையும், காய்கறி களையும் சேர்த்துச் சாப்பிடச் சொன்னார். இந்த இரண்டு நிறமுள்ள காய்கறிகள், பழங்களில் உள்ள விட்டமின் மற்றும் தாது உப்புக்கள் உடலைத் தெம்பாக்கி, ஆரோக்கியமாக்கி தலையில் முடியை வளரச் செய்து விடுமாம். இதன்படி பலருக்கும் வழுக்கைத் தலையில் முடி நன்றாக வளர ஆரம்பித்து விட்டது. பிரிட்டனின் புகழ்பெற்ற கலர் தெரபிஸ்ட் டாக்டர் மார்க்பிரியர் "உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் நாம் வண்ணங்களால் பிணைக்கப்பட்டி ருக்கிறோம். இதனால்தான் சிவப்பு விளக்கொளி வீசும் அறையில் நுழைந்ததும் சிலரது இரத்த அழுத்தம் உயர்கிறது. இதயம் வேகமாகத் துடிக்கிறது. மூச்சு விடுவது அதிகரிக்கிறது. நீல விளக்கு ஒளி வீசும் அறைக்குள் நுழைந்தால் உடனடியாக இரத்த அழுத்தம் குறையும், படபடப்பு அடங்கி, இதயம் சீராக இயங்கும், மனம் அமைதி அடையும். இதனால்தான் இரத்தக் கொதிப்பு நோயாளிகளை நீல ஒளி வீசும் அறைக்குள் அமர வைத்துக் குணமாக்குகிறோம். சில வண்ண மருத்துவ நிபுணர்கள் தங்களுக்குத் தேவையான நிறமுள்ள போத்தல்களில் தண்ணீரை சூரிய ஒளியில் நீண்ட நேரம் வைத்திருந்து மருந்தாகக் குடிக்கின்றனர்" என்கிறார் இந்தப் பிரிட்டன் மருத்துவர். மஞ்சள் நிற விளக்கொளியின் கீழ் மலச்சிக்கல், மஞ்சள் காமாலை, ஈரல் நோய், வயிற்றுக்கோளாறுகள், நீரிழிவு, சிறுநீரக நோய், கண் நோய்கள், தொண்டைத் தொற்று நோய் முதலியன உள்ளவர்கள் தினந்தோன்றும் 15 நிமிடங்கள் உட்கார்ந்திருந்தால் விரைந்து குணமாவார்கள். இவர்கள் மஞ்சள் நிறமுள்ள பழங்கள், காய்கறிகளைச் சாப்பிட வேண்டும். மஞ்சள் நிற உடைகளையே தொடர்ந்து அணிய வேண்டும்.

இதய நோயாளிகளுக்கு நீலம் மற்றும் பச்சை நிற உடை சிறந்தது. நீல நிற உடைகளை அணிந்து வந்தால் எல்லா நோயாளிகளுக்கும் அமைதி கிடைக்கும்.

நரம்புக் கோளாறுகள், சளிக்காய்ச்சல், குளிர்காய்ச்சல், ஜலதோஷம் உள்ளவர்கள் பச்சை நிற உடைகளையும் பச்சை நிற காய்கறிகள், பழங்கள் முதலியவற்றைப் பயன்படுத்த வேண்டும். இந்த நோயாளிகள், மன இறுக்கம் ஏற்படும்போது பசுமையான வயலில், தோட்டத்தில் விருப்பத்துடன் வேலை செய்வது மிகவும் நல்லது. ஒற்றைத் தலைவலி, தோல் நோய்கள், காது கேளாமை முதலியவற்றைக் கருநீல நிறம் குணப்படுத்தி விடுகிறது. நீலமும் கறுப்பும் கலந்த வண்ணத்தாளை ஒரு சாதாரண பல்பில் சுற்றிவிட்டு எரிய விட்டால் இந்த நிறம் கிடைக்கும். இந்த விளக்கின் கீழ் சில நிமிடங்கள் அமர்ந்து வர வேண்டும். ஒவ்வொரு வண்ணமும் உடலுக்கு நலம் தருகிற அல்லது கெடுதல் விளைவிக்கும் அம்சங்கள் வெளியேற்றி ஒளி அலை அதிர்வுகளை ஏற்படுத்துகிறது.

பண்டைய எகிப்தில் பக்தியுள்ளவர்களை ஆலயங்களில் உள்ள 'குணப்படுத்தும் கருவறை' என்ற அறையில் உட்கார வைத்து தேவையான நிறத்தை அவர்கள் அறையில் ஒளிரச் செய்து குணப்படுத்தினார்கள். இந்த மாற்று மருத்துவ முறையே இன்று பெரிய அளவில் உருவாகி சிரமமின்றி நோய்களைக் குணப்படுத்தி வருகிறது. ஆஸ்திரேலியாவில் உள்ள புகழ்பெற்ற கலர் தெரபிஸ்ட் ஒருவர் நோயாளிகளைப் பார்க்காமலேயே இந்த முறையில் பலரைக் குணப்படுத்தியுள்ளார். தேவையான நிறத்தை அவர்கள் மனதில் கற்பனை செய்து கொள்ளச் சொன்னார். வீட்டிலிருந்த நோயாளிகளுக்குச் சொல்லப்பட்ட இந்த அறிவுரையும் நல்ல பலனைத் தந்தது. உங்கள் ஆரோக்கியம் தொடர்ந்து நீடிக்க மேற்கண்ட ஏழு நிறங்களையும் ஒவ்வொரு நிறமாக மனதில் கற்பனை செய்து உடலுக்குள் பாய்வது போல் தலா எட்டு முறை மூச்சாக இழுத்து வெளியே விடவும். ஆரோக்கியம் தொடரும். தலைவலி, உடல் சோர்வு, மனச்சோர்வு முதலியனவும் எட்டிப் பார்க்காதாம். ●



படிப்பகம்

www.padippakam.com

# விமான வரலாற்றில் பயங்கரம்

பயணி

போக்குவரத்து வசதிகளில் அதி முக்கிய இடத்தை விமானங்களே வகிக்கின்றபோதிலும் அதில் ஏற்படும் விபத்துக்கள், உயிரிழப்புகள், பொருளாதார இழப்புகள் பல சமயங்களில் மதிப்பிட முடியாமல் போய் விடுகின்றன.

விமானத்தில் பறப்பது என்பது இன்றும் எல்லா நாட்டுக் கிராமப்புற, நடுத்தர வர்க்கக் கனவாகவே இருந்து வருகின்றபோதிலும் பல நாடுகளில் பணக்கார வர்க்கத்தினர் தமது சொந்த விமானங்களில் பயணம் செய்து கொண்டிருக்கின்றனர்.

விமானப் போக்குவரத்துத் துறை வரலாற்றில் இதுவரை பல விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. உயிர் உடற்சேதங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனாலும் (CONCORDE) 'கொன்கோர்ட்' எனப்படும் அதிவேக சூப்பர் சொனிக் விமானங்கள் எதுவும் விமான விபத்துக்களில் சிக்கியதில்லை. அந்த வரலாற்றுப் பெருமையும் தற்போது தவிடுபொடியாகி விட்டது!

கடந்த ஜூலை 25ம் திகதியன்று பிரான்ஸ் நாட்டின்
பாரீஸ் நகரில் அமைந்துள்ள சாஸ் டி குலி (CHARLES DE GAULLE) விமான நிலையத்தின் 24வது ஓடு பாதையில் ஒன்பது விமானப் பணியாளர்களுடனும் நூறு பயணிகளுடனும் நியூயார்க்கின் ஜோன் கென்னடி விமான நிலையம் நோக்கிப் புறப்பட்ட எயர் பிரான்ஸ் 4590 விமானம் புறப்பட்ட 2 1/2 நிமிடத்தில் விழுந்து நொருங்கியதில் உலகம் பரபரப்பில் ஆழ்ந்தது.

சூப்பர் சொனிக் விமானங்கள் விமானத் துறை வரலாற்றில் விமான விபத்துக்களால் பாதிக்கப்படாத விமானம் எனும் பெயர்பெற்ற விமானங்கள் ஆகும். இதன் வரலாறு 30 ஆண்டுகளைக் கொண்டது. இத்தனை ஆண்டுகள் அது தனிக்காட்டு ராஜாவாகத் தனி ராஜ்ஜியம் நடத்தி வந்தவை. இதன் அதியுயர் ஒலி காரணமாகப் பல நாடுகள் தங்கள் நாடுகளில் இதனை அனுமதிக்காத ஆரம்பகால வரலாறுகளும் உண்டு.

இந்த விமானத்தின் முன்பகுதி பறவையின் அலகு போன்ற தோற்றத்திலும் பின் பகுதி போர் விமானங்கள் போன்ற தோற்றத்திலும் இருக்கும். இதன் சிறப்பம்சமே இதன் வேகம்தான்.

உலகின் எந்த மூலையிலும் ஏதாவது ஒரு விபத்து எப்போதும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. நம் நாட்டில் பெருநாள் காலங்களில் நடைபெறும் விபத்துக்கள் நெஞ்சை நடுங்கச் செய்பவை. நாள் நெருங்க நெருங்க விலை வாசிபோல் அதன் மரணத் தொகை எகிறிக் கொண்டே இருக்கும்.

விமானங்கள் வீழ்வதும், மோதிக் கொள்வதும், கப்பல்கள் மூழ்குவதும், வாகனங்கள் மோதிக் கொள்வதும் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் இந்த சூப்பர் சொனிக் விமானம் விபத்துக்குள்ளானதும் உலகம் அதிர்ந்து போனதற்குக் காரணம் அது தன் 30 ஆண்டுகால வரலாற்றில் இதுவரை எந்த விபத்திலும் சிக்கியதில்லை என்கிற உண்மையும் அதன் முதன்மையான விமானப் பராமரிப்பும்தான்.

## எப்படி நடந்தது

ஜூலை 25 அன்று 4.42க்கு பாரீஸ் விமானக் கட்டுப்பாட்டு அறையில் இருந்து விமானத்துக்குத் தகவல் வருகிறது. "உங்கள் விமானம் புறப்படத் தயார் நிலையில் இருக்கிறதா? விமான ஓடு பாதை 24, தயாராக இருக்கிறது. நீங்கள் புறப்படலாம்" - என்கிற தகவல் கிடைக்கப்பெற்ற விமானி கிறிஸ்தியன் மார்ட்டி தனது சக விமானியான ஜேன் மார்க்கெட்டைத் தயார் நிலையில் இருக்கும்படி பணிக்கிறார்.

விமானத்தின் எல்லாப் பாகங்களும் ஒழுங்காக வேலை செய்வதையும் இஞ்சின் இயக்கங்களின் ஒலி, ஒளி அதிர்வுகளையும் உறுதிப்படுத்திக் கொண்ட தலைமை விமானி மார்ட்டி விமானத்தை விமான ஓடுபாதையின் இறுதிப்பகுதிக்கு நகர்த்திச் சென்று புறப்படுவதற்குத் தயாரானார்.

விமானம் புறப்படத் தயாராக இருப்பதைப் பயணிகளுக்கு அறிவிப்புச் செய்தார்.

"நான் கெப்டன் மார்ட்டி பேசுகிறேன்! நமது விமானம் புறப்படத் தயாராக இருக்கிறது. உங்கள் சுகமான பயணத்துக்கு என் நல்வாழ்த்துக்கள்"

விமானத் தளத்தின் தலைமைக் கட்டுப்பாட்டுத் தளத்தில் இருந்து அனுமதி கிடைத்ததும் விமானத்தின் நான்கு எஞ்சின்களும் அதிவேகமாக இயங்கின. அந்த விமான நிலையத்தையே அதிர வைக்கும் ஒலியுடன் விமானம் ஓடு பாதையில் ஓடி மேலே கிளம்பத் தயாரானது.

விமானம் புறப்பட்ட 120 விநாடிகளில் விமானத்தின் பின்பகுதி தீப்பிடித்துக் கொண்டதைக் கண்டுகொண்ட விமானி விமானத்தை மீண்டும் விமான நிலையத்திற்கே திருப்ப முயன்றார். விமானம் தனது கட்டுப்பாட்டை இழந்து விட்டதை விமானி உணர்ந்தார்.

அடுத்த 30வது விநாடியில் விமான நிலையத்தில் இருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள தங்கும் விடுதி ஒன்றின் கூரைமேல் விழுந்து நொறுங்கியது விமானம்.


படிப்பகம்

www.padippakam.com

இந்தச் சந்தர்ப்பத்திலும் அதிக ஜனநடமாட்டம் இல்லாத பகுதி நோக்கியே விமானி தனது விமானத்தைச் செலுத்தினார். ஆனாலும் அது அந்தத் தங்கும் விடுதியின் மேல் விழுந்தது.

இதில் இறந்து போன 100 பயணிகளில் 96 பேர் ஜெர்மனியர். இருவர் டென்மார்க்கியர், அமெரிக்கர் ஒருவர், ஆஸ்திரியர் ஒருவர்.

அத்துடன் விமானத்தின் ஒன்பது பணியாளர்களும் தங்கும் விடுதியின் சமையல் பணியாளர்கள் நால்வருமாக இந்த விபத்தில் மொத்தம் 113 பேர் பரிதாபமாகப் பலியாகிப் போனார்கள்.

இந்த விமான விபத்தில் பலியானவர்களுக்கான இழப்பீட்டுத் தொகையாக 350 மில்லியன் அமெரிக்க டாலர்களை அந்த விமான நிறுவனம் வழங்க வேண்டி வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கொன்கோட் விமானத்தின் வரலாறு!

1969ம் ஆண்டு மார்ச் மாதம் 2ம் திகதி அது தனது முதலாவது விமானப் பறப்பை மேற்கொண்டு உலக விமானப் போக்குவரத்து வரலாற்றில் பரபரப்பை ஏற்படுத்தியது. எனினும் வர்த்தக ரீதியான செயல் பாட்டில் அது 1973ம் ஆண்டுவரை தனது விமானப் பறப்பை மேற்கொள்ள இயலவில்லை. அக்கால கட்டத்தில் உலகச் சந்தையில் பெட்ரோல் விலையின் உயர்வும் தட்டுப்பாடும் நிலவியதால் இந்நிலை!

1973ம் ஆண்டு அது தன் முதலாவது வர்த்தகப் பறப்பை ஆரம்பித்தது. பிரான்சின் பாரீசில் இருந்தும் இலண்டனில் இருந்தும் தனது வர்த்தகத்தை அது ஆரம்பித்தபோதும் இத்தகைய கொன்கோர்ட் சூப்பர்சொனிக் விமானங்கள் தனது பிராந்தியத்துக்குள் நுழையக் கூடாது என்று தடைவிதித்தது அமெரிக்கா.

இதன் அதியுயர் ஒலியின் பாதிப்பு அதிகம் என்று காரணம் சொல்லியது அமெரிக்கா. பின்பு இத்தகைய விமானங்களின் தேவையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்த அமெரிக்கா 1977ல் இத்தகைய விமானப் பறப்பைத் தனது ஆகாய எல்லைப் பிராந்தியங்களிலும் அனுமதித்தது.

இத்தகைய சூப்பர் சொனிக் விமானங்கள் 62.10 மீட்டர் நீளத்தையும் 155 டன் எடையையும் கொண்டவை. இத்துடன் அடங்கியிருக்கும் 13 எண்ணெய்த் தாங்கிகளிலும் 31,500 காலன் (119,500 லிட்டர்) எண்ணெய் கொண்டிருக்கும். இதன் வேகம் மணிக்கு 2170 கிலோ மீட்டர்.

இதன் விமானப் பறப்பு உயரம் 15,000 முதல் 18,000 மீட்டர் வரை. இந்த விமானங்களை பிரான்சும், இங்கிலாந்தும் கூட்டாகத் தயாரிக்கின்றன.

பிரான்ஸ் நாட்டிடம் இந்த விமானங்கள் ஆறும், இங்கிலாந்திடம் ஒன்பதும் இருக்கின்றன.

## விபத்தின் காரணம்

இந்த விமானம் நூறு பயணிகளுடன் விபத்துக்குள்ளானபோது விபத்துக்கான காரணம் என்னவென்று தீவிரமாக ஆராயப்பட்டு விமானத்தின் எஞ்சின்களில் ஏதோ ஒன்றில் ஏற்பட்ட கோளாறுதான் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுபற்றித் தீவிரமாக ஆராய்ந்து வந்த விமானப் போக்குவரத்து அதிகாரிகள் விமானத்தின் டயர் வெடித்ததினால் ஏற்பட்ட விபத்து என்று அறிவித்துள்ளார்கள்.

டயரில் ஏற்பட்ட உராய்வின் வெப்பத்தால் தீ ஏற்பட்டு அது எண்ணெய்த்தாங்கி வரை பரவியதாகவும் அதுவே இந்த விமான விபத்துக்குக் காரணமாக அமைந்து விட்டது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் விமானம் புறப்பட்ட 150 விநாடிகளில் நடந்து விட்ட விபத்தினால் இறந்துபோன 113பேரின் இழப்பும் அதன் பரபரப்பும் இன்னும் பரபரப்பாகப் பேசப்பட்டுக் கொண்டுதான் உள்ளது.

ஆனாலும் விமானத்தின் தலைமை விமானி கிறிஸ்தியன் மார்ட்டி இன்று மக்களால் 'மாவீரர்' என்று பாராட்டப்பட்டு வருகின்றார். ஏனெனில் இந்த விமானம் ஒரு குடியிருப்புப் பகுதியில் விழுந்து இந்த விபத்து ஏற்பட்டிருக்குமானால் இதன் உயிர்ப்பலி ஆயிரக்கணக்கில் ஆகி இருக்கும். இதனால் முடிந்தவரை மக்கள் குடியிருப்புகள் மேல் இவ்விமானம் விழாது தடுத்த ஒரு விமானியாக மார்ட்டியை மக்கள் போற்றுகின்றனர்.

கடந்த முப்பது ஆண்டுகளாக உலகில் விபத்துகள் எதுவும் இல்லாத விமானப் போக்குவரத்து என்று பிரமிப்பை ஏற்படுத்திவந்த சூப்பர் சொனிக் விமானத்தின் விபத்தினால் இத்தகைய விமானத்தின் வர்த்தக எதிர்காலம் பாதிக்கப்படாது என்கிறார்கள். ஆனாலும் இதுவரை அதற்கு இருந்து வந்த நம்பகத் தன்மை தொடருமா என்ற சந்தேகங்கள் தொடரத்தான் சென்கின்றன.

ஆனால் விபத்து நடந்த மறுநாளே இங்கிலாந்து தனது கொன்கோர்ட் விமானச் சேவையை ஆரம்பித்து விட்ட போதும் தற்போது தன் சேவையை நிறுத்திக் கொண்டு விட்டது.

30 ஆண்டுகால சரித்திரத்தைக் கொண்ட இந்த ரக விமானங்கள் விரைவில் புதிய நவீன விமானங்களாக மாற்றம் செய்யப்படவுள்ளன. ஆனாலும் பலியாகிப்போன உயிர்களை யார் மீட்டுத் தரப் போகிறார்கள்? ●



படிப்பகம்

# ஒலிம்பிக் அன்று...




**ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் செப்டம்பர் 15ம் நாள் முதல் அக்டோபர் முதல் நாள் வரை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. 200 நாடுகள் கலந்து கொள்ளும் இப்போட்டி உலக மக்களில் பெரும்பான்மையோர் மிகவும் விரும்பி ரசிக்கும் ஒரு போட்டியாகும். இப்போட்டியின் ஆரம்பம் பற்றி விபரம் தருகிறது இக்கட்டுரை (ஆர்)**

### ஏதென்ஸ் 1896

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 11 | 6 | 2 |
| கிரீஸ் | 16 | 19 | 18 |
| ஜெர்மனி | 7 | 5 | 3 |
| பிரான்ஸ் | 5 | 4 | 2 |
| பிரிட்டன் | 3 | 3 | 1 |

2500 ஆண்டுகளுக்கு முன்பு கிரேக்கத்தில் ஆரம்பமானது இந்த ஒலிம்பிக் போட்டிகள். தங்கம், வெள்ளி, வெண்கலம் போன்ற பதக்கங்கள் எல்லாம் அக்காலத்தில் வழங்கப்பட்டதில்லை.

போட்டிகளில் வெல்பவருக்கு 'ஒலிவ்' மரத்தின் இலைதான் வழங்கப்படும். அத்தனை புதிதமானதாகச் சமாதானத்தின் சின்னமாக ஒலிவ் இலையை அக்காலத்தில் கருதினார்கள்.

அக்காலத்தில் தேரோட்டம், குதிரையோட்டம், போன்ற போட்டிகள் நடைபெற்ற போதிலும் போட்டியின் மற்றைய விபரங்கள் கிடைக்கவில்லை. கிறிஸ்துவுக்குப் பின் 776-ஆம் ஆண்டில் இருந்துதான் இப்போட்டிகளில் வென்றவர்களின் விபரங்கள் கிடைத்திருக்கின்றன.

மீண்டும் 1896ம் ஆண்டில் இருந்துதான் தற்போது நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன. அதன் முதல் போட்டி ஆதி ஒலிம்பிக்கின் ஆரம்பமான கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரில் தொடங்குவதுதான் பொருத்தம் என்று கருதி முதன் முதலாக 'ஒலிம்பிக் சங்கம்' என்ற ஒன்றையும் ஆரம்பித்தார்கள்.

அதன் முதல் தலைவராக ஒலிம்பிக்கின் முன்னோடிகளில் ஒருவரான DIMITROS UIKELAS என்பவர். 1894ல் இருந்து 1896 வரை இவர் ஒலிம்பிக் கமிட்டியின் பதவியில் இருந்தார்.

1900 ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் ஒரு உலகக் கண்காட்சி நடைபெற இருந்தது. அதனால் அந்த ஆண்டின் ஒலிம்பிக் போட்டியை பிரான்ஸ் நாட்டில் நடத்தலாம் என்று ஒரு யோசனை முன்வைக்கப்பட்டபோது ஹங்கேரி தனது ஆயிரத்தாமாவது ஆண்டைக் கொண்டாடுவதற்கு ஒலிம்பிக் போட்டியைத் தனது நாட்டில் நடத்தலாம் என்ற எண்ணத்தை வெளியிட்டது.

### சென். லூயிஸ் 1900

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 80 | 86 | 72 |
| ஜெர்மனி | 5 | 4 | 6 |
| கியூபா | 5 | 3 | 3 |
| கனடா | 4 | 1 | 1 |
| ஹங்கேரி | 2 | 1 | 1 |

இதற்கு முக்கிய காரணம் ஒலிம்பிக் போட்டியை கிரேக்கத்தில் நடத்தலாம் என்று எண்ணியபோதும் அப்போது கிரேக்கம் பயங்கர நெருக்கடியில் இருந்தது. அதனால் பல நாடுகள் தமது நாடுகளில் இப்போட்டியை நடத்தலாம் என்று எண்ணங்கொண்டு கருத்துதான் வெளியிட்டுக் கொண்டிருந்தன.

இறுதியில் கிரேக்க இளவரசர் GEORGIOS AVEROFF துணையுடன் கிரேக்கத்திலேயே ஒலிம்பிக் போட்டி சிறப்பாக நடைபெற்றது. கிரேக்கம், உதைபந்தாட்டம் போன்றவை போதிய ஆதரவின்மையால் நடத்தப்படவில்லை. காரணம் இதில் பங்குபெற நாடுகள் ஆர்வம் காட்டவில்லை. மிக மோசமான காலநிலையின் விளைவாய் படகோட்டப் போட்டியும் இந்த ஒலிம்பிக் போட்டியில் இடம்பெறவில்லை.

### பாரீஸ் 1904

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| பிரான்ஸ் | 29 | 41 | 32 |
| அமெரிக்கா | 20 | 14 | 9 |
| பிரிட்டன் | 17 | 8 | 10 |
| பெல்ஜியம் | 8 | 7 | 5 |
| சுவிட்சர்லாந்து | 6 | 2 | 1 |


படிப்பகம்

www.padippakam.com

கிரேக்கம் தொடர்ந்து தானே இந்த ஒலிம்பிக் போட்டிகளை நடத்த வேண்டும் என்று உரிமை கொண்டாடியபோதும் அது அப்போது துருக்கியுடன் போரில் ஈடுபட்டிருந்தமையால் இந்தப் போட்டிபாரீசுக்கு மாற்றப்பட்டது. இதில் 26 நாடுகளில் இருந்து 1225 விளையாட்டாளர்கள் இந்தப் போட்டிகளில் கலந்து கொண்டார்கள்.

அடுத்த போட்டி இத்தாலி ரோம் நகரில் நடத்தத் திட்டமிட்டிருந்தது. அப்போது இத்தாலியில் எரிமலை வெடித்து இயற்கைப் பேரழிவு ஏற்பட்டதால் ஒலிம்பிக் போட்டியை நடத்துவதில் இருந்து இத்தாலி விலகிக் கொள்ளவே மிகவும் குறைவான கால அவகாசம் இருந்தபோதிலும் இங்கிலாந்து இந்தப் போட்டியை ஏற்று நடத்த முன்வந்தது. 22 நாடுகளில் இருந்து 2035 பேர் இந்த ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

சுவீடன் நாட்டின் ஸ்டொக்கோம் நகரில் அடுத்த போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் 28 நாடுகளைச் சேர்ந்த 2547 விளையாட்டாளர்கள் கலந்து கொண்டனர். இந்த ஒலிம்பிக் போட்டியிலேயே ஜப்பான் நாட்டினர் முதன் முதலாகக் கலந்து கொண்டனர்.

பெண்கள் நீச்சல் போட்டியில் கலந்துக் கொண்டது இதுதான் முதல் தடவை என்கிறது ஒலிம்பிக் வரலாறு.

### லண்டன் 1908

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| பிரிட்டன் | 56 | 50 | 39 |
| அமெரிக்கா | 23 | 12 | 12 |
| சுவீடன் | 7 | 5 | 10 |
| பிரான்ஸ் | 5 | 5 | 9 |
| ஜெர்மனி | 3 | 5 | 5 |

### ஸ்டொக்ஹோம் 1912

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சுவீடன் | 24 | 24 | 17 |
| அமெரிக்கா | 23 | 19 | 1 |
| பிரிட்டன் | 10 | 15 | 16 |
| பின்லாந்து | 9 | 8 | 9 |
| பிரான்ஸ் | 7 | 4 | 1 |



ஒருத்தி: டாக்டர், நேற்று என் கணவர் சளி பிடித்திருக்கின்னு வந்தாரே, அவருக்கு என்ன மருந்து கொடுத்தீர்கள்?

டாக்டர்: தலைக்கனம் இறங்க ஆவி பிடிக்கச் சொன்னேன். அதற்கு என்ன இப்போ?

அவள்: இல்லை. நேற்று ராத்திரி சுடுகாட்டுக்குப் போனவர் இன்னும் வீட்டுக்குத் திரும்பி வரவில்லை.



ஆசிரியர்: ஏண்டா நான் வந்ததும் எல்லோரும் சிரிக்கிறீங்க.

மாணவர்கள்: நீங்க தானே சார் சொன்னீர்கள், துன்பம் வருங்கால் நகுக என்று.



பைத்தியக்காரன் ஒருவன் "கடவுளே எனக்கு பத்து வெள்ளி கொடு... கடவுளே எனக்கு பத்து வெள்ளி" என்று எப்போதும் கடவுளிடம் வேண்டிக் கொண்டிருப்பான்.

இதைப் பார்த்த வைத்தியர் ஒருவர் அவனுக்கு பத்து வெள்ளியைக் கொடுத்து சோதித்துப் பார்க்க எண்ணி, பத்து வெள்ளி கொடுப்பதற்காக தன் சட்டைப் பைக்குள் கையை விட்டார். அப்போது ஐந்து வெள்ளி மட்டுமே இருந்தது. உடனே அந்த ஐந்து வெள்ளியை பைத்தியத்திடம் கொடுத்து விட்டு மறுநாள் அந்த பைத்தியத்தின் பின்னால் நின்று, இன்று அந்த பைத்தியம் என்ன வேண்டுகிறான் என்று கவனித்தார். அப்போது அந்த பைத்தியக்காரன், "கடவுளே, நீ எனக்கு பத்து வெள்ளி கொடுக்க நினைத்தால் நீயே நேரில் வந்து கொடுத்து விடு. மற்றவர்களிடம் கொடுக்காதே. அவர்கள் பத்து வெள்ளியில் ஐந்து வெள்ளியை எடுத்துக் கொண்டு மீதம் உள்ள ஐந்து வெள்ளியைத்தான் எனக்குக் கொடுக்கிறார்கள்"

ஜீ.கே.



படிப்பகம்

www.padippakam.com




இன்று பல துறைகளில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வருவதால் பாரம்பரியமாக இருந்து வந்த பெண்களின் குறுகிய மனப்பாங்கு தற்பொழுது விரிவடைந்து வருகின்றது. அரசாங்கத்தின் முற்போக்குக் கொள்கைகளினால் கிராமிய பெண்கள் பொருளாதார நட வடிக்கைகளில் இப்பொழுது ஈடுபட்டு வருகின்றார்கள்.

இதுவரை ஆண்கள் மாத்திரமே ஈடுபட்டு வந்த பல தொழில் துறைகளில் பெண்களும் பங்கேற்று வருகின்றார்கள். பல பெண்கள் இப்பொழுது அதியுயர் பதவிகளைக்கூட வகித்து வருவது பெருமை தருவதாகும். பெண்களின் முன்னேற்றம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வேளையில் அவர்களின் பூரண வளர்ச்சியில் சில குறைபாடுகள், பாலியல் குற்றங்கள், வறுமை ஆகியவற்றினால் பெண்கள் தாழ்த்தப்பட்டு வருவதையும் காணக்கூடியதாகவே இருக்கிறது.

1970/80 ஆண்டு காலப் பகுதியிலேயே தொடர்பு சாதனங்களில் பெண்களின் பங்களிப்பு ஆரம்பமானது. தற்போது பத்திரிகைத்துறையை விட (Print media) வானொலி, தொலைக்காட்சி நிலையங்களில் (Electronic media) பெண்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளது. பெண்கள் இன்று செய்தியாளர்களாக, செய்தி வாசிப்பவர்களாக அறிவிப்பாளர்கள், கேமரா இயக்குனர்களாக, நெறிப்படுத்துபவர்களாக, தொழில் நுட்பக் கருவிகளை இயக்குபவர்களாகப் பணியாற்றி வருகின்றனர். 1996ஆம் ஆண்டு வானொலி நிலையங்களில் 67% ஆண்களின் பங்களிப்பும், 4% பெண்களின் பங்களிப்பும் இருந்தது. தொலைக்காட்சி நிலையங்களில் 92% ஆண்களின் பங்களிப்பும், 17% பெண்களின் பங்களிப்பும் இருந்து பத்திரிகைத் துறையில் பிரதம ஆசிரியர்கள் ஆண்கள் 31%ஆகவும், பெண்கள் 16% ஆகவும் இருந்தனர். ஆனால் 1990 / 2000ஆம் ஆண்டுளில் இத்துறைகளில் ஆண்களும், பெண்களும் சம அளவில் காணப்படுகின்றனர். தற்போது பத்திரிகை நிறுவனங்களில் ஆசிரியர் பீடங்களில் கூடுதலாகப் பெண்களே கடமை யாற்றுவதாகக் கூறப்படுகிறது. இவர்களில் உதவி ஆசிரியர் (Sub-Editors), அலுவலுக நிருபர்கள் (Reporters) ஆகியோர் அடங்குவர்.

வானொலி, தொலைக்காட்சி நிலையங்களை எடுத்துக் கொண்டாலும் ஆண்களின் பங்களிப்பைப் பெண்களே அளித்து வருவதாகக் கூறப்படுகிறது. இந்த வகையில் பெண்கள் பல பிரச்சினைகளையும் எதிர்நோக்க வேண்டியி ருக்கிறது. சில சமயங்களில் பெண் ஒருவரால் ஒரு குறிப்பிட்ட பணியை மேற்கொள்ள முடியாது என ஒதுக்கி வைத்து விடப்படுவதும் உண்டு. பெண்கள் அலுவலகங்களில் 8 மணி நேரம் வேலை செய்துவிட்டு வீடு சென்றபின்னும் வீட்டுக் கடமைகளையும் தொடர்ந்து ஆற்ற வேண்டியிருக்கிறது. பிள்ளைகளைக் கவனிப்பது, சமைப்பது, துணி துவைப்பது மற்றும் ஏனைய வேலைகளும் கூட அவர்களுக்காகத் தினமும் காத்திருக்கின்றன. ஆசிரியர் பீடத்தில் உயர் பதவி வகிக்கும் ஒரு பெண், பத்திரிகை அச்சுக்கு போகும்வரை தன் கடமையில் கண்ணாயிருப்பதற்கு நிர்ப்பந்திக்கப் படுகிறாள். அவள் வீடு திரும்ப நள்ளிரவாகியும் விடக்கூடும். அச்சமயத்தில் அப்பெண் அயலவர்களின் வீண் பேச்சுக்கு ஆளாக நேரிடுகிறது. வீட்டாரின் வசை மொழிக்கும் ஆளாக நேரலாம்.

திருமணமானவரானால் கணவனின் முணு முணுப்புக்குச் செவி கொடுக்க வேண்டிவந்து விடுகிறது. ஒரே துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தால் கணவன் மனைவிக்கிடையே புரிந்துணர்வு இருக்கும். இதனால் பிரச்சினை ஏதும் இடம்பெற வழியேற்படமாட்டாது. பத்திரிகைத் துறையை (Print media) போலவே வானொலி தொலைக்காட்சிகளிலோ வெளிவருவது மிகக் குறைவு. ஆனால் பெண்கள் அவமானப்படும் சம்பவங்களோ எளிதில் வெளியாகி விடுகிறது. இராணுவ சேவையில் உள்ள பெண்களின் கஷ்டங்கள் மற்றும் அவர்களது பெருமைகள் திறமைகள் என்பனவெல்லாம் அநேகமாக எடுத்துக்காட்டப் படுவதில்லை. அவர்கள் பாராட்டப்படுவதும் கூட அரிதாகி விடுகிறது.

வெளிநாட்டுத் திரைப்படங்கள், தொலைக் காட்சி நாடகங்களில் பெண்கள் உயர் பதவி வகிப்பதாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். எது எப்படி இருப்பினும் பெண்கள் சர்வதேச மட்டத்தில் இன்று அதிஉயர் பதவி வகித்துப் பெருமை அடைந்து வருகின்றனர் என்பதை எவருமே மறுப்பதற்கில்லை அல்லவா?


படிப்பகம்

www.padippakam.com



MSC
Multimedia Super Corridor
An MSC - Status Company

HCL

HCL's World of solutions

IT Consulting
E-Commerce
SAP Consultancy
Systems Integration
Vertical Applications
Facilities Management
Software Development
System Support services
Network & Intranet services

Electronic Governance
Banking & Finance
Transport
Manufacturing
Telecom
Energy



*For the best cutting edge IT solutions that matter...*

HCL INFOSYSTEM (M) SDN. BHD. (Co. No. 439208-V)
Level 51, Tower 2, Petronas Twin Towers Kuala Lumpur, City Centre 50088 Kuala Lumpur.
Tel: 03-2018588 Fax: 03-2018587


படிப்பகம்

www.padippakam.com

# SUBA OPTICAL HOUSE



மூக்குக் கண்ணாடிகளுக்கும், கொன்டெக் லென்சுகளுக்கும்
அழகிய வடிவிலான கண்ணாடிப் ப்ரேம்களுக்கும்,
சன் கிளாஸுக்கும் இன்றே வருகை தாருங்கள்!

**WE HAVE EXCLUSIVE DESIGNS OF FRAMES AND SUN GLASSES**

**For Glasses and Contact-Lens Visit us today for free testing and consultations.**

**One Stop Optical Centre in Klang**

**50% கழிவு வழங்கப்படும்.**

**Established since 1977**

**SUBA OPTICAL HOUSE**
**No. 17-A, Jalan Dato Hamzah, 41000 Klang,**
**Tel: 03-33717941.**

படிப்பகம்

www.padippakam.com


## உறக்கம் போதும் உணர்ந்தெழு

# தமிழா!



அடிமைக் கிடங்கில் ஆழ்ந்தே கிடக்கும்
மிடிமைத் தமிழனே! எண்ணிப் பாரடா!
உனக்கொரு நாடுதான் உலகினி லுண்டா?
மனத்துள் கொஞ்சம் வருடிப் பாரடா!
செல்வம் கொழிக்கச் சீரொடு வாழ்ந்தோர்
எள்ளும் வகையில் இழிந்தது கொடுமை!
நுண்ணும் வழியெலாம் நலமதை யிழந்தோர்
அண்டிய வழியில் அடிமை யாயினர்!
தரணியில் செழித்த தமிழர் கூட்டம்
உரமிலா வீழ்ந்ததோ ஒற்றுமை குறைவால்!
கருவிலே வீரம் கவின்நிறைப் பெற்றோர்
தெருவினில் வதைபடல் திருநிறை யாகுமோ?
ஒருவர்க் கொருவர் உதவல் விடுத்தே
அருள்நிலை மறந்ததால் ஆணவம் வென்றதே!
சூடு சுரணை இழந்தது போதும்,
நாடு நமக்கென நலம்பெற வேண்டும்!
ஈழம் அமைய இன்னுயிர் நல்கும்
வேழம் போன்ற வீரரை யுணர்ந்தே
தமிழனே! நீயும் தகுபயன் விளைத்திடு
அமிழ்தாய் உன்றன் அரும்பணி நல்கிடு!
தமிழனாய்ப் பிறந்தும் தறுதலை போலே
குவிக்கும் இழிச்செயல் குலைந்திட முயன்றிடு!
காட்டிக் கொடுக்கும் கயவர் தம்மை
நாட்டில் கண்டால் நயம்படத் திருத்திடு
தறுதலை யவனோ தமிழ னில்லை
அறுகழி தமிழனோ அசலே யில்லை!
உனக்கொரு நாடு இலாத தாலே
வனப்புடன் உன்னை மதிப்பார் யாரடா?
உறக்கம் போதும் உணர்ந்தெழு தமிழா!
சிறப்பாய் ஈழம் சீர்பெற வெல்லுமே!

**- கவிஞர் பெ.மு. இளம்வழுதி,**
பத்தாங் பெர்சுந்தை

## அறிவியல்

# இணையமானாள்

**தமிழ்ஞானப்பித்தன்**



உடலாய் உயிராய் உரு வெடுத்தாள்
உள்ளொளி மெய்யென வளர்ந்தாள்
மடமையை விரட்டிமணி மேகலையானாள்
மனிதநேயத் தேம்பா வணியானாள்
கடமையில் கனிந்துசிந்தா மணியானாள்
கருணையில் இறவா இயேசு
காவியமானாள்
படமேடைப் பாட்டில்கண்ண தாசனுமானாள்
நடனமாடி நற்றமிழ் பரதமானாள்.

சொல்லாப் பொருளாகி அருட்பாவானாள்,
சொல்லி காதலித்துக் கன்னியானாள்,
நல்லறமூட்டி நலியாப் பாரதியானாள்,
நமக்கு குடும்ப விளக்கமளித்தாள்.
கல்மதனம் கரைத்து கண்ணகியானாள்,
காலம்காட்டி மாதவியாய் வந்தாள்
இல்லறப் பயிர்வளர நன்னூல் தந்து,
இனியப் பாவினில் இயற்றமிழானாள்!
தாய்குல வாய்மைமிகு வள்ளுவரானாள்
தாரமாய் தமிழுணர்வை அளித்தாள்
சேய்மலர் கண்ணனாகி கனிவு தந்தாள்
பாய்விரி கோபியரோடு ஆடினாள்
காயாதபெண் மானாகி கனிவு தந்தாள்
கடமையில் கற்பகத் தெய்வமானாள்
ஓயாதவோர் நேயமுடை அன்னைத்தமிழ்
தேயாத அறிவியல் இணையமானாள்!


படிப்பகம்

www.padippakam.com

# கவிச்சோலை

## நீதான் என் உயிர்

எந்தன் உயிரே என தாயே
என்னை விட்டுப் பிரியாதே!

அன்பே அழகே ஆருயிரே
அன்னை என்னும் அரும்பொருளே
அன்புத் தெய்வம் நீதானே
திசையிலும் உன்னைத் தொழுவேனே!

பாசம் என்று பார்க்கையிலே
நேசம் என்ற நெய்வார்த்து
வாசம் வீசும் பண்போடு
வளர்த்தாய் என்னைத் தெம்போடு!

அன்னை உந்தன் கனிவன்பால்
என்னை நானே மறந்தேனே
மென்மை என்ற சொல்லுக்கே
மேன்மை சேர்த்ததும் நீயே!

மெய்யாய் சொல்வேன் கேளாயோ
தாய்ப்போல் தெய்வம் வேறில்லை
என்னுயிர் உடலை பிரியும்வரை
உன்னுயிர் தானே உயர்வெனக்கு!

**கஸ்தூரி கிருஷ்ணன்,**
பகாங்.

## கழுவி விடுங்கள்

சகதியிலே
விழுந்து விட்டது
இளம் சந்தனக்கட்டை

கிளைகளாக
ஓடிவரும் சாக்கடை
சகதி நீர்
அதன்மேல் பட்டு
அதன் "ஒரிஜினல்"
மணத்தினை
இழக்கச் செய்கிறதே

எங்கே
இருக்கின்றீர் மனிதரே
ஓடி வாருங்கள்
உங்களின் பொன்னான
திருக்கரங்களால்
அந்தக் கட்டையைக்
கரையேற்றி விடுங்கள்!

சமுதாய மத்தியில்
அது மணம்பரப்பக்
கழுவிவிடுங்கள்!

**எம். சன்னாசி நாயுடு**
மாசாய், ஜோகூர்.

## வாக்குப்பெட்டி

புன்னகையால்
மாலை கட்டி
தூதோலை ஒன்று
அனுப்பி இருக்கிறது!

நாமிட்ட புள்ளி
நாம் வைத்த குறியால்தான்
வாக்குப் பெட்டிக்கே
மணம் சேர்ந்ததாம்

ஒடிந்து போன
நமது சலுகைகளை
வடித்துப் பார்க்க
வட்ட மேசைக்கு
வாவென்று
தூதே வருகிறது....!

அது கூட
நமது வாதத்தை
வெறுத்துப் பார்க்காமல்
வறுத்துப் பார்த்து
நியாயம் பேச
முன் வருகிறது

முறிந்து போன
உன் உரிமைகளை
முறுக்குப் போல் பிசைந்து
முதுகில் தொ(தூ)ங்க விட்டு,
வேடிக்கைக் காட்டாமல்....!

உரிமையை நோக்கி
உரிமைகளை நோக்கி
ஊர்வலம் போ....!
ஊரறியச் செய்!

**வீர.இராமன்,** ஜோகூர்.

## நான் உயர்திணை!

"சீனி" என்று
எழுதி வைத்தேன்
எந்த எறும்பும் எட்டிப்பார்க்கவில்லை

காகித பூக்களை
கட்டாக கட்டிவைத்தும்
எந்த ஈயும் மொய்க்கவில்லை

நான் மட்டும் "மைக்கில்" மயங்கி
ஒவ்வொரு ஐந்து வருடமும்
முகத்தில் எனக்கு நானே
குறி போட்டுக் கொள்கிறேன்.

**வெ. நடராஜா**
தாமான் அங்காசா.

## பொறுமைக்கும் எல்லையுண்டு

மாதச் சம்பளம் கோரிக் கோரி
நாவில் எச்சில் வறண்டதய்யா
பொறுத்திருங்கள் வருமென்று
பொய்யுரைத்தது போதுமய்யா!

காத்திருந்த காலமெலலாம்
மலையேறி விட்டதய்யா
தன் கையே தனக்குதவியென்று
தெரிந்து கொண்டு விட்டோமய்யா

எங்களுக்கும் காலம் வரும்
பொறுத்திருந்து பாருமய்யா
ஓட்டுக் கேட்டு வரும்போது
எல்லாம் உனக்கு புரியுமய்யா!

**தமிழ்ச்செல்வன்**
நெகிரி செம்பிலான்.

## என் எழுத்தும் பேப்பரில் வரணும்

எனக்கும்
எழுத ஆசை
பேப்பரில் பேர்
வரணும்னு ரொம்ப ஆசை
பலராமன் பெயர்
படத்துடன் வருகிறது
அடிக்கடி வருகிறது
குறைப்பாட்டுக்கு கொண்டார்
குமரன்!
நன்றாக எழுதியும்
வெளிவரக்காணோம்
என்ன எழுதினாய்
என்பதா முக்கியம்?
யாரைத் தெரியும் உனக்கு?
பலராமன் அக்கா மகன்
பேப்பரில் வேலை செய்யுறான்
அதனால்தான்
குப்பையை அனுப்பினாலும்
குண்டு குண்டாய் வருகிறது
உனக்குப் பேப்பரில்
சொந்தக்காரன் இல்லையா?
உன் சாதிக்காரனாவது
இருக்கானா?
உறவு வைத்துக் கொள்
உன் பெயரும்
பேப்பரில் வரும்
சத்தியமான சொல்
இதை நம்பு!

**சேந்தன்,** ஜோகூர் பாரு.




படிப்பகம்

www.padippakam.com

## என் ஆசை

பிரபாகரனே
தமிழ்த்தாயின்
போர் மகனே!
உன்னால் அல்லவா
புலிகளுக்குப் பெருமை!
புலிகளால் அல்லவா
தமிழனுக்கு பெருமை!
ஆண்மை மிக்க தமிழனே
ஆளும் காலம் அருகிலுண்டு
புலித் தமிழனே!
சிங்கத் தமிழனே!
தயங்காதே தமிழ் மகனே!
வெற்றி நிச்சயம்
போற்றி புகழ்கின்றேன் - நீ
ஆற்றிடும் அரும் போருக்கு!

**காரைக்குடி கண்ணகிதாசன்,**
ஷா ஆலம்.



## பயணம்

காலை
பசியாறல்...

மதியம்
உணவு....

மாலை
தேநீர்...

இடையிடையே
வெட்டிப்
பேச்சுக்கள்....

இரவு
விருந்து...

இதுவா
தமிழனின்
பயணம்...?

கம்பன்
கண்ட அமுது
கரையில்
கவிச்சுவைகள்
பருகு....
பாட்டன்
பாரதி
குயிலாய்

இசைத்த
தெம்மாங்கை
பாடு....

பாரதிக்கு தாசனாய்
புறப்பட்ட
அரிமா வேங்கையவனின்
தீப்பிழம்பு கவிதையை
கனவாக்கு...

கண்ணதாசனும்
வாலியும்
தீட்டிய
கீதத்தை
சந்தோஷமாய்
பாடு.....

சி. கமலநாதன்
பைரோஜி
முதல்
ரோஜா மலர்
இராஜகுமாரனையும்
தெருப்புழுதி
இளஞ்செல்வனும்
கனா மகுடங்கள்
அக்கினியும்

இந்தச்
சமூகத்தின்
சொத்துக்களில்
பூத்த
புதுகவிகள்
இவர்களையும்
பார்...

தேர்
இழுத்தவனின்
கதை
நமக்கு
தேவையில்லை...

ஊர் முழுதும்
சுரண்டும்
உலுத்தனின்
உறவை
துண்டிப்போம்...

அதுதான்
நமது வெற்றி
பயணம்....

**கு. தேவேந்திரன்,**
பாங்கி.

## அன்பு

அன்புதான் அனைத்தும்
அன்புதான் சிவமும்
இறைபால் அன்புகாட்டும்
இறையடியார்காள்
இறைபடைப்பாம் மனிதர்காள்
அன்பு பாராட்டுவது எக்காலம்?

கண்ணுக்குத் தெரியா
வேதவிழுப் பொருள்கண்
அன்பு கொள்ளும் மானிடர்காள்
உன் சகோதரன்பால்
அன்பு பரிமாறுவது எக்காலம்?

மக்கட் தொண்டே
மகேசன் தொண்டென்று
நீங்கள் அறியாததா?
ஆலயம் பதினாயிரம்
நாட்டலைவிட ஏழைகண்
நாட்டம் காட்டுவது
உயர்ந்தது என்பது உணராததா?

**சரவணன் இராமச்சந்திரன்,**
தாமான் மேடான்.

## மாதச் சம்பளம்

புயல் வந்து
புடிங்கிக் கொண்டு
போவதற்குள்
வாயு மண்டலம்
பைகளைத் தேடி
இப்பொழுது
எங்கள் வயிறுகளில்
நிரம்பிக் கொண்டது!
அதனால்
சோற்றுக்கு வாயுண்டு
வயிறில்லை.

குனிந்து நிமிரும்
எங்கள் குலத்துக்கு
அரை வயிறுதான்.
கால் வயிறு காற்றும்
குவளைத் தண்ணீரும்.

ஒரு பிடி சோறு
அதற்குத்தான்
கேட்கிறோம்
மாதச் சம்பளம்

**கோவி. குட்டப்பன்**
பண்டார் சன் வே

## தமிழனே

தமிழனே.........
குனிந்தது போதும் - குனிந்த
தலையை நிமிர்த்திப் பார்
உன்னைச் சுற்றிலும் கேலி செய்திடும்
உலகத்தை நிமிர்ந்து பார்!

தமிழனே.........
நீ செய்திட்ட சாதனைகளை - முடக்கி
வரலாற்றில் மறக்க செய்தனர்
செய்திட்ட சாதனைகள் நிலைக்க
இன்றே
புயலெனப்
புரட்சி செய்திடுவாய்!

தமிழனே........
சாதனையும் புரட்சியும் உனக்கென்ன
புதிதா!
புரட்சிகள் செய்து சாதனை
புரிவதில்
நம்மை வெல்பவர் உண்டோ!

**பூ. சிவா,** சுங்கை.



உள்ளத்தால் தீயிடுவாய் உண்மைக்குக் கள்ளமிட்டு
பள்ளத்தில் தள்ளி படுகாயம் - முள்குத்த
என்னதான் காண்பாயோ, ஏனழிப்போ வஞ்சத்தால்
என்னேகாண் நெஞ்சில் இனிப்பு!

**சி.வே. இளங்கதிரவன்,** பத்துகாஜா.


படிப்பகம்

www.padippakam.com



அறிவுஜீவி

*புஷ்பா த/பெ இராமன், கோலப்பிலா*

***மாதச் சம்பளம் நடைமுறைக்கு வந்தால் தோட்ட மக்கள் நிர்வாகத்திற்கு அடிமைகள்போல் உழைக்க வேண்டும் என்று தோட்ட மக்கள் நினைக்கின்றார்கள்! கடுமையான உழைப்பாளிகளுக்கும் சோம்பேறிகளுக்கும் ஒரே சம்பளம் என்பதால் பலர் இத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இப்பிரச்னைக்குத் தீர்வுதான் என்ன?***

மாதச் சம்பளப் பிரச்சனை மிக நீண்ட நாளாக நமது தொழிலாளி வர்க்கத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது. இந்த மாதச் சம்பளக் கோரிக்கைக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு.

மலாயாவில் வேலை செய்யும் இந்தியத் தொழிலாளர்களின் நலன் கருதிய இந்திய அரசு இந்திய குடிநுழைவுத்துறை (Immigration) சட்டம் 1922-ன் வழி ஒரு அடிப்படைச் சம்பள முறையை வற்புறுத்தியது. இது மலாயா அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1923ம் ஆண்டின் தொழிலாளர் சட்டத்தில் இந்திய இமிகிரேசன் கமிட்டி (IIC)க்கு சம்பள முறையை நிர்ணயம் செய்ய அதிகாரம் வழங்கியது. இந்திய இமிகிரேசன் கமிட்டியின் முதலாவது பேச்சுவார்த்தை 9-2-1924ல் கோல சிலாங்கூரில் நடைபெற்றது. இதை முதலாளிகள் சங்கம் கடுமையாக எதிர்த்தது.

1924 முதல் 1930 வரையில் IIC ஏழு சம்பளப் பேச்சு வார்த்தைகளை நடத்தியது. அதிகமான சம்பளம் தொழிலாளர்களைச் சோம்பேறிகளாக்கி உற்பத்தியைக் குறைக்கும் என்று முதலாளிகள் தரப்பில் வாதிட்டார்கள்.

இது ஆரம்ப கால வரலாறு!

மலாயா விடுதலையடைந்து 43 ஆண்டுகளில் மாதச் சம்பளம் பற்றிய ஆய்வுகள், போராட்டங்கள், அறிக்கைகள், வாக்குறுதிகள் என்று பல கட்டங்களைத் தாண்டி நீண்டு கொண்டிருக்கின்றது.

தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கம் தனது தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் வழங்க ஆரம்பித்துள்ளது. இந்த மாதச் சம்பளம் தொழிலாளியின் வாழ்வியல் தேவையை நிறைவு செய்யுமா என்கிற கேள்வி எழுந்திருக்கின்ற போதிலும் இதைக்கூட மற்றைய தோட்ட நிர்வாகங்கள் இன்றுவரை நடைமுறைப்படுத்த முன்வரவில்லை.

கடின உழைப்பாளிக்கும் சோம்பேறிக்கும் ஒரே சம்பளம் என்பது தவறான ஒரு கணிப்பு. உழைப்பில் பேதம் என்பது இல்லை. நமது தோட்ட மக்களின் வாழ்வியலை ஒரு நாள் (24 மணி நேரம் மட்டும்) கூட இருந்து வாழ்ந்து பாருங்கள்! அவர்கள் வாழ்வும் சோகமும் உங்களுக்குப் புரியும்.

நானும் தோட்டப்புறத்தில் இருந்து வந்தவன்தான் என்று தலைவர்கள் பேசக் கேட்டிருப்பீர்கள். தோட்ட வாழ்வின் வலியும் வடுவும் அவர்களுக்கு இருந்திருந்தால் தோட்ட மக்களைப் புறக்கணிக்க அவர்களுக்கு எந்த முகாந்திரமும் இருந்திருக்காது.

**செல்வநாயகி, ஜோகூர்.**

***'முத்தம்' தமிழ்ச் சொல்லா?***

முத்து + அம் என்று சொற்பிரித்துப் பதம் சொல்வார்கள் இலக்கணம் கற்றோர். திராவிடச் சொற்பிறப்பு அகராதி (4062 - 63) இக்குறிப்பில் 'முத்தமிடு' என்பதைத் தமிழ் வழக்காகவும் முக்தி, முத்து என்பவற்றை மலையாள வழக்காகவும் காட்டும் என்கிறார் க.ப. அறவாணன். முத்தம் தமிழ்ச் சொல்லே ஆயினும் முத்தம் காதல் அடிப்படையில் சங்க இலக்கிய நாளில் பின்பற்றப்படவில்லை என்றும் அதுவும் குறிப்பாகப் பொது இடங்களில் இப்பழக்கம் இருந்ததற்கான சான்றே இல்லை என்றும் குறிப்பிடுகின்றார்.

இலக்கியத்தில் முத்தமிடும் பழக்கம் வந்து விட்டதை முதன் முதலாகத் திருக்குறளே எடுத்துரைக்கின்றது.

'பாலொடு தேன் கலந்தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறியநீர்' (குறள் 1121)

***தமிழீழ விடுதலைப் புலிகளைப் "பயங்கரவாதிகள்" என்று முத்திரை குத்தித் தடை செய்திருக்கிறதே அமெரிக்கா?***

17ம் நூற்றாண்டில் முற்பகுதியில் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியில் இருந்து தனக்கு விடுதலை வேண்டும் என்று போராடியது அமெரிக்கா! அங்குள்ள பூர்வகுடிகளான செவ்விந்தியர்களை ஒடுக்கித் துரத்தித் தனது நாடு என்று (4-7-1776ல்) பிரகடனம் செய்தது அமெரிக்கா. உண்மையில் அமெரிக்கா என்பது ஒரு நாடே அல்ல. 50 மாநிலங்களின் கூட்டமைப்பு அது. அதிகமானோர் குடியேறிய ஐரோப்பியரே! அதனால்தான் US (ஐக்கிய நாடுகள்) என்று அழைக்கப்படுகின்றது. 17ம் நூற்றாண்டில் அமெரிக்கர்களைப் பார்த்து பிரிட்டிஷ்காரர்கள் என்ன கூறினார்கள் தெரியுமா? "பயங்கரவாதிகள்" என்றுதான். இன்று அதே அமெரிக்கா சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் (1991) இன்றைய சூப்பர் சக்தியைப் பெற்றது. இப்போது அது விடுதலைத் தாகத்துடன் போராடும் அமைப்புக்களைப் பார்த்துப் பயங்கரவாதிகள் என்று சொல்வது வேடிக்கையானது என்பதைப் புரிந்து கொள்ள



படிப்பகம்

www.padippakam.com



**1920களில் மலாயாவுக்குக் கொண்டுவரப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள்.**

முடிகிறதா? பூர்வகுடிகளைத் துரத்தியடித்து தனது நாடாக்கிய அமெரிக்கர்களுக்கும் பூர்வகுடியாய் நின்று தன் நாட்டை மீட்கப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமான வேறுபாடும் புரியுமே!

***செந்தில்நாதன், மலாக்கா.***

***"நம்மவர்களிடம் சமுதாயப் பற்று குறைந்து கொண்டே வருகிறதே!"***

நாம் யார்? நாமும் சமுதாயத்தில் ஒரு அங்கம்தானே என்கிற எண்ணம் இல்லாதவர்களிடம் இந்தச் சிந்தனைப் போக்கு இருக்கத்தான் செய்கிறது! சுயநலமிக்கவர்களால் சமுதாயத்திற்குப் பயன் ஏதும் இருக்கப் போவதில்லை. அடிப்படையில் இவை இனமானம், மொழிமானம் போன்று குழந்தைப் பருவத்தில் இருந்தே வளர்த்தெடுக்கப்பட வேண்டும். சமுதாயப் பற்றுமிக்க பெற்றோரிடம் இருந்தே சமுதாயப் பற்றுள்ள குழந்தைகள் வர முடியும்.

***நம்மவர்களுக்கு மதுப்பழக்கத்தை பழக்கியவர் யார்?***

ஆதிகாலத்தில் இருந்தே நம்மவர்கள் குடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருப்பதாக இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

நெல்லில் இருந்தே கள் வடித்திருக்கின்றார்கள். மற்றும் தென்னை, பனை போன்றவற்றில் கள்ளையும் அருந்தி இருக்கின்றார்கள். கள்ளைக் குறித்த நறவு, மது, மட்டு, தேறல் ஆகிய சொல்வழக்குகள் இன்றும் தமிழகத்தில் உண்டு. ஆண்களைப் போன்றே பெண்களும் மது அருந்தும் பழக்கம் உள்ளவராக இருந்திருக்கின்றனர்.

*"சிறிய கள் பெறினே எமக்கீயும் மன்னே*
*பெரிய கள் பெறினே*
*யாம் பாடத் தாம் மகிழ்ந்து மன்னே!"*
*(ஔவையார்) - புறநானூறு - 235*

திருவள்ளுவரில் இருந்து பதினெண் கீழ்க் கணக்கு அற இலக்கியங்களும் கள் குடித்தலைக் கண்டித்தே வந்திருக்கின்றன. தனித் தன்மை வாய்ந்த சங்க இலக்கிய சமுதாயம் குறிப்பாக அரச தலைமுறைகள் வீழ்ச்சி அடைந்ததற்கு உரிய தலையாய காரணங்களில் ஒன்று கிரேக்க, உரோமானியர் கொண்டு வந்து பழக்கிய மதுப்பழக்கம் என்பர் வரலாற்றாசிரியர். பிற்காலத்து ஐரோப்பிய வருகையில் இவை நீடித்து நிலைப்பது வேறுகதை!

***லோகேஸ்வரி, செர்டாங்***

***பெண்ணியம் - பெண்விடுதலை பற்றி அதிகம் பேசுகிறார்கள். எழுதுகிறார்கள். நடைமுறையில் பெண் குழந்தை பிறந்தால் முகம் சுளிப்பதைப் பார்க்கிறோம். இது எதனால்?***

பண்டைய தமிழர் தாய்வழிச் சமூக அமைப்பையே கொண்டிருந் தனர். அதாவது தாய்தான் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்தாள். சங்ககாலத்தில் ஆண்களுக்கு நிகரான சமூக அந்தஸ்தைப் பெண்களும் கொண்டிருந்தனர். அக்காலப் புலவர்களுள் 30 பேர் பெண்கள் என்று இலக்கியக் குறிப்புத் தகவல் தருகின்றது. வள்ளுவன் காலத்தில் பெண்ணின் 'பெருந்தக்க யாவுள' என்றான். பெண் குழந்தையே வேண்டுமென்று நோன்பிருந்து பெண் குழந்தை பெற்றாள் என்று ஐங்குறுநூற்றுப் (257) பாடல் குறிப்பிடுகின்றது. பெண்கள் போர்க்களம் சென்று போரிட்டதையும், பாசறைகளில் விளக்கேற்றி யதையும் முல்லைப்பாட்டு (45 - 46) என்னும் இலக்கியம் பகர்கிறது. தாய்த் தெய்வ வழிபாடே தமிழரின் தொன்மை வழிபாடாகவும் இருந்திருக்கின்றது.

வழிபடும் தெய்வமாகவும், சம உரிமை உடைய பவர்களாயும் இருந்த பெண்கள் அடிமையாகவும், கீழாகவும் கருதப்பட்டது ஏன்? எப்போது என்று பார்த்தோமானால் "பெண் எப்போதும் மோட்சம் அடைய முடியாது. ஆணாகப் பிறந்துதான் மோட்சத்தை அடையும் வழி தேட முடியும்" - என்று போதித்த ஜன மதமே சங்க காலத்துக்குப் பின்பு பெண்ணை இழிவு படுத்தியது. அதற்குப் பிந்திய ஆரிய, மொகலாய ஐரோப்பிய வருகைகள் இவற்றைப் பேணி வளர்க்க உதவின. தமிழர் தம் பெயரில் தாய்ப் பெயரை முதலெழுத்தாகக் கொண்டிருக்கும் மரபு கொண்டிருந்தனர் அன்று. ஆனால் இன்று தாய் மொழியில் பெயரிடு வதையே கேவலமாகக் கருது கின்றனர். இத்தனையும் மீறி இன்றைய பெண்கள், ஈழத்தின் போர்க்களத்திலும், கணினி உலகிலும் வரலாறு படைத்திருப்பதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டுதானே உள்ளோம்.

***ஞானசூன்யன், பினக்கோங்***

***படைப்பாளியே படைப்புக்களை விமர்சனம் செய்வதும், படைப்பாற்றல் இல்லாதவர்கள் விமர்சனம் / ஆய்வு செய்வதற்கும் என்ன வித்தியாசம்?***


நல்ல படைப்பாளி நல்ல விமர்சகனாக இருக்க முடியும், படைப்புலக அனுபவம் மிக்கவன்தான் ஆய்வு செய்ய முடியும் என்பது உண்மையல்ல. சமைக்கத் தெரிந்தவன் தான் சாப்பிட முடியும் என்றால் இன்று எத்தனை பேர் பட்டினி இருப்பர்? விமர்சனம் செய்வதற்கு வாழ்வியல் அனுபவம் இருந்தாலே போதுமானது. நடுநிலைமையான விமர்சனம் என்பது தமிழிலக்கியச் சூழலில் அருகிவரும் தருணத்தில் தங்கள் கேள்வி திகைப்பூட்டுகிறது. விமர்சனக்கலை இந்த நாட்டில் வளர வேண்டும் என்ற ஆர்வம் கொண்டுள்ளோம். இதுவளர முடிந்தால் உதவுங்கள். ●



படிப்பகம்

www.padippakam.com

# அன்வார் வழக்கின் தீர்ப்பு!



**மலேசிய நீதித்துறை வரலாற்றில் மிக நீண்ட நாட்கள் நடந்த ஒரு வழக்காகும் இது. இந்த வழக்கின் தீர்ப்பு நாள் நிச்சயிக்கப்பட்ட பின்பு ஒத்திவைக்கப்பட்டது. இறுதியில் கடந்த 8-8-2000 அன்று இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டதுடன் இது முடிவுக்கு வந்தது. அதன் விபரங்கள் அடங்கிய தொகுப்பு இது!**

**(ஆ-ர்)**

முன்னாள் துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தனது பதவிக் காலத்தில் தனது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டார். நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுச் சிறைவாசம் அனுபவித்து வந்தார்.

1993ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கும் மார்ச் மாதத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் பங்சார் திரிவோலி வில்லாவில் உள்ள அன்வாரின் வண்டி ஓட்டுனரான அஸிஸான் அபுபக்கர் (வயது 40) என்பவருடன் ஓரின உறவு கொண்டதாக அன்வார் மீதும் அஸிஸான் மீதும் அதற்கு உடந்தையாக இருந்த அவரின் சுவிகாரத் தம்பி சுக்மா டர்மவான் மீதும் தனித்தனியே குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது.

மலேசிய நீதிமன்ற வரலாற்றில் மிக நீண்ட நாட்கள் நடைபெற்ற ஒரு வழக்கு உண்டென்றால் அது இந்த அன்வார் மீதான வழக்குதான். இந்த வழக்கின் விசாரணை 117நாட்கள் நடைபெற்றன. இந்த வழக்கின் தீர்ப்பு 8-8-2000 அன்று காலை 9.30 மணியளவில் வழங்கப்பட்டது.

## தீர்ப்பின் விபரம்

டத்தோஸ்ரீ அன்வாருக்கு 9 ஆண்டுகள் சிறைத்தண்டனை. சுக்மாவுக்கு 12 ஆண்டுகள், 4 பிரம்படிகள் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது. சுக்மா டர்மவான் தன் மீதான தண்டனையை எதிர்த்து முறையீடு செய்யப் போவதால், தண்டனையை நிறுத்தி வைக்கும்படி அவர் மனு செய்ததினால் அவரின் தண்டனையை நிறுத்தி வைக்கத் தீர்ப்பை வழங்கிய நீதிபதி டத்தோ அரிப்பின் ஜக்கா அனுமதித்தார். அவருக்கு 50 ஆயிரம் வெள்ளி ஜாமீன் அனுமதிக்கப்பட்டதுடன் அவரது அனைத்துலகக் கடப்பிதழை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

## நீதிபதியின் விளக்கம்

இந்த வழக்கின் பிரதான சாட்சியான அஸிஸான் அபுபக்கர் 10 தினங்களாக அளித்த சாட்சியம் முன்னுக்குப் பின் முரணாக இருந்தாலும் அவை குறித்த தெளிவான விளக்கங்களை அவர் அளித்துள்ளார். தொடக்கம் முதல் அவரது எல்லாச் சாட்சியங்களும் தெளிவாகவும் தொடர்புள்ளதாகவும் இருந்து வந்துள்ளது என்பதில் நீதிமன்றம் நிறைவு கொள்கிறது.

அவரைப் பொறுத்தவரை அவர் பொய்சொல்ல வேண்டிய அவசியமில்லை. தாம் ஓரின உறவுக்கு ஆளானதாக உலகிற்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இதனால் அவருக்கு ஏதும் நன்மைகள் ஏற்படப்போவதில்லை. மாறாக இதனால் ஏற்படும் இழப்புக்கள்தான் அதிகம்.

இருதரப்புச் சாட்சியங்களையும் கவனமாகப் பரிசீலித்த பின்னர் டத்தோஸ்ரீ அன்வாருக்கும் சுக்மா டர்மவானுக்கும் எதிரான குற்றச்சாட்டை அரசுத் தரப்பு எவ்வித


படிப்பகம்

www.padippakam.com

சந்தேகத்திற்கும் இடமில்லாமல் நிருபித்துள்ளது. எனவே அவ்விருவரும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கின்றேன்.

*அன்வாரின் கருணை மனு*

"இந்தத் தீர்ப்பு இப்படித்தான் இருக்கும் என்பதை உணர்ந்து நேற்றிரவே (தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முதல் நாள்) மூன்று பக்கக் கருணை மனுவைத் தயாரித்துள்ளேன்." என்றார் அன்வார் நீதிமன்றத்தில்.

நான் 17 ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றி யுள்ளேன். நான் தற்போது குற்றவாளியாக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருப்பது நீதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவதற்குச் செய்ய வேண்டிய தியாகமாகத்தான் கருதுகின்றேன். சிறைக் கம்பிகளுக்கும் பின்னால் எனது போராட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கும்."

*அன்வார்.... இனி..*

தீர்ப்புக்குப் பின் அன்வார் மிகவும் அமைதியாகக் காணப்பட்டார். குற்றவாளிக் கூண்டில் இருந்து வெளியேறிய அவரை அவரது மனைவியும் அவரது மூன்று மகள்களும் கட்டியணைத்துக் கண்ணீர் விட்டனர்.

இந்தத் தண்டனையுடன் சேர்த்து அன்வார் மொத்தம் 15 ஆண்டுகாலம் சிறைத்தண்டனை அனுபவிப்பார். தண்டனைக் காலம் 2014ம் ஆண்டுவரை தொடரும். அதுவரை அவர் சிறைவாசம் அனுபவிக்க வேண்டியிருக்கும். நன்னடைத்தையின் பேரில் சிறைத்தண்டனை குறைக்கப் பட்டால் ஒழிய அதற்கு முன்பு அன்வார் வெளிவருவது சாத்தியமில்லை.

*பிரதமர் கருத்து*

"இந்த வழக்கு நீண்ட காலம் நடைபெற்று இருக்கின்றது. இதற்கு முன்பு இப்படி ஒரு வழக்கு நீண்ட காலம் நீடித்ததில்லை."

"தன்னைத் தற்காத்துக் கொள்ள அன்வாருக்கு எல்லா வாய்ப்புக்களும் வழங்கப்பட்டன. ஆனால் அவர் இந்தக் குற்றச்சாட்டுக்கள் எல்லாம் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட சதி என்றே சொல்லி வந்துள்ளார்."

"டத்தோ அன்வார் இத்தகைய சதித்திட்டம் பற்றி இதற்கு முன்பு கூறியதில்லை. மாறாக தாம் கைது செய்யப்பட்ட பின்பே அப்படி ஒன்றைக் கூறினார்."

"ஓரின உறவு வழக்கு தொடர்பாக டத்தோஸ்ரீ அன்வாருக்கு வழங்கப்பட்ட சிறைத்தண்டனை அவர் மீது கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் சரியான தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் நீதிமன்றத்தின் முடிவு.

*அமைதிப் பேரணிக்குத் தடை*

இவ்வழக்கின் தீர்ப்பு நாளன்று அமைதிப் பேரணி நடத்த அனுமதி கோரப்பட்டபோது, 'முதலில் அமைதியாகக் கூடுகின்ற எந்தவொரு கூட்டமும் பின்னர் பதட்ட நிலையில் போய் விடுவது வழக்கமான ஒன்று. ஆகவே, பதட்டநிலை உருவாகுவதை நாங்கள் விரும்பவில்லை.

ஆகவே ஆரம்பத்திலேயே அப்படியொரு கூட்டத்தை அனுமதிக்காததே சிறந்தது என்று உள்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ அப்துல்லா படாவி தெரிவித்தார்.



*தீர்ப்பு பற்றி...*

"நண்பர்கள் என்ப[illegible] மிக முக்கியமானவர்கள் என்பதற்காகவோ மலேசியா யாரையும் பிரித்தாண்டதில்லை. பாதிக்கப்பட்ட ஒருவருக்குத் தகுந்த நீதி கிடைக்க வேண்டும் என்பதே மலேசியாவின் கொள்கை. அன்வார் தனக்கு எதிரான தண்டனையை எதிர்த்து மேல் நீதிமன்றங்களில் முறையீடு செய்ய அவருக்கு இன்னும் வாய்ப்பு இருக்கிறது"

*- டத்தோஸ்ரீ மகாதீர் முகம்மது, பிரதமர்.*

"அன்வாருக்கு விதிக்கப்பட்ட இந்தச் சிறைத் தண்டனையானது வரும் பொதுத் தேர்தலில் பொதுமக்களின் சக்தியைத் திரட்ட எங்களுக்கு ஒரு உத்வேகத்தை வழங்கியுள்ளது.நீதியை நிலைநாட்ட அன்வார் மீதான இந்த முடிவு எங்களுக்கு ஒரு வலிமையான சாதனமாக விளங்கும்.

*- கெ-அடிலான், பாஸ், ஜ.செ.க, பி.ஆர்.எம் கட்சிகள் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக் கூட்டணி.*

"நீதிமன்ற விசாரணையின்போது பல குளறுபடிகள் இருந்த நிலையிலும் இப்படி ஒரு தீர்ப்பு வெளிவந்திருப்பது அதிர்ச்சியாக இருக்கிறது. இந்த நீதிமன்றத் தீர்ப்பை வழக்கறிஞர் மன்றம் அதிர்ச்சியாகக் கருதுகின்றது.

*- வழக்கறிஞர் மன்றத்தின் உதவித் தலைவர், ரோய் ராஜசிங்கம்.*

"ஓரின உறவு என்பது மிகவும் அருவருக்கத்தக்க செயலாகும். நமது சமூக அமைப்பில் இது மிகவும் கண்டிக்கத்தக்க செயல். இது போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று இந்தச் சமூகம் எதிர்பார்க்கின்றது."

*- நீதிபதி அரிப்பின் ஜக்கா.*

அன்வார் மீதான வழக்கு விசாரணை முடிவடைந்து விட்டதால் இப்போது விளக்கம் சொல்வதில் தவறு கிடையாது. உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தில் அன்வார் கைது செய்யப்பட்டடதற்கும் அவரது கண் பகுதியில் வீக்கம் ஏற்பட்டதற்கும் டாக்டர் மகாதீர் பொறுப்பல்ல. உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அன்வார் கைது செய்யப்படுவார் என்பது தனக்கு உண்மையிலேயே தெரியாது என்று மகாதீர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு டாவோஸில் சந்தித்தபோது கூறியுள்ளார்.

*- சிங்கப்பூர் மூத்த அமைச்சர், லீ குவான் இயூ.*



படிப்பகம்

www.padippakam.com



# கணினி கேள்வி - பதில்

நளினா சிவகுருநாதன்
மின் அஞ்சல்: **nalinam@yahoo.com**
இணையம்: **www.nalinam.com**

*சி. ரம்யா, துரோலாக்*

*இணையத்தில் தேடுவதற்கான தனித்த மென்பொருள் ஏதாவது உண்டா?*

இணையத்தில் தகவல்களைத் தேடுவதற்கான 'Search engine'-கள் ஏராளமானவை இணையத்திலேயே இருக்கும்போது தனித்த மென்பொருளை தாங்கள் தேடுவது ஏனோ? yahoo (www.yahoo.com), Alta Vista (www altavista.com) போன்ற அயல்நாட்டு தேடு இயந்திரங்களும் அண்மையில் அறிமுகப் படுத்தப்பட்ட நம் நாட்டு தேடு இயந்திரமான catcha.com-மும் இவற்றுள் சிலவாகும்.

*இணையப் பயன்பாடு பற்றிய நூல்கள் தமிழில் ஏன் வெளியிடுவதில்லை. தமிழகத்தில் வெளியாகும் நூல்களைப் படித்துப் புரிந்து கொள்ள முடியவில்லை.*

சினிமா மற்றும் கேளிக்கைத் தொடர்பான நூல்களுக்குத் தரும் வரவேற்பைத் தமிழர்கள் இம்மாதிரி கணினித் தொடர்பான நூல்களுக்குத் தர மாட்டார்கள் என்ற ஐயம் மலேசியாவில் இவ்வகை முயற்சிகள் குறைந்திருக்கக் காரணமாக இருக்கலாம். மிகச் சிறிய எண்ணிக்கையிலான பயன்பாட்டாளர்களுக்காக நூல்கள் வெளியிட்டு நொடித்துப் போக பாவம் யார்தான் முன்வருவார்கள்? தமிழகத்து நூல்கள் புரிந்துக் கொள்வதற்கு கடினமாக இருக்கின்றன என்ற உங்கள் முறையீடு ஓரளவு ஞாயமானதுதான். எனினும், இணையப் பயன்பாடு தொடர்பான தமிழ் நூல்களில் எனது கருத்தைக் கவர்ந்த, பிரபல தமிழக எழுத்தாளர் சுஜாதாவின் 'வீட்டுக்குள் வரும் உலகம்' நூலை வாங்கி நீங்களும் படித்துப் பாருங்களேன்!

*ச. ஜெகநாதன், கோலப்பிலா*

*கணினி பற்றி இவ்வளவு தெரிந்திருக்கும் நீங்களும் உங்கள் கணவரும் கணினிக்கான ஒரு சஞ்சிகை தொடங்கினால் என்ன?*

உங்களின் இந்தக் கேள்விக்கு, சி. ரம்யாவின் இரண்டாவது கேள்விக்கான பதிலின் முதல் பகுதி பொருந்தும் என்று நினைக்கிறேன். கடந்த 7 வருடங்களாகப் பல்வேறு 'நளினம்' தமிழ் மென்பொருளை வெளியிட்டு முற்றிலும் இலவசமாக விநியோகித்து வரும் நாங்கள், இத்துறையில் கடந்து வந்த பாதைகள் கரடுமுரடானவை. இந்நிலையில், சமுதாயத்திற்கு விழிப்பூட்டும் இலட்சியத்துடன் துடிப்பாகச் செயல்பட்டு வரும் செம்பருத்தியுடன் இணைந்து சேவை செய்வதையே இப்போதைக்கு நாங்கள் நிறைவாக நினைக்கிறோம். எனினும், எங்களது படைப்பில் தமிழ்க் கணினி நூல் ஒன்றை இவ்வாண்டு இறுதியில் நீங்கள் எதிர்பார்க்கலாம். இறுதியாக ஒன்று... உங்களைப்போல் ஆர்வமுள்ளோர் அதிகமானவர் இருந்திருந்தால் இந்நேரம் ஆயிரக்கணக்கான நூல்கள் / சஞ்சிகைகள் இந்நாட்டில் வெளியாகியிருக்கும்!

*சமீபத்தில் சிங்கப்பூரில் நடந்த இணைய மாநாட்டின் பயன்கள் என்ன?*

உலகமெங்கிலும் உள்ள இந்தியக் கணினி நிபுணர்களையும், ஆர்வலர்களையும் ஒன்று கூட்டிய பெருமை சமீபத்தில் நடந்து முடிந்த இந்த இணைய மாநாட்டைச் சாரும். தமிழ் மற்றும் கணினித் துறையைச் சேர்ந்த பல நல்லுள்ளங்களின் அயராத முயற்சியிலும் (மலேசியாவின் திரு. முரசு முத்தெழிலன் இதில்



படிப்பகம்

www.padippakam.com

குறிப்பிடத்தக்கவர்) சிங்கப்பூர் இந்தியர்களின் வற்றாத ஆதரவிலும் உருவாகி, செவ்வனே நடந்தேறிய இம்மாநாடு, தமிழ்க் கணினியின் தோற்றம், வளர்ச்சி, எதிர்காலம் போன்ற பல்வேறு விசயங்களுக்கு வடிகாலாய் அமைந்தது. உலகின் பல பாகங்களில் சிதறிக் கிடக்கும் இந்தியக் கணினி நிபுணர்கள் ஒன்று கூடி சீரான ஆக்ககரமான பல திட்டங்களை வகுக்கவும் இவ்விணையப் பயன் பாட்டாளர்களுக்கான பல பயனுள்ள கண் காட்சிகள் இம்மாநாட்டில் இலவச மாகவே நடத்தப்பட்டது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

*மு. கருணாகரன், கோலாலம்பூர்*

*இணையத் தொடர்புக்காக சில தொலைத் தொடர்பு நிறுவனங்கள் கட்டணம் வசூலிக்கின்றார்கள். MAXIS போன்ற நிறுவனங்கள் இலவசமாகவே வழங்குகிறார்கள். இது எப்படிச் சாத்தியம்?*

இணையத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் சேவையை தற்போது பல நிறுவனங்கள் வழங்கி வருவதால் இத்துறையில் அதிகமான போட்டி நிலவி வருகிறது. இந்நிலையில், பயனீட்டாளர்களைத் தற்காத்துக் கொள்வதற்காக சில நிறுவனங்கள் சிறப்புச் சலுகைகள் வழங்கி வருகின்றன. அவற்றில் ஒன்றுதான் நீங்கள் குறிப்பிட்டுள்ள இலவச இணையத் தொடர்பு. இணையத் தொடர்பை முதலில் இவர்கள் இலவசமாக வழங்கினாலும், பிறகு இணையப் பயன்பாட்டிற்கு ஏற்ப வசூலிக்கப்படும் கட்டணத்தில் அந்த நஷ்டத்தைச் சரி செய்து கொள்ள வாய்ப்பிருப்பதால், நிச்சயமாக இது சாத்தியமே!

*WEB TV என்றால் என்ன? விளக்கம் தருவீர்களா?*

இணையமும் தொலைக்காட்சியும் இணைந்ததே WEB TV ஆகும். கணினி வழி அல்லாது, தொலைக்காட்சி மூலம் இணைய இணைப்பைப் பெற முடிவதே இதன் முதன்மையான சிறப்பு. இணையத்தைப் பார்வையிட, கணினி 'மவுஸ்'-க்குப் பதில் தொலைக்காட்சி 'ரிமோட்டை'ப் பயன்படுத்தும் வசதியை இந்த WEB TV தொழில் நுட்பம் எதிர்காலத்தில் நமக்கு ஏற்படுத்தித் தர விருக்கின்றது. நமக்கு விருப்பமான தொலைக்காட்சி நிகழ்ச்சியைக் கண்டுகளித்தவாறே, இணையத்தில் வேண்டியவர்களுக்கு மின்னஞ்சல்களும் அனுப்பும் காலம் வெகு தூரத்தில் இல்லை!

*சரவணன், பத்துகேவ்ஸ்*

*நம் நாட்டு ASTRO மூலம் இணையத் தொடர்பு ஏற்படுத்த முடியுமா? எப்படி?*

தொலைக்காட்சி மூலம் இணையத் தொடர்பை வழங்கும் சேவையை ASTRO மிக விரைவில் அறிமுகப்படுத்தவிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. அது எப்படி என்பது ASTRO மட்டுமே அறிந்த இரகசியம். எனவே அந்த சேவை வரும்வரை நாம் பொறுத்திருந்துதான் பார்ப்போமே!

*கணினி மென்பொருள் தயாரிப்பில் உலகில் பல நாடுகள் முன்னணியில் இருக்கின்றன. மலேசியாவின் நிலை என்ன?*

கணினி மென்பொருள் தயாரிப்பு / வெளியீட்டுத் துறையில் மலேசியாவின் நிலை நிறைவளிக்கும் வகையில் இல்லை என்றாலும், சில தனியார் கணினி நிறுவனங்களும் தனிப்பட்ட கணினி நிபுணர்களும் இத்துறையில் தடம் பதிக்கக் கடுமையாக முயன்றே வருகின்றனர். 'ஆர்த்தி' கல்வி மென்பொருள்களோடு (4 மொழிகளில்) வேறு பல மென்பொருள்களையும் உருவாக்கி வெளியிட்டு வரும் Articulate Multimedia போன்ற கணினி நிறுவனங்கள் இங்கு குறிப்பிடத்தக்கவை. எனினும், மற்ற நாடுகளுக்கு ஈடாக இத்துறையில் வெற்றி கொடி நாட்ட, இன்னும் ஆழமான கணினி அறிவும் அனுபவமும் நமக்கு அவசியம்.

*சங்கர் ராஜா, கோலாலம்பூர்*

*எனது மின்னஞ்சலில் எனக்குத் தேவையில்லாத மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. அவற்றைப் படித்து அழிப்பதற்கு நிறைய நேரம் தேவைப்படுகிறது. இதைத் தவிர்ப்பது எப்படி?*

கணினிக் குற்றங்களைக் கடுமையாகத் தண்டிக்கும் சட்டங்கள் இன்னும் முறையாக அமல்படுத்தப்படாத சூழ்நிலையில், இம்மாதிரி அனாவசிய மின்னஞ்சல்களை முழுமையாகத் தவிர்ப்பது கடினம்தான். இருப்பினும் உங்கள் மின்னஞ்சல் புரோகிராமில் இருக்கும் 'Filter'ஐப் பயன்படுத்தி இப்பிரச்சனையை ஓரளவு சமாளிக்கலாம்.

உதாரணமாக அடிக்கடி உங்களுக்கு வரும் தேவையில்லாத மின்னஞ்சல்களில் உள்ள சில குறிப்பிட்ட வார்த்தைகளை 'Flter'ரில் போட்டு வைத்தால், அடுத்த முறை அவ்வார்த்தைகள் அடங்கிய மின்னஞ்சல்கள் தானாகத் தடைப்பட்டுவிடும். முயன்று பாருங்களேன்!

*இணையத்தில் வரும் தகவல்கள் எந்தளவுக்கு உண்மையானவை? இதை எப்படி உறுதிப்படுத்திக் கொள்வது?*

அன்றாடம் நீங்கள் சந்திக்கும் மனிதர்கள் கூறும் விசயங்கள், நாளிதழ்கள், நூல்கள், சஞ்சிகைகளில் படிக்கும் தகவல்கள் ஆகியவை எந்த அளவுக்கு உண்மையானவை என்பதை நீங்கள் எப்படி முடிவு செய்கிறீர்களோ, அதே வழியில் இந்த இணையத்தின் தகவல்களையும் உறுதிப்படுத்திக் கொள்ளலாமே? என்னைக் கேட்டால், இணையத்தைக் காட்டிலும், நம்மைச் சுற்றி இருப்பவர்கள் இன்னும் அதிகமான சந்தேகத்திற்குரியவர்கள் என்றே கூறுவேன்!! ●


படிப்பகம்

www.padippakam.com

# பிரிவு

அறிவுமதி

பயணத்தை
விரும்பாதவர்கள்
யார்?
சின்ன வயதில்
அம்மாவின் இடுப்பில்
அமர்ந்து கொண்டுபோய்
பேருந்து ஏறியதும்
சன்னல்தேடி
அமராதவர்கள்
யாராவது
இருக்கிறீர்களா?

சன்னலோரம் அமர்ந்ததும்
குறுக்கோடும் கம்பிகளில்
மோவாயை மெல்ல
ஒட்டவைத்து
உதடுகளின் அதிர்வில்
வரும்
மெல்லிய
ஒலியைத்
தனக்குத்தானே கேட்டுச்
சுவைக்காதவர்கள்
உங்களில்
எத்தனை பேர்?

இந்த நூற்றாண்டு நம்மிடம்
விட்டுச் செல்லும்
மிகப் பெரிய பரிசு
பயணம்!

கட்டை வண்டி
கூட்டு வண்டி
குதிரை வண்டி
மனிதரை மனிதர் இழுக்கும்
கைவண்டி
மனிதரை மனிதர் தூக்கும்
பல்லக்கு
எல்லாம் மெல்ல மெல்ல
பழங்கதையாகிப் போக
பேருந்துகள், மகிழுந்துகள்
தொடர்வண்டிகள்
வானூர்திகள்
என
கண்மூடிக்
கண்திறப்பதற்குள்ளாக
கண்டம் விட்டுக் கண்டம்
தாவும்
வேகத்தில்
பயணங்களின்
வேகங்கள்!

இந்த ஊர்திகள்
புறப்படுகிற
இடங்களிலும்
வந்து
சேர்கிற
இடங்களிலும்
தாம்
எத்தனைச்
சோகங்கள்...
எத்தனை
மகிழ்ச்சிகள்!

எல்லாப்
பிரிவுகளை
விடவும்
வானூர்தி
நிலையத்தில்
பிரிகிற
வேதனைதான்
என்னைப் பிழிய
வைப்பது!

அதுவும்
கணவன்
மனைவியாகப்
பிரிகிறவர்களின்
இந்தத் தவிப்பை
யாரையோ
வழியனுப்ப
வந்தவர்கள் மாதிரி
சற்று முன்பு
வரை... சிரித்துச்
சிரித்துப்
பேசிக்
கொண்டிருந்தவர்கள்-


புறப்படுகிற நேரம்
வந்ததும்...
சூழ்ந்த
உறவினர்களுக்கு
நடுவே
தவிப்புகளை
வெளிப்படுத்த
முடியாத
தவிப்பில்...
பிரிகிற
வேதனையை
எப்படிச்
சொல்வது?

ஆனாலும்...
ஆழமாய்
உறவுகொள்ளும்
உயிர்களே!
உங்களுக்கு
ஒன்று சொல்கிறேன்!

சந்திப்பதும்... சந்தித்து
உரையாடிக்
கொள்வதும்....
சின்னச் சின்ன
குறும்புகளால்
நொடிக் காம்புகளில்
சருக்கரைப்பூ
பூக்க வைப்பதும்...

பத்துவிரல்களையும்
நீட்டவைத்துப்
'பியானோ'
வாசிப்பதும்

குளித்துத்
தலை துவட்டத்
தாழ விட்ட
கூந்தல் கம்பிகளில்
'கிட்டார்'
மீட்டுவதும்
மட்டும்தானா
உண்மை?
இல்லை
இல்லை.





படிப்பகம்

www.padippakam.com

ஒரே பாயில்
ஒன்றாய்ப் படுத்து
எழுந்து
சந்திப்பது
எப்படி உண்மையோ
அதேபோல்தான்
பிரிவும்
உண்மை!

தூர தூரங்களில்
பிரிந்திருந்த போதும்...
நினைத்துப் பார்க்கையில்
உள்ளுக்குள்
உருவமற்ற உருவத்தில்
உயிரில் பூக்குமே..
அந்த
முகம்தான்
உண்மை!

அதை விட்டு விட்டு
நிழற்படத்தில்
உருவம்தேடி
ஏமாறுவதெல்லாம்
பொய்!
நிழற்படத்தில் இருப்பது
யார்?
பிரிந்தவரா?
பிரிந்தவரைப் போலுள்ள
ஒரு
படம்!
வெறும் தாள்!
அதற்கு
முத்தம் தந்தால்
அது அவருக்குத்
தந்ததாகிவிடுமா?
இப்படியெல்லாம்
ஏமாறுவதில் எனக்கு
உடன்பாடில்லை!

பிரிவால் வருந்துபவர்களே!
முதலில்
நிழற்படங்களைக்
கிழியுங்கள்
அவரைப் போல... என்று
எந்தப் பொய்யிலும் இடறி
ஏமாறாதீர்கள்!
உண்மையான உறவு
என்பதும்
உண்மையான அன்பு
என்பதும்
பிரிவால்தான்
மெய்ப்பிக்கப்படுகிறது.

எனவே,
விரும்புவதைப் போலவே
பிரிவையும்
விரும்புங்கள்!

ஆம்
சந்திப்பில் பேசிக் கொள்வதை
விடவும்
பிரிவில்தான்
அதிகமாகப் பேசமுடிகிறது.

மூன்றாவது ஆளாக நின்று
பிரிவைப் பற்றி
பேசுவது
மிக மிக எளிது!

அதை
அனுபவிப்பவர்களுக்குத்தானே
அதன்
கொடுமை புரியும்
என்கிறீர்கள்...
அப்படித்தானே!

அன்பானவர்களே!
உங்கள்
அன்பானவர்கள்
விரைவில் உங்களைச் சேர
அன்புடன்
வாழ்த்துகிறோம்!

# புதிய தருக்கள்



## சை. பீர் முகம்மது

எங்களின் அவலத்தைத்
தீர்க்க முடியாத போதும்
இந்தப் போரை
நாங்களே தொடங்கவில்லை!

குருதி வெள்ளம்
சிவப்பு மேகங்களாகப்
பொழிய
நாங்கள் காரணமல்ல!
திருகாணியில்லாத
தோடுகளைச்
செய்தது நீங்கள்தான்!
எப்படி மாட்டினாலும்
உங்கள் காதுகளில்
அது பொருந்துவதில்லை!

உங்கள் பேச்சில்
பொய்மை!
செய்கையிலோ எப்பொழுதும்
தேய்பிறை!
புத்தனைத் தாமரையில்
பூஜித்த காலம் போய்
வெடி மருந்துகளால்
மாலையிடுகிறீர்கள்!

வடக்கு தெற்கு மாநிலங்களை
இணைக்க
பாலங்கள் அவசரத் தேவை!
நீங்களோ ராணுவ
முள் வேலிகளையே
அமைக்கிறீர்கள்!


உங்கள் மொழியில்
நாங்கள் குப்பைக்
கூளங்கள்!
எரித்துப் புதைத்தாலும்
மண்கிழித்து முளையிடும்
புதிய தருக்கள்!


படிப்பகம்

www.padippakam.com

ஜெ. கரிகாலன்

# இன்றைய ஆசிரியர்கள் பொருத்தமானவர்களா?



*மாணவர்கள் சமுதாயத்தின் தனிப்பெரும் சொத்து. அவர்களை நல்ல மனிதர்களாக வடிவமைக்கும் பணியை மேற்கொண்டிருப்பவர்கள் ஆசிரியர்கள். ஆசிய நாடுகளின் கல்வித் திட்டங்களும் ஆசிரியப் பணியும் நல்ல மாணவர்களை உருவாக்குவதற்கானவை அல்ல என்கின்றன ஆய்வுகள். அறிவார்ந்த ஆசிரியனே அறிவார்ந்த மாணவனை உருவாக்க முடியும் என்கிறது இன்றைய அறிவியல் கல்வி. கடந்தகால ஆய்வுகளின் வழிநின்று ஆசிரியப் பணிபற்றி ஆராய்கிறது இக்கட்டுரை. இதுபற்றி நமது ஆசிரியர்கள் என்ன சொல்கிறார்கள்? எழுதி அனுப்புங்கள். (ஆ-ர்)*

**TODAY'S TEACHERS ARE OUTDATED?!**
**ஆசிரியர்கள் இன்றைய காலத்துக்குப் பொருத்தமற்றவர்கள்!**

ஆம். ஆசிரியர்கள் இன்றைய காலத்துக்குப் பொருத்தமற்றவர்கள், ஆசியாவின் பல நாடுகளிலும் இதே கதிதான். 40 வயது முத்தவர்களாயினும் இருபது வயது இளைஞர்களாயினும் பெரும்பாலான இன்றைய ஆசிரியத் தொழிலில் இருக்கும் அனைவரும் பொருத்தமற்றவர்களே என்று பல்வேறு ஆய்வுகள் உணர்த்துகின்றன. ஆளுமை குறைந்து காணப்படுகிற இவர்களின் இந்த நிலைக்குப் பல காரணங்கள் அடுக்கடுக்காக உள்ளன.

**'அரசாங்கத்தின் ஆசிரிய உற்பத்தி'**
**(TEACHER PRODUCTION)**

தரமான ஆசிரிய உற்பத்தியில் பெரும்பாலான நாடுகள் கவனம் செலுத்துவதில்லை. எல்லாத் தொழில்களிலும் இருப்பதைவிடவும் அதிகமான அர்ப்பணிப்பும் கடமையுணர்வும் இருக்க வேண்டிய ஆசிரியத் தொழில் வெறும் கூலிக்கு மாரடிக்கும் தொழிலாகவே ஆகி விட்டதை அரசுகள் பல கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டதன் விளைவு ஒழுக்கம்கெட்ட மாணவ சமுதாயத்தின் பெருக்கத்திற்கு வழி வகுத்திருக்கிறது.

பெரும்பாலான நாடுகளில் ஆசிரியப் பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்களைத் தேர்வு செய்யும்போது அவர்களின் அறிவுத்திறன் தவிர்த்து பொதுக் குணாதிசயங்களையும், உள்ளார்ந்த ஆர்வத்தையும் சோதித்தறிந்து தேர்வு செய்வது அரிதாக இருக்கின்றது. தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு மேலும் பயற்சியின்போது அவ்வாறான தன்மைகள் பெருகும்படியும் மாணவர்களை மனோதத்துவ ரீதியில் புரிந்துகொள்ள முடியும்படியான திறமையையும் ஆசிரியர்களுக்குள் விதைக்கப்படுவதன் அவசியம் உணரப்படாமலிருக்கிறது. அதாவது ஒரு ஆசிரியர் பன்முகத் திறமை (MULTI FACETED) வாய்ந்தவராகவும் ஆளுமை நிறைந்தவராகவும் பயிற்சியின்போதே பூர்த்தியானவராக வெளிவர வேண்டும்.

சமகாலத் தகவல் ஊடகங்களையும், கல்விசார் தொழில்நுட்ப அறிவின் பெருக்கத்தையும் காலக் கிரமத்தில் அறிந்து வைத்துக்கொள்ளக்கூடியவராக இருக்க வேண்டியது அவசியம். எனவேதான் ஆசிரியர் பயிற்சிக்கு விரும்புபவர்களை தேர்வு செய்யும் முன்னரே அவர்களை மன ஆளுமை மற்றும் மனோதத்துவ தேர்வுகளுக்கு உட்படுத்துவதோடு தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு பயிற்சியின்போதே அவ்வாறான திறமைகளை தொழில் முடிக்கும் வரையிலும் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்கிறவர்களாக அவர்களை முழுமைப் படுத்த வேண்டும்.

'சிறுவர் மனோவியல்' (CHILD PSYCHOLOGY) தெரியாத ஆசிரியர்கள் காலத்திற்குப் பொருத்த மற்றவர்கள் தானே? எனவே, ஆசிரிய உற்பத்தி' (ஆசிரியர்களை உற்பத்தி செய்வது) தரமானதாக விளங்க அரசு அவ்வாறான தேர்வு மற்றும் பயிற்சித்திட்டங்களை வடிவாக்கம் செய்வதோடு காலமாற்றத்திற்கேற்ப மறுவடிவாக்கமும் செய்ய வேண்டும்.

**ஆசிரியரின் மாணவ உற்பத்தி**
**(TEACHER'S PRODUCTION)**


மனித சுபாவங்கள் வெவ்வேறானவை. பலவாறான சூழ்நிலைகளிலிருந்து வெவ்வேறு அளவிலான ஆளுமைகொண்ட பெற்றோரிடமிருந்து, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளிலிருந்து வரக்கூடிய குழந்தைகளை அறிவார்ந்த மாணவ உற்பத்திக்கு உட்படுத்தி வெற்றியடைகிற திறமை ஆசிரியர்க்கிருத்தல் அவசியம். ஆசிரியர் மாணவரின் குணம், திறமை போன்றவற்றை நன்றாகப் படித்த பின்பு அவரவரின் குணத்திற்கும் புரிந்து கொள்ளும் சக்திக்கேற்றவாறும் தன்னுடைய கற்பிக்கும் வழிமுறையையும், தன்னுடைய சுபாவத்தையேகூட மாற்றிக் கொள்கிற திறமை ஆசிரியருக்கு வேண்டும்.


படிப்பகம்

www.padippakam.com

எல்லா மாணவர்களையும் ஒன்றாய் வைத்து ஓதிவிட்டுப் போகும் பழக்கம் சென்ற நூற்றாண்டின் காலாவதியாகிப் போனவர்களோடு போகட்டும். சிடுசிடுவென்று எரிந்துவிழும் சுபாவம் கொண்ட ஆசிரியரோ, எதையும் கண்டுகொள்ளாத சுபாவமுடைய ஆசிரியரோ எல்லா மாணவர்களிடமும் ஒரே மாதிரியாக தன் ஒரே தன்மையுடன் போதிப்பவராயிருந்தால் அந்த ஆசிரியர் நிச்சயம் தோல்வியடைவார்.

மாணவர்களின் வெற்றி - தோல்விகள் ஆசிரியரின் வெற்றி - தோல்விகளைப் பிரதிபலிக்கிறது என்று அர்த்தம். ஒரு மாணவனின் வெற்றியில் பங்கிருப்பதாகப் பெருமைப்படும் அதே ஆசிரியர் இன்னொரு மாணவவனின் தோல்வியில் நாணுபவராகவும் இருக்க வேண்டும்.



மாணவரின் திறமையின்மைக்குப் பல்வேறான காரணங்கள் இருக்கலாம். 'மந்த - மாணவன்' எதனால் மந்தமானவன் என்பதை அறியும் திறமை ஆசிரியருக்கு வேண்டும். ஆசிரியர் மாணவருடன் நெருங்கிப் பழக வேண்டும். இங்குதான் 'சிறுபிள்ளை மனோபாவத்தினை' படிக்கும் கலை ஆசிரியருக்கு உதவும். ஆசிரியர் மாணவரிடம் பழகுவதா? என்று கேட்பவர்கள்தான் இன்றைய காலத்திற்கு பொருத்த மற்ற ஆசிரியர்கள்.

### கற்பித்தம் சூழல் / ஆசிரியத் தொழிலும் சூழலும் (TEACHING ENVIRONMENT)

ஆசிரியர்களிடையே தாழ்மையுணர்ச்சி உடைய ஆசிரியர்களும் இருக்கிறார்கள். ஆசிரியர்களிடம் காணப்படும் தாழ்மையுணர்ச்சி போதனையின் சிறப்பைப் பாதிக்கும்.

இவ்வகையிலான தாழ்மையுணர்ச்சி கொண்டவர்களை தொழிற்பயிற்சிக்குத் தேர்வு செய்யும்போதே மனோதத்துவத் தேர்வு மூலம் கண்டறிந்து அத்தகையவர்கள் விலக்கப்பட வேண்டும். பயிற்சி முடித்து தொழிலுக்கு வந்து விட்ட பின்பு சில ஆசிரியர்களுக்கு தாழ்மையுணர்ச்சி (INFERIOR COMPLEX) தொற்றிக் கொள்கிறது. இதற்குக் காரணம் பயிற்சி முடித்த சிலர் சிறுநகர்ப்புறங்களிலிருந்து பெரு நகரங்களுக்குச் சென்று தொழில் செய்ய நேரிடுகிற பொழுது ஏற்கனவே இருக்கும் சக ஆசிரியர்களின் திறமை மீதான ஒரு போலியான பிரமிப்பை கொண்டு விடுகின்றனர்.

பல்வேறு பொருளாதார அடுக்குகளைக் கொண்டிருக்கிற சமூக அமைப்பின் வெவ்வேறான இடங்களிலிருந்து வரக்கூடிய மாணவர்களில் உயர் அடுக்கில் இருக்கக்கூடிய வசதிபடைத்த மாணவர்களே நன்றாகப் படிப்பவர்களாக இருப்பார்கள் என்றும் அந்த

*"ஒரு மாணவனின் வெற்றியில் பங்கிருப்பதாகப் பெருமைப்படும் அதே ஆசிரியர் இன்னொரு மாணவவனின் தோல்வியில் நாணுபவராகவும் இருக்க வேண்டும்"*

மாணவர்களின் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியரை உலகின் மிகச்சிறந்த அறிவாளிகளை உருவாக்கு கிறார்கள் என்று நினைப்பதும் தவறு.

இது ஆசிரியரின் தாழ்மையுணர்ச்சிக்கு இட்டுச் செல்லும். எனவே தொழில் சூழல்கள் மாறுபடினும் போதிக்கும் திறமை எல்லா ஆசிரியரிடத்தும் ஒரே மாதிரியாக விளங்க வேண்டும்.

### ஆசிரியர்களும் சமூகப் பிரச்சனைகளும் (TEACHERS AND SOCIAL ISSUES)

ஆசிரியர்களே சமூகப் பிரச்சினையாளர்களாகி விட்டார்களோ என்ற எண்ணம் தோன்றியுள்ளது. ஆசிரியத்தொழில் தவிரவும் பிற வேலைகளை பகுதி நேர வேலையாகச் செய்து வருகிற இன்றைய ஆசிரியர்கள் கல்விச் சேவை ஆற்றுவதோ, தொழிலைக் கட்டொழுங்குடன் சீராகச் செய்வதோ இயலாது என்கிறபோது அவர்கள் காலாவதியாகிப் போனவர்கள்தானே?

வரவுக்கும் செலவுக்கும் ஒப்பீட்டுப்பட்டியல் போட்டுக் கொண்டிருக்கும் ஆசிரியன் தன் சேவைக்கான ஊதிய அளவு 'சந்தை விலைப் பட்டியலுக்கு' ஈடுகொடுக்காதபோது அதற்காகப் போராட வேண்டுமே தவிர பகுதிநேர வேலையைத் தேடக் கூடாது. மற்ற சமூகப் பிரச்சனைகளோடு இதையும் சேர்த்துப் பார்க்கும் அறிவும் தேவை.

இதைவிட மோசமானது என்னவெனில் சில நாடுகளில் ஆசிரியர்கள் அதிகபட்ச வருமானத்திற்காக ஆசிரியத் தொழில் செய்வது தவிர (போதிய வருமானம் கிடைத்தாலும்) பிற தொழில்களில் ஈடுபடுவதோடு தனது வீட்டையே பகுதி நேரக் கல்விக்கூடமாகவும் மாற்றி வைத்திருக்கிறார்கள்.

இதனால் கட்டொழுங்கு சிதறி மாணவர்கள் சமூக விரோதிகளாக உருவாகி விடுகிறார்கள். ஏனெனில் இந்த மாதிரியான ஆசிரியர்களை மாணவர்கள் மனதளவில் மதிப்பதேயில்லை. அவர்களைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்தும் ஆர்வமும் இவ்வாறான ஆசிரியர்களுக்கு வாய்ப்பதில்லை.

எனவே இதைத் தவிர்க்க ஆசிரியர்களை இடைப்பட்ட காலங்களில் அவர்களின் சமகால அறிவைச் சோதிக்கும் தேர்வுகளை நடத்தி தேர்ச்சி யுறாத ஆசிரியர்களுக்கு 'கட்டாய ஓய்வு' வழங்கி அனுப்பிவிட வேண்டும்.

(தொடரும்)



படிப்பகம்


# ஜனநாயகத்தைத் தவறவிட்ட நாடுகள்

## THE BEST AND WORST PLACES TO LIVE

The U.N. Human Development Report 2000, released on Thursday, ranks 174 nations according to income, health care, life expectancy and educational levels, placing Canada as the best place to live for the seventh consecutive year

**Human Development Index - HDI - (top and bottom ten)**

*Measures a country's achievements in terms of life expectancy, educational attainment and adjusted per capita income*




உலக நாடுகள் சிலவற்றில் ஜனநாயகம் என்கிற போர்வைக்குள் என்ன நடக்கிறது என்பதை உலக சமூகம் மிக உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கியுள்ளன.

கடந்த நூற்றாண்டு போலவே இப்போதும் ஜனநாயகம் என்ற சொற்றொடரை மட்டும் அது பார்க்கப்போவதில்லை என்று ஐக்கிய நாடுகளின் மனிதவளர்ச்சிக் கழகம் (UNDP) வெளியிட்டுள்ள அண்மைய அறிக்கை புலப்படுத்துகின்றது.

UNDPயின் இந்த ஆண்டறிக்கையில் ஜனநாயக நாடுகள் சிலவற்றில் மனித உரிமைகள், சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான அநீதிகள், உரிமை மீறல்கள், புறக்கணிப்புகள் போன்றவற்றைப் பட்டியலிட்டுப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளது.

இஸ்ரேல், இந்தியா, ரஷ்யா, சிறீலங்கா, பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் சிறுபான்மையினர் மிகக் கடுமையாக பாகுபடுத்தப் படுகின்றனர், தனிமைப்படுத்தப்படுகின்றனர். அத்தோடு சிறுபான்மையினரைத் தேசிய நீரோட்டத் திற்குள் உள்வாங்கப் பல நாடுகள் தவறி விட்டதையும் சுட்டிக் காட்டியுள்ளனர். இதன் விளைவாகக் கடுமையான உள்நாட்டுப் போரையும் அவை சந்திக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றன. இதற்கு உதாரணமாக சிறீலங்காவின் துயர்படிந்த வரலாற்றைச் சுட்டிக் காட்டியுள்ளது இந்த அமைப்பு.

சமத்துவமற்ற அரசியல் செயல்பாடுகளும், சிக்கல்களும் ஜனநாயக வழிமுறைகளுக்கு ஊடாகத் தீர்க்க முன்வராத காரணத்தால் சமூகங்களிடையே அவநம்பிக்கையும், சந்தேகத்தையும் தோற்றுவிக்கும். ஒரு சமூகத்தை இன்னொரு சமூகம் அரவணைத்துச் செல்லத் தயக்கம் காட்டும் நிலைமையை உருவாகும். இது மிகக் கடுமையான மனித உரிமை மீறல்களுக்கு வழி வகுக்கும்.

சிறீலங்கா, யூகோஸ்லாவியா போன்ற நாடுகளின் கடந்தகால அனுபவங்கள் இவற்றை நமக்குச் சுட்டிக் காட்டியுள்ளன. இப்படியான சந்தர்ப்பங்களில் அதிகாரப் பகிர்வு, உரிமை போன்றவற்றைச் சிறுபான்மையினருக்கு வழங்குதல் அவசியம். சிறுபான்மையினரின் நிலம், மொழி, இனம், பண்பாடு, கலாச்சாரம் போன்ற அடையாளங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். இல்லையாயின் இவை இன மோதல்களுக்குத்தான் அவற்றை நிர்ப்பந்திக்கும் என்று UNDP எச்சரிக்கை விடுத்துள்ளது. தேசிய நீரோட்டத் திற்குள் சிறுபான்மையினரை எவ்வாறு உள்வாங்க முடியும் என்பதற்கு சுவிசர்லாந்தின் அரசியல் சாசனம் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கின்றது. அந்நாட்டில் ஜெர்மன், பிரான்ஸ், இத்தாலியன் என முக்கிய மூன்று இனத்தவர்கள் வாழ்கின்றனர். 1959ம் ஆண்டில் இருந்து பெடரல் கவுன்சில் எனப்படும் அந்நாட்டின் தேசிய நிறைவேற்றுச் சபையில் மூன்று இனத்தவருக்கும் சமமான உரிமை வழங்கப்பட்டுள்ளது.

பெல்ஜியம் நாட்டிலும் இத்தகைய ஆட்சிமுறையே பின்பற்றப்பட்டு வருகின்றது. அங்கு எந்தக் கட்சி ஆட்சிக்கு வருகிறதோ அது மற்றைய இனங்களான பிரான்ஸ், டொச் இனங்களுக்குச் சமமான உரிமைகளை வழங்குகின்றன.

ஐக்கிய நாடுகளின் மனித வளர்ச்சிக் கழகம் (UNDP) உலக நாடுகளின் மனித வளர்ச்சிக்கும் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும் மனித உரிமை களுக்குமான 174 நாடுகளைப் பட்டிய லிட்டுள்ளது. அவற்றுள் மிக சிறந்த நாடுகள் என:

கனடா, நோர்வே, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, அயர்லாந்து, சுவீடன், பெல்ஜியம், நெதர்லாந்து, ஜப்பான், பிரிட்டன், பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, டென்மார்க் போன்ற நாடுகளை முதல் பதினைந்து நாடுகளாகத் தேர்ந்தெடுத்துள்ளது.

மிக மோசமான நாடுகள் என்று குறிப்பிட் டிருக்கும் நாடுகள்: சிரான் லியோன், நைஜீரியா, எத்தியோப்பியா, புருண்டி, கானா, மொசாம்பிக், சாட், மத்திய ஆப்பிரிக்கா, மாலி.

பொருளாதார விடுதலையுடன் கூடிய கலாச்சார, பண்பாட்டு சுதந்திரம் மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கும் மனித உரிமைக்கும் வழிவகுக்கும் என்று மேற்படி இவ்வறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. ●

www.padippakam.com




# சிட்னி 2000
## புத்தாயிரத்தின் முதல் ஓட்டம்!

ஒவ்வொரு முறையும் ஒலிம்பிக் சின்னமானது அதை ஏற்று நடத்தும் நாட்டின் உயிர்ப்பைச் சூசகமாக உணர்த்துகிறது. 27வது ஒலிம்பிக் நடக்கவிருக்கும் ஆஸ்திரேலியாவின் சிட்னியை ஒலிம்பிக் வரலாற்றில் அதன் புதிய சின்னமும் நிலைநிறுத்தும்.

ஒரு தடகள வீரனின் உருவம் (MILLENNIUM ATHLETE -புத்தாயிரத்தின் தடகள வீரன்) அதன் வண்ணங்கள் ஆஸ்திரேலியாவிற்கே அமைந்த இயற்கையின் வடிவங்களைப் புரிந்து கொள்ளும்படியாக அமைக்கப்பட்டுள்ளது. கப்பல் தளத்தின் வண்ணங்களின் பின்னணியுடன் சூரியன் மற்றும் பாறைகள், கடற்கரை மற்றும் அதன் உள் சிவப்பு நிறம் போன்றவை ஆஸ்திரேலியாவிற்கே உரித்தான இயற்கை மற்றும் அதன் உயிர்வாழ் அம்சங்களை வெளிக்காட்டுவதாய் உள்ளது.

பால்வெள்ளை வெளிச்சக்கீற்று சிட்னி ஓப்பெரா ஹவுலின் வெளிவடிவத்தை காட்டுவதாகவும் அதன் அலையான புகை ஒலிம்பிக் விளக்கை உணர்த்துவதாகவும் உள்ளது. வண்ணங்கள் மண், நீர் மற்றும் காற்றை உணர்த்துகின்றன. உலகின் தடகள வீரர்களுக்கான அர்ப்பணிப்பாக சிட்னி ஒலிம்பிக் அறிவிக்கப்பட்டுள்ளது.



2.7 மில்லியன் ஆஸ்திரேலிய வெள்ளிகளுக்கு மேலாகச் செலவு ஆகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. சிட்னி 4 மில்லியன் மக்கள் தொகை கொண்டது. நியூ சவுத் வேலிஸ் மாநிலத்தின் தலைநகரமாகும். உலகின் மிகப் பெரிய நகரங்களில் ஒன்று. செப்டம்பர் சிட்னியின் வசந்த காலத்தின் முதல் மாதம்.

சிட்னி ஒலிம்பிக்கில் வரலாற்றில் முதல் முறையாக சதுரங்கமும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் நிச்சயம் தங்கம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பங்குபெறும் நாடுகள்:

இருநூறுக்கும் மேலான நாடுகளிலிருந்து 10,300 பந்தய வீரர்கள் கலந்து கொள்கின்றனர். 5000 அதிகாரிகளும் கலந்து கொள்கின்றனர். 15,000 செய்தியாளர்களும் பார்வையிடுகிறார்கள். "சிட்னி 2000 விளையாட்டுக்கள்" என்ற இதுதான் மிகப் பெரிய அளவிலாக நிகழ்த்தப்பெற்ற விளையாட்டு நிகழ்ச்சியாக இதுவரை நடந்த விளையாட்டு நிகழ்வுகளைவிட பிரம்மாண்டதாக விளங்கும். ஊனமுற்றோர் ஒலிம்பிக்கில் 4000 போட்டியாளர்கள் கலந்து கொள்ளப் பதிவு செய்துள்ளனர். இப்பதினாறாவது ஊனமுற்றோர் ஒலிம்பிக்கில் (PARALYMPICS) 125 நாடுகளிலிருந்து 3500 அதிகாரிகளும் கலந்து கொள்கின்றனர். ஒலிம்பிக் மற்றும் ஊனமுற்றோர்க்கான ஒலிம்பிக்கினை உலகம் முழுவதிலுமிருந்து தொலைக்காட்சி, இணையம் மற்றும் வானொலி மூலமாகக் கண்டும், கேட்டும் அனுபவிக்கப் போகிறவர்களாக 6 மில்லியன் மக்கள் இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

'சிட்னி 2000 ஒலிம்பிக் விளையாட்டுக்களில்' 28 வகையான விளையாட்டுகளில் விளையாட்டாளர்கள் போட்டியிடுவார்கள். அவற்றில் 7 விளையாட்டுகள் 'பல்வகை விளையாட்டாக' உள்ளன. (MULTI-DISCIPLINE).

தூய ஒலிம்பிக் கிராமம்

ஒலிம்பிக் வரலாற்றிலேயே முதன் முறையாக சுற்றுச்சூழல் உபயோகத்திலான ஒலிம்பிக் கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது. இது அத்துணை விளையாட்டாளர்கள், மற்றும் அவர்களது பயிற்சியாளர்கள் / அதிகாரிகள் எல்லோரும் ஒரே கிராமத்தில் தங்க வழிவகை செய்கிறது. இது ஒலிம்பிக் பூங்காவினை நடந்து அடையும் தூரத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. 15,000 ஒலிம்பிக் விளையாட்டாளர்கள் மற்றும் 7000 ஊனமுற்றோர் விளையாட்டாளர்கள் தங்கும் வசதி கொண்ட கிராமமாக உருவாக்கப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் வரலாற்றில் முதல் முறையாக நீருக்கடியில் ஒலிம்பிக் சுடரை ஏந்திச் செல்லும் நிகழ்ச்சியும் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. எல்லாவகைத் தொழில் நுட்பமும் மனிதனால் சாத்தியப்படக் கூடியது என்பதற்கு இது ஒரு சான்று.

சிட்னி 2000 ஒலிம்பிக் பொம்மைகள்

ஒல்லி (OLLY), சிட் (SYD) மற்றும் மில்லீ (MILLIE) என்று பெயரிடப்பட்டவைகள் சிட்னி ஒலிம்பிக்கின் 'அதிர்ஷ்ட மிருகங்கள்' (MASCOTS). இவைகள் ஆஸ்திரேலியாவிற்கே உரிய தனித்தன்மை வாய்ந்த விலங்குகள். SYD (PLATYPUS) இவைகள் முறையே நிலம், காற்று மற்றும் நீர் போன்றவற்றைக் குறிப்பனவாகும். இவைகளில் SYD (சிட்) என்று பெயரிடப்பட்டுள்ளது விலங்கு முட்டையிட்டுப் பொரித்து பால் கொடுக்கும் வகையைச் சேர்ந்த (PLATYPUS) ஒரு விநோத விலங்கு. இதற்குச் சிட்னியை நினைவுகூரும் வகையில் சிட் (SYD) என்று பெயரிடப்பட்டுள்ளது. சுறுசுறுப்பான விலங்கான இது சிட்னி நகர மக்களின் சுறுசுறுப்பை விளக்கும். பிளாட்டிபஸ் (PLATYPUS) எனப் பெயரிடப்பட்டது. வாத்து


படிப்பகம்

www.padippakam.com



போல சப்பட்டையான முட்டையிடும் அலகு வாய்ந்த பிராணி. இது ஆஸ்திரேலியாவின் ஆறுகளிலும் ஏரிகளிலும் புழுப்பூச்சிகளைத் தின்று வாழும் வகையாகும்.

MILLIE (ANTCATER / எறும்புத்தின்னி)

அலங்கு என்று தமிழில் அழைக்கப்படும் இந்த வகையான எறும்புத் தின்னியும் ஒரு முட்டையிட்டுப் பால் கொடுக்கும் வகைசேர்ந்த பிராணி. பார்ப்பதற்கு முள்ளம் பன்றி மாதிரி இருக்கும். இது தனது பிசுபிசுப்பான நாக்கினால் புழு பூச்சிகளைப் பிடித்துத் தின்னும். இது மூன்று விலங்குகளிலும் அறிவில் சிறந்ததாகக் கருதப்படுகிறது. அதாவது பிளாட்டிபஸ், குக்கூபரா (Koo Koburra) இரண்டைக் காட்டிலும் மூளையில் சிறந்தது. எதிர்கால நப்பிக்கையை வலியுறுத்தும் ஒரு குருவைப் போல இதன் குணமாம்.

ஒலி OLLY (KOOKABURRA)

KOOKABURRA ஒரு ஆஸ்திரேலிய வகை சிரிக்கும் பறவை. இது எழுப்பும் ஒலி ஒரு போத்தலிலிருந்து நீர்விழும் ஓசையை ஒப்பவும் இருக்கும். நட்பையும் பெருந்தன்மையையும் குறிக்க இப்பறவையையும் அதிர்ஷ்ட பொம்மைகளில் ஒன்றாக வைத்துள்ளனர்.

எனவே 'சிட்' SYD என்று பிளாட்டிபஸுக்கு பெயர் வைக்கப்பட்டிருப்பது சிட்னியைக் குறிக்கும். இது நீரில் வாழ்வது. 'மில்லீ' என்று எறும்புத் தின்னிக்குப் பெயர் வைத்திருப்பது மில்லினியத்தைக் குறிக்கும். ஒல்லி' என்று கூக்காபர்ராவுக்கு பையர் வைத்திருப்பது ஒலிம்பிக் என்பதைக் குறிக்கும். மில்லீ நிலத்தில் வாழ்வது கூக்காபர்ரா காற்றில் அல்லது வானில் பறப்பது. எனவே இம்மூன்றும் சேர்ந்து நீர், நிலம் மற்றும் காற்றைக் குறிக்கும்.

ஆஸ்திரேலியாவின் சிட்னியில் நடைபெறும் ஒலிம்பிக் பற்றி நாம் விவரம் தெரிந்து கொள்கிற அதே வேளை அதன் உண்மை வரலாற்றின் முக்கிய அங்கம் ஒன்றைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியதும் அவசியம். ஆஸ்திரேலியாவின் மூலக்குடிகள் ஆசியாவிலிருந்து சென்று அங்கே ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே குடியேறிய ஆதிவாதிகள் ஆவர். இவர்கள் தமிழர்களோடு ஒத்துப்போகக்கூடிய அமைப்புகளையும் கொண்டிருக்கின்றனர். அவர்களின் பேச்சொலிகள் தமிழ்மொழியின் சப்தத்தை ஒத்திருப்பதாகவும் சொல்கிறார்கள். அங்கு சென்று குடியேறிய வெள்ளையர்கள் ஆதிகளைக் கொன்று புலதத்து விட்டதை உலகத்தின் கண்களினின்றும் மறைக்க முடியாது. ஆஸ்திரேலியாவின் சிறைகளில் கொடுமைப்படுத்தப்படும் 45 சதவிகிதத்திற்கும் அதிகமானவர்கள் அபோர்ஜின்ஸ் எனப்படும் நம் ஆதிவாசிகள்தான்!

விளையாட்டு மனிதனுக்குள் நேசத்தை வளர்க்கிறது என்பதறிந்துதான் நாடுகளுக்கிடையேயான விளையாட்டுகளை மனிதன் உருவாக்கினான். பகை நாடுகளின் விளையாட்டாளர்களும்கூடக் களத்தில் நேசம் கொள்ளவும் அதைக் கண்ணுறும் ரசிகர்களும் துவேஷம் மறந்து நட்பு பாராட்டவும் விளையாட்டு உதவும் என்றுதான் நினைத்திருந்தான். காலப்போக்கில் அரசியல் சித்தாந்தவாதிகள் விளையாட்டை விளையாட்டாகக் கருதப்படாமல் பார்வையாளர் களுக்குள்ளும் துவேஷத்தை வளர்த்துவிட்டனர்.

அரசாங்கங்களையெல்லாம் கடந்து உலக மக்கள் கரம்கோர்க்க வலியுறுத்தும் ஒரு நிகழ்வாகவே ஒலிம்பிக்கை நினைத்துப் போற்றுவோம். அதன் சுடர் நிலத்தில் ஏற்றப்படாமல் கடலுக்குள் ஏற்றப்படாமல் உலக சமாதானத்திற்கான ஒலிம்பிக் சுடர் உலக மக்கள் மனதினில் இன, மத, கலாச்சார வேறுபாடிகளைத் தாண்டிப் பரவும், ஒளியூட்டும் என்று நம்புவோம். வாருங்கள், யாருக்குத் தங்கம் கிடைத்தால் என்ன? ஒலிம்பிக்கை ரசிப்போம், அனைவரையும் நேசிப்போம்!

வாட்சன் ஞம்பேக், யுவன் யூ ஃபங், அலெக்ஸினா அவ் லீ யென் , லீ வான் யென், ஜரீனா மகாராணி, கெவின் லிம் லியோங் கிட், வோங் சுன் ஹன், ஒங் ஈவ் ஹொக், லீ வான் வா / சூங் தான் ஃபுக், சியா சூன் கிட் / யாப் கிம் ஹொக், வான் அஜ்லான் வான் அப்துல்லா, டை உங் அனாக் மங்காங், எல்வின் சியா, அலெக்ஸ் லிம் கெங் லியாட், அந்தோணி அங் காங் கியெம், அலென் ஒங் ஹௌ மிங், சியா வாய் யென், சியூ கென் நீ, ஃபாரா பேகம் அப்துல்லா, லியோங் முன் யீ, ரொஸ்லான் ஜமாலுடின், முகமட் நசிஹின் நுப்ளி இப்ராஹிம், மனின்டெர்ஜிட் சிங், குகன் சண்முகநாதன், நோர் அஜ்லான் ஹஜி பக்கார், கோபிநாதன் கிருஷ்ணமூர்த்தி, ஜீவா மோகன், கெல்வின் ஃபெர்னன்டெஜ், கீவன் ராஜ் காளி கவுண்டன், சைஃபுல் அஜ்லி அப்துர் ரஹ்மான், சுவா பூன் ஹுவாட், முகமட் மஜ்லி இக்மார் முகமட் நோர், சைரில் அன்வார் அப்துல் அஜிஜ், மினார்வான் நவாவி, சுஹாய்மி இப்ராஹிம், நோர் சைபுல் ஜைய்னி நசிருடன்.

இந்த சிட்னி 2000 ஒலிம்பிக் போட்டியில் மலேசியாவில் இருந்து பங்கேற்கச் செல்லும் 38 விளையாட்டாளர்கள் இவர்கள்.

மலேசிய விளையாட்டாளர்களாக சிட்னி செல்லும் நம் விளையாட்டாளர்களுக்கு செம்பருத்தி தன் மனமுவந்து நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.
மலேசியா வெல்லும்!


படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழத் தேசிய உருவாக்கம்

பேராசிரியர் P. இராமசாமி
மலேசிய தேசியப் பல்கலைக் கழகம்




தமிழீழத்தின் மீது நான்கு [illegible] எழுகின்றன.

**1.** தமிஈழம் சாத்தியமா?

**2.** அதன் அரசியல் நிர்வாகம் எத்தகைய தன்மையானதாக இருக்கும்?

**3.** அந்த புதிய தேசம் பொருளாதார ரீதியாக தாக்குப் பிடிக்குமா?

**4.** புதிய சமூகத்தின் பொதுத் தன்மைகள் மற்றும் தேசிய இனங்களின் மீதான கொள்கை என்னவாய் இருக்கும்?

இந்தக் கேள்விகள் தமிழீழத்தை விரும்புபவர்கள் மற்றும் விரும்பாதவர்கள் கொண்டுள்ள கேள்வியாகும். மேற்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு முன் தமிழீழம் ஆதிக்க மனோபாவத்தினால் உருவாக்கப் படாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அடிப்படையில் தமிழர்களுக்கு எதிராக ஆண்டுக் கணக்கில் சிறீலங்காப் பேரினவாதிகளால் நிகழ்த்தப்பெற்ற அநீதிகளுக்கு தமிழர்கள் தரும் பதிலே தமிழீழமாகும். இவ்வாறாக தமிழீழம் உருவாக்கப்படுவதன் வழி தமிழர்கள் தங்களுடைய பெருமை, கௌரவம் மற்றும் சுதந்திரத்தை மனிதர்கள் என்கிற அடிப்படையில் தங்களுடைய பாரம்பரிய தாய் மண்ணில் காத்துக் கொள்வார்கள்.

அவர்களுடைய இந்த உயரிய இலட்சியத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான போராட்டத்தை தலைமை தாங்கி நடத்துபவர்கள் விடுதலைப் புலிகளைத் தவிர வேறு எவருமில்லை. இந்தக் கேள்விகளுக்கு நிச்சயமான பதில்கள் இல்லாதபொழுதும் சில தற்காலிக அனுமானங்களைக் கொடுக்க முடியும்.

முதலில் தமிழீழம் இன்னும் உருவாக்கப்படவில்லை என்பதை அறிய வேண்டும். விடுதலைப்புலிகள் தமிழீழத்திற்கான நாளையும் இன்னும் அறிவிக்கவில்லை. விடுதலைப்புலிகள் 70 சதவிகித பாரம்பரியத் தாய் மண்ணை தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இதனடிப்படையில் விடுதலைப்புலிகள் தனி தமிழீழத்தாய்நாட்டை ஏற்படுத்தும் அருமையான வாய்ப்பை அருகில் கொண்டிருக்கிறார்கள் என்று கூற முடியும்.

இந்நிலையில் எந்த அதிகாரப்பரவல் திட்டங்களும் இந்த அர்ப்பணிப்பையோ விடுதலைப்புலிகளின் ஒருமித்த மனோபாவத்தையோ தடம் புரள வைக்க முடியாது. இதற்கு தமிழீழத்தைத் தவிர வேறு தீர்வு இல்லை.

இந்த நிலையில் சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகளை அதிகாரப் பரவல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என எதிர்பார்ப்பது நகைப்புக்குரியதாகும். அதிகாரப்பரவல் ஒப்பந்தம் என்பது அனைத்துலகப் பங்காளிகளை திருப்திப்படுத்தவே யன்றி வேறெதற்குமில்லை.

## தமிழீழ அரசு

தமிழீழம் உருவாக்கப்பட்டால் அரசு நிர்வாகம் எத்தகைய தன்மையதாய் இருக்கும்? அது சிவில் நிர்வாகத்தின் கீழிருக்குமா அல்லது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்குமா?

அனைத்துலக நாடுகளின் சமூகத்தினால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட தமிழீழமாக இருந்தால் விடுதலைப்புலிகள் அதிகாரத்தில் வைத்திருப்பது நீதியில்லைதான்.




படிப்பகம்

www.padippakam.com



திறமைகள் பிரகாசமான தொழில்நுட்ப நாடாக ஈழம் வருவதற்கு வாய்ப்பினைக் கொண்டிருக்கிறது.

**ஜாதீய மற்றும் பால்வேற்று மையற்ற சமூகம்**

மாறுபட்ட புதிய சமூகத்தை தமிழீழம் கொண்டிருக்கும் என்பது சந்தேகத்திற்கு அப்பாற் பட்டது. பெருகு காலங்களாக விடுதலைப்புலிகள் அமைப்பினால் நடத்தப்பட்டு வருகிற போர் தமிழர்களுக்குப் புதிய மாதிரியான சமுதாயத்தை நோக்கிய வழியாக ஆகியிருக்கிறது. மிக முக்கியமாக சாதிய அமைப்பிலான கொடுமைகள் நீக்கப்பட்டி ருக்கின்றன. விடுதலைப் புலிகள் அமைப்பு இதன் மீதான பயத்தை அறிந்து வைத்திருக்கிறது. பெண்களின் கௌரவம் மற்றும் பெருமை மீட்டெடுக்கப்பட்டிருப்ப தோடு புதிய சமூகத்தை உயிர்ப்பித்திருக்கிறது. ஜனநாயக மற்றும் சமத்துவ ரீதியிலான புதிய அமைப்பை கொண்ட பங்கை அவர்கள் பெற்றிருப்பார்கள். அனைத்து வகையான பாகு பாட்டிற்கும் உட்பட்டிருந்த காலமெல்லாம் போய் விட்டது. ஒரே மாதிரியாக விதிக்கப்பட்ட, புனிதம் என்று கற்பிக்கப்பட்ட பாலியல் நிலை என்கிற பாரத்தை சுமப்பதிலிருந்து விடுபட்டு புதிய பொறுப்புகளுடன் ஆண்களோடு தோள் சேர்த்து நிற்பார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது. சாதாரண மக்களை, பழைய பண்பாட்டு பழக்கவழக்கங்கள், பழம் செயல்பாடுகள் என்பனவற்றை தவிர்க்கச் செய்து ஒரு புதிய தமிழ் சமூகத்திற்கு மாற்றியிருப்பது எப்படி என்று புரிந்து கொள்ளாதவர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பை ஒரு போராட்ட எந்திரமாக மட்டும் பார்க்கிறார்கள்.

பெருவாரியான வாக்கெடுப்பின்மூலம் நிறுவப்படும் ஜனநாயக அமைப்பிலான அரசாங்கம் இயங்க வேண்டும் என்பதே விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் கொள்கையாக விளங்குகிறது. விடுதலைப் போராளிகள் அரசியல் கட்சி அமைப்புடன் தேர்தல்களில் போட்டியிடலாம் ஆனால் அரசியல் அதிகாரம் பெருவாரியான பங்கெடுப்பு மற்றும் வாக்கெடுப்பு அடிப்படையில்தான் தீர்மானிக்கப்பட முடியும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு அதற்காக இல்லாமல் போய்விடாது. ஆனால் அது பாதுகாப்பு கருவியாக மாறிக் கொள்ளும். வேறு மாதிரி சொல்ல வேண்டுமானால் புதிய நாட்டின் பிரதமராகவோ அல்லது அதிபராகவோ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் அரசியல் உலகிலிருந்து ஓய்வு பெறும்வரையும் நீடிக்கலாம்.

**அதிதொழில் நுட்ப தமிழீழம்**

தேசியக் கட்டுமானத்தில் ஈழம் சாத்தியப்படுமா? கடந்த சில பத்து வருடங்களில் பல நாடுகள் சுதந்திரத்தை அடைந்திருக்கின்றன. அவையெல்லாம் நன்றாக செயல்படுகின்றன. தமிழீழம் சிறப்பாக செயல்படாது என்று எதிர்பார்க்க அவசியமில்லை. புலம்பெயர்ந்த பரவலான தமிழ் சமூகத்திடமிருந்து தமிழீழத்திற்கு ஆதரவையும் நிதியையும் எதிர்பார்க்க முடியும். ஏராளமான தமிழ் அறிஞர்கள், தொழில் முனைவர்கள், புலம் பெயர்ந்து பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் தமிழீழத்தின் வளர்ச்சிக்குப் பங்களிக்க முடியும். ஈழம் அரசியல்ரீதியாக நிர்மாணிக்கப்படும் பொழுது பொருளாதார உதவியை வழங்க உதவும் கரங்கள் (donor agencies) தயாராய் இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

முன்னர் 1990களில் நினைத்துப் பார்க்க வேண்டும். ஜப்பான் தமிழர் இடங்களில் மேம்பாட்டு உதவியை வழங்க மிக்க ஆர்வமாய் இருந்தது. அதை தடுத்து நிறுத்தியது சிறீலங்கா அரசாங்கம். எனவே தமிழீழம் என்பது முற்றிலும் சாத்தியப்படக்கூடிய நாடு. இதற்கு மேலாக, பரவலாய் விரிந்து பரவியிருக்கிற புலம்பெயர்ந்த தொழில் நுட்ப வல்லுனர்களின் இயற்கையான ஆதரவு, அவர்களின் அதிதொழில்நுட்பத்

**மதச்சார்பின்மையுடனான ஜனநாயகம்**

ஜனநாயகத்துடன் கூடிய மதச்சார்பின்மையை அடிப்படையாகக் கொண்டதாக தமிழீழத்தின் கொள்கைகள் அமையும். வழிபாட்டுச் சுதந்திரம் இருக்கும். தமிழர்களைப் போலவே மற்ற இனத்தவரும் இணையான உரிமைகளை அனுபவிக்கலாம். இசுலாமியர்கள் தமிழீழத்தில் முக்கிய பங்கை கொண்டிருப்பார்கள். முஸ்லீம்கள் தமிழீழத்தை ஆதரிக்கும் போது தமிழீழத்தின் துணைத்தலைவராக ஒரு முஸ்லீம் வருவதற்கு வாய்ப்புள்ளதாக அறிகுறிகள் தென்படுகின்றன. உண்மையில் கிட்டுவின் காலத்தில் முஸ்லீம்களுக்கு ஏராளமான சலுகைகள் புதிய நிர்வாகத்தில் உறுதியளிக்கப்பட்டது. இது உண்மையாகிற பொழுதுதான் சிங்கள அரசு விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் முஸ்லீம் சமூகத்தினருக்குமிடையே கெட்ட உறவைத் தூண்டி விட்டது.

விடுதலைப்புலிகள் முஸ்லீம் சித்தாந்த வாதிகளுக்கு எதிரானவர்களல்லர். உண்மையில் முஸ்லீம்களின் ஆதரவைப் பெற புலிகள் அமைப்பு மிகவும் பாடுபட்டுள்ளது. புலிகள் அமைப்பின் உறுதிமொழிகளில் உள்ள மதிப்பை முஸ்லீம்களின் பெரும்பாலானோர் புரிந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. சிங்களப் பெரும்பான்மையினரால் தமிழர்கள் ஒதுக்கப் பட்டுள்ளனர், வேதனையடைந்திருக்கின்றனர். ஆனால் தமிழீழத்தில் அனைத்து இனத்தவரும் சமஉரிமைகளைப் பெற்று மகிழ்வார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

நூல்களை வாசியுங்கள். பரிசு பெறுங்கள்! என்னும் தலைப்பில் நீங்கள் வாசித்த நூல்களில் உங்களுக்குப் பிடித்தமான பகுதியைக் குறிப்பிட்டு எழுதிப் பரிசு பெறுங்கள் என்று குறிப்பிட்டிருந்தோம். கலந்து கொண்டவர்களின் இரண்டு கருத்துக்கள் இந்தப் பக்கங்களை அலங்கரிக்கின்றன. அவர்கள் ஒவ்வொருவரும் **RM20.00** பரிசு பெறுகிறார்கள். (ஆ.ர்)




## தமிழ்ச்செல்வம்

திருக்குறள் தமிழகத்தின் செல்வம் அதுவும் தமிழனின் சொந்தச் சொத்து. அது உலகின் ஒப்பற்ற செல்வங்களில் ஒன்றாக இன்னும் திகழ்ந்து வருகிறது.

முத்துக் குளிக்கும் மக்கள் தங்கள் மூச்சு வலிமைக்கு ஏற்ற அளவு கடலில் மூழ்கிச் செல்வங்களை அள்ளி வருவதுபோலக் குறளில் மூழ்கும் மக்களும் தங்கள் அறிவு வலிமைக்கு ஏற்ற அளவு செல்வங்களை அள்ளி மகிழலாம்.

உலகில் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பெற்ற நூல்களில் திருக்குறளே எனக்கு மிகவும் பிடித்த நூலாகும். இவை மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. முதல் இரண்டும் பைபிளும் குரானும் ஆகும். அவை 'சமய நூல்கள்' என்று ஒதுக்கப்பட்டு விடுமானால், உலக இலக்கியங்களிலேயே திருக்குறள் ஒன்றிற்கே முதல் இடம் கிடைத்திருக்கிறது என்று பெருமையடையலாம். திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல்; அதுவும் வாழ்ந்து காட்டிய ஒரு பேரறிஞனால் 2000 ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பெற்ற ஒரு பெருநூல். வாழ்வு அனைத்தும் வாழ்வாகது. வாழ்வில் உயிர் பெறுவதே வாழ்வு. குறள் அத்தகைய வாழ்விற்கு வழிகாட்டும் ஒரு வழிகாட்டி.

இந்நூலில் 12 குறள்கள் ஆராயப் பெற்றுள்ளன. முதல் எட்டுக் குறள்களில் புதை பொருள்களும், பின் நான்கு குறள்களில் மறைபொருள்களும் விளக்கப் பெற்றுள்ளன. மாறுபட்ட பொருள்கள் தமிழகப் பேரறிஞர்களால் ஏற்கப் பெறுமானால் ஏற்பேன்.

திருக்குறள் மேற்போக்காகப் படிப்பதைவிடச் சிறிது கருத்தூன்றிப் படிப்பது நல்லது, அதுவும் அறிவதற்காக, போதிப்பதற்காக, எழுதுவதற்காக, பேசுவதற்காக என்று இல்லாமல், நடந்து ஒழுகுவதற்காக என்று படிப்பது நல்லது. இந்நூலை எழுதிய ஆசிரியரின் பெயர் கி.ஆ. பெ. விசுவநாதம்.

**விக்டோரியா செல்வராஜு,** சிலிம் ரிவர், பேராக்.

## ஒரே வரி!

நூலை வெறும் எடையைக் கொண்டு மட்டும் நிர்ணயப்பதில்லை. அது வெறும் பக்கங்களை மட்டும் கொண்டதல்ல. முகப்பு அட்டையில் பெண் முகம் இருப்பது மட்டுமல்ல நூல். வாசனைச் சொற்களை அள்ளித் தெளித்துக் கோலம் போட்டதல்ல நூல்.

சமுதாயம் கொண்டிருக்கும் இழி குணங்களைச் சிக்கெடுப்பதாக இருந்தால், சமுதாயத்தினி டையே காணப்படும் தடைக்கற்களைச் செதுக்கி சிற்பமாக்க முனைந்திருந்தால், இந்தியரின் எதிர்காலத்தைத் தூக்கி நிறுத்துவதாக இருந்தால், நான்கு வரிகளால் மட்டும் நிரப்பப்பட்டிருக்கும் ஒரே ஓர் ஏடு கூட ஒரு நூலுக்கான அங்கீகாரம் பெறும்.

அப்படிப் பார்த்தால் எனக்குப் பிடித்த அந்நூல் ஒரு நான்கு வரி கவிதைதான். அந்த வரிகள், நாலாயிரத் திவ்ய பிரப்பந்தத்திற்கு சரி நிகரானது என்று கல்வெட்டுக்களில் செதுக்கி வைக்கலாம்.

அக்கவிதை இதுதான் -
"ஐந்தில் நகராதது
ஐம்பதில் நகரும்
அதுதான்!
ஆப்பிஸ் ஃபைல்" (OFFICE)

இதையெழுதிய கை, ஒரு இந்திய இளைஞனின் கை என்பதோடு வேறொன்றும் எனக்குத் தெரியும். ஆம்! அதுதான் அவனுடைய முகவரி. முகவரி என்னவென்றால், உழைக்கும் வர்க்கத்தின் நிறமாம் கருப்பு என்பதே அவன் முகவரி.

வாழ்க்கையைப் பற்றி இக்கவிதை நூல் என்னென்னவோ நமக்கு உணர்த்துகின்றன. அந்த என்னென்னவோ' உணர்த்துவதையெல்லாம் உருகி உருகி எழுதினால் 'செம்பருத்தி குடும்பத்தினர்' கொடுத்திருக்கும் இப்பக்கம் ஒன்று போதா.

இந்நூல் உணர்த்தும் கருத்தோடு முடிக்கிறேன். தாத்தா பாட்டியிலிருந்து, அம்மா, அப்பா வரையிலும் ஒரு சம்பிரதாயத்துக்காக, 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்று கூறி வந்தார்கள். ஆனால், எதார்த்த வாழ்க்கையில் ஆபீஸ் ஃபைல்கூட ஐந்துக்கு நகராமல், ஐம்பதுக்கும் ஐம்பதுக்கும் மேலும்தான் நகர்கிறது. காலச்சக்கரத்தில் மனிதர்கள் இடம் தெரியாமல் சுற்றிக் கொண்டிருப்பதைத்தான் இந்நூல் நமக்கெல்லாம் அறிவுறுத்துகிறது.

**மு. ரவிந்திரன்,** ஈப்போ, பேராக்.


படிப்பகம்

www.padippakam.com

# ஓயாத அலைகள் ஒருபோதும் ஓயாது!

## அன்ரன் பாலசிங்கம்

**"தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் "தமிழ் கார்டியன்" ஆங்கில இதழுக்கு வழங்கிய நேர்காணலின் சில பகுதிகள் இவை. சிறிலங்கா அரசின் தீர்வுத் திட்டம் தோல்வியுற்ற இன்றைய நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டந் தளத்தின் சூழலை இந்நேர் காணல் விளக்குகின்றது. (ஆர்)**

***யாழ்ப்பாணத்தில் சண்டை ஓய்ந்து போய் இருக்கிறது. சிங்கள ஆயுதப் படைகள் நவீனரசு ஆயுதங்களைப் பயன்படுத்துவதன் விளைவாகவே விடுதலைப் புலிகளின் தாக்குதற் சமர் நிறுத்தப்பட்டிருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. இது பற்றி உங்கள் கருத்தென்ன?***

*விடுதலைப் புலிகளின் தாக்குதற் சமர் இராணுவத்தால் நிறுத்தப்படவில்லை. யாழ்ப்பாணக் குடா நாட்டில், தாம் கைப்பற்றிய பிரதேசங்களை விடுதலைப் போராளிகள் பலப்படுத்தி, நிலைப்படுத்தி வருகிறார்கள். சாவகச் சேரிப்பகுதியில் போர் நிகழ்ந்த இடங்களில் சிக்குண்டு தவிக்கும் தமிழ் மக்களைப் பாதுகாப்பான இடங்களிற்கு அப்புறப் படுத்தும் நோக்கிலேயே போர் தற்காலிகமாக ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது. சிங்கள இராணுவம் இப்பகுதியில் அப்பாவிப் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன் படுத்தியது மட்டுமின்றி, கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களை நடத்தியும், விமானக் குண்டுவீச்சுக்களை நிகழ்த்தியும் பெரும் தொகை யானோரை கொன்றொழித்தும் படுகாயப்படுத்தியும் உள்ளது. மனவுறுதி தளர்ந்த நிலையில் இருக்கும் இராணுவத்தினர் அப்பாவிப் பொதுமக்கள் மீதும் பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டே வருகின்றனர்.*



*விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் ஒரு பொழுதும் ஓய்ந்துவிடப் போவதில்லை. போரின் இலட்சியம் நிறைவெய்தும் வரை அலைகள் ஓயாது. அதாவது, யாழ்ப்பாணக் குடநாடு முழுமையாக அந்நிய இராணுவ ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெறும் வரை ஓயாத அலைகள் ஓய்ந்து விடாது.*

***பல குழல் ஏவுகணைச் செலுத்திகள் போன்ற நவீன ரக ஆயுதங்கள் பாவிக்கப் படுவதால் விடுதலைப் புலிகள் தரப்பில் ஏதாவது பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளனவா?***

*இந்த ஆயுதம் பெருமளவில் கண்மூடித்தனமாக பாவிக்கப்படுவதால்தான் பொதுமக்கள் மத்தியில் பெருமளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டது. இதனால்தான் சாவகச்சேரிப் பகுதியில் சொத்துக்களுக்கும் பெரும்சேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த வகையான ஆயுதங்கள் எம்மிடமும் இருக்கின்றன. இதனை நாம் சிங்கள இராணுவத்திற்கு எதிராகப் பாவிப்பதும் உண்டு. போராளிகள் இந்த ஆயுதத்தின் பாவனைப்பற்றியும் அதன் தாக்கம் பற்றியும் நன்கு அறிவார்கள். ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிப்பது ஆயுதங்கள் அல்ல. போரிடுபவர்களின் மனோதிடமும், உறுதியும், இலட்சியப் பற்றுமே ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் இந்தப் போரியல் பண்புகள் தாராளமாக இருக்கிறது. அதனால் போரில் அவர்களுக்கே வெற்றி நிச்சயம் என்று உறுதியாகச் சொல்லலாம்.*

***வடகிழக்கில் ஒரு இடைக்கால நிர்வாக சபையை நிறுவுவதென அரசாங்கமும் எதிர்க் கட்சியும் இணைந்து முடிவெடுத்திருக்கின்றன. ஆயுதங்களைக் கீழே போட்டு, வன்முறை யினைக் கைவிட்டு, ஜன நாயக நீரோட்டத்தில் இறங்கினால் விடுதலைப் புலிகளும் இதில் பங்கு கொள்ளலாம் என அரசு நிபந்தனை விதித்திருக்கிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?***

*இந்த அரசாங்கம் ஒரு கற்பனாவாதத்தில் மூழ்கி இருப்பதுபோலவே எனக்குத் தோன்றுகிறது. தமிழர் தாயகத்தின் 70% விகிதமான பெருநிலப்பரப்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. யாழ்ப்பாணக் குடாநாடும் வெகுவிரைவில் எமது கட்டுப்பாட்டின் கீழ் வந்து விடும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. தற்போது கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் ஒரு சுயாட்சி முறையை அமைத்துள்ளோம். அங்கு ஒரு நிரந்தரமான நிர்வாகத்தை நடத்தி வருகின்றோம். நிலைமை அப்படி இருக்கும்போது, ஒரு இடைக்கால நிர்வாகத்தில், ஒரு சில ஆசனங்களுக்குப் போட்டி யிடுவதற்காக தமிழ் மக்களின் ஒரேயொரு பாதுகாப்புச் சாதனமான ஆயுதங்களைப் போட்டுவிட்டு, போராட்டத்தைக்*



படிப்பகம்

www.padippakam.com

கை விடுவதற்கு நாம் என்ன வடிகட்டிய முட்டாள்களா? அப்படித்தான் அரசாங்கம் ஒரு தற்காலிக நிர்வாக சபையை உருவாக்கினால்கூட இன்றைய போர்ச்சூழலில் அது இயங்குவது சாத்தியமில்லை. இந்திய இராணுவபலத்தின் நிழலின் கீழ் கட்டி எழுப்பப்பட்ட வடகிழக்கு மாகாண நிர்வாகம் கூட செயற்பட முடியவில்லையே!

வடகிழக்கின் யதார்த்தமான கள நிலவரங்களை உதாசீனம் செய்துவிட்டு சந்திரிகா அரசு மிகவும் கேலிக்கூத்தான திட்டங்களை முன்வைக்கிறது. தனது கூட்டணி அரசாங்கத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழ்க் கூலிப் படைகளின் அதிகாரப் பசியைத் தீர்க்கச் சந்திரிகா அம்மையார் இடைக்கால நிர்வாகம் என்ற பெயரின் சில அழுகிப் போன எலும்புத் துண்டுகளை வீசலாம். அற்ப அதிகாரங்களுக்காகவும், சலுகைகளுக்காகவும் தமிழ் மக்களின் பேரவலத்திலும் பெரும் துன்பத்திலும் குளிர்காய்ந்தபடி ஒடுக்குமுறை ஆட்சியாளர்களுக்கு அடிவருடிகளாகத் தொண்டு புரிபவர்களின் துரோகத்தை வரலாறு ஒரு பொழுதும் மன்னிக்கப் போவதில்லை.



**கூடிய விரைவில் போர் நிறுத்தமும் சமாதானப் பேச்சுக்களும் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டா?**

யாழ்ப்பாணக் குடாநாட்டை ஆக்கிரமித்து நிற்கும், சிங்களப் படைகள் வாபஸ் பெறப்பட்டால் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்கான சாத்தியம் உண்டு. ஆனால் அதே வேளை யாழ்ப்பாணம் மீதான இராணுவ ஆக்கிரமிப்பை அரசாங்கம் தொடர்ந்து நீடிக்க விரும்பினால் போர்ச் சூழ்நிலை தொடரும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல பகுதிகளை விடுதலைப் புலிகள் ஏற்கனவே மீட்டெடுத்துள்ளனர். இறுதி இலட்சியத்தை அடையும் வரை யாழ். மீட்புச் சமர் தொடரும்.

**தமிழரின் இனப் பிரச்சினைக்கான தீர்வானது இலங்கையின் ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றின் கீழ் அமைய வேண்டுமென உலக வல்லரசான அமெரிக்காவும், பிரதேச வல்லரசான இந்தியாவும் வலியுறுத்தியுள்ளன. தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்காக நடத்தப்படும் உங்களது விடுதலைப் போராட்டத்திற்கு இந்தக் கூற்றுக்கள் பாதகமாக அமையுமென நீங்கள் கருதுகிறீர்களா?**

சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காக அமெரிக்காவும் இந்தியாவும் இத்தகைய அறிக்கைகளை வெளியிட்டிருக்கலாம். இந்நாடுகளது பூகோள - அரசியல் நலன்களையும் அச்சங்களையும் நாம் புரிவோம்.

அரசியல் சுதந்திரம் கோரி தமிழர் நிகழ்த்தும் போராட்டத்திற்குப் பாதகம் விளைவிக்கும் நோக்கில் இந்த அறிக்கைகள் வெளியிடப்பட்டதாக நாம் நினைக்கவில்லை.

பேச்சுவார்த்தை மூலமாக ஒரு அரசியல் தீர்வுகாண இரு தரப்பினரும் முயற்சியெடுக்க ஊக்கமளிப்பதற்காகவே இந்தக் கருத்து வலியுறுத்தப் பட்டிருக்கலாம். தமிழரின் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணும் விடயத்தை நிர்ணயிக்கும் சக்தி, அமெரிக்க வல்லரசிடமோ அன்றி இந்தியப் பிராந்திய வல்லரசிடமோ, அல்லது சிறீலங்கா அரசிடமோ இருக்கவில்லை.

எமது தேசத்தின் அரசியல் அந்தஸ்தையும் தலைவிதியையும் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குவது எமது மக்கள்தான், தமிழீழ மக்கள்தான்.

**இந்திய அரசானது சிறீலங்காவிற்கு 100 மில்லியன் டாலர் பெறுமதியான கடன்வசதி வழங்கியிருக்கின்றது. அதுபற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

ஒரு மனிதாபிமான உதவியாக இந்தக் கடன் வசதி வழங்கப்பட்டபோதும், அது சிறீலங்காவின் நிதிவளத்தை மேம்பாடு செய்யும் என்றே நாம் கருதுகிறோம். அத்துடன் மறைமுகமான வழியில் சிறீலங்காவின் போர் முயற்சிக்கும் அது உதவக்கூடும். இந்தக் கடனுதவியானது எந்தவித மனிதாபிமான நோக்கத்தையும் பேணப்போவதில்லை.

மாறாக இது சிறீலங்கா அரசின் இராணுவ முயற்சிக்கு ஊக்கமளித்து தமிழ் மக்களின் துன்பப் பளுவை மேலும் அதிகரிக்கலாம்.

இதையிட்டு தமிழ் மக்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளனர். வடக்கில், மருந்தும் உணவும் தடைசெய்யப்பட்ட நிலையில் தமிழ் மக்கள் பலர் செத்து மடிகிறார்கள்.

அவர்களுக்குத்தான் அவசரமான மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன. ஆனாலும் மக்களின் இந்தப் பெரும் அவலம் இந்தியாவின் ஆன்மீகத்தையோ அல்லது இந்தியாவின் மனச்சாட்சியையோ தொட்டதாகத் தெரியவில்லை. ●



படிப்பகம்

www.padippakam.com



### புதிய தோற்றம்

செம்பருத்தி மாத இதழ் புதிய தோற்றத்துடனும் ஒரு சில மாற்றங்களுடனும் வெளிவருவதைக் கண்டு மகிழ்ச்சி. நமது இந்திய சமுதாயத்திற்கு இன்றைய தேவைகள் என்ன என்பதை மேலும் அறிந்து இன்னும் சிறப்பாக வெளிவர வேண்டும் என எதிர்ப்பார்க்கின்றேன்.

தொடர்ந்து பி.எம்.ஆர், எஸ்.பி.எம், எஸ்.டி.பி.எம் மாணவர்களின் எதிர்ப்பார்ப்பையும் பூர்த்தி செய்யுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

தேவையில்லாத நீக்க வேண்டிய பகுதிகளை நீக்கி விடுங்கள். சிந்தனையை தூண்டக்கூடிய பயனுள்ள பகுதிகள் எதுவாயினும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

***எம்.கே. தியாகராஜன் புக்கிட் மெர்தாஜம்.***

### மாணவர்கள் படிக்க வேண்டிய செம்பருத்தி

செம்பருத்தியின் வண்ணமோ சிகப்பு - அதன் செல்வாக்கு
நிலை பாரில் மிகவும் சிறப்பு
செம்பருத்தி விற்பனையில் காண்கிறது செழிப்பு
சிறந்து விளங்கிட யென் மனம் களிப்பு.

சுற்றுச் சூழலில் அதன் மதிப்பொரு வாசிப்பு
சுதந்திர நாட்டிற்கொரு தித்திப்பு - நான்
சும்மா சொல்ல வில்லை யதன் மதிப்பு
சுற்றத்தார்கள் தவறாது வாங்கிப் படித்தாலது பூரிப்பு.

நம் நாட்டிற்கு மிகத் தேவையான செம்பருத்தி
நலம் பல பெற்றுயர வாழ்த்துவோ மனமுயர்த்தி
நல்லவர் கைகளில் இடம் பெறவேணும் சிறந்து
நானிலம் தினமும் போற்றணுமதை மனமகிழ்ந்து!

***பி. இராமசாமி, நிபோங் திபால்.***

### அழகுதான்

என் நண்பர் கல்லல் தீசன் மூலம் எனக்கு "செம்பருத்தி" அறிமுகமானாள்.

அவளின் அறிவைக் கண்டு, அவளின் அழகைக் கண்டு தமிழ் மீதும் தமிழினம் மீதும் தமிழீழம் மீதும் அவள் கொண்டுள்ள பற்றைக் கண்டு வியந்தேன்.

என்னையும் அறியாமல் அவளிடம் ஆம் என் செம்பருத்தியிடம் என் மனதைப் பறிக்கொடுத்தேன்.

இந்த மாதம் ஆசியாவின் ஐம்பது பிரமுகர்களை எனக்கு அறிமுகப்படுத்தி பெருமை தேடிக் கொண்டாள் என் செம்பருத்தி.

"50 பேர் சுட்டு கொலை! அச்சச்சோ. 'க்' னாவைக் காணோம்" என்று குறும்பாக கேட்ட என் செம்பருத்தியின் அழகோ அழகுதான் போங்க.

நானும் "செம்பருத்தியின்" மூலம் உலக செய்தியோடு உலா வந்தேன். பிறகு நுகர்வோர் பக்கம் என்னை அழைத்து சென்றாள் என் செம்பருத்தி. சிந்திக்கவும் வைத்தாள்.

"வெறுப்பு" கவிதை பக்கம் என்னை அழைத்து சென்று கவிதை மழையில் என்னைக் குளிக்க வைத்து விட்டாள் என் செம்பருத்தி.

நேராக என்னை அறிவுமதியிடம் அழைத்து சென்றாள். அவர் சமைத்த சமையலை (அதாங்க கவிதை) நிலா வெளிச்சத்தில் என் செம்பருத்தி ஊட்டி விட்ட அழகே தனி அழகுதாங்க.

உண்ட என்னை உறங்க அழைத்து சென்றாள் ரசிகனின் இலக்கிய இல்லத்துக்கு. ரசிகனின் இலக்கியத்தை ரசித்து சுவைத்தால் தூக்கமா வரும்:

என் கைபிடித்து அழைத்து சென்றாள் நம் மொழிப் பக்கம் என் காதலி செம்பருத்தி.

ஜெ. கரிகாலனிடம் கொஞ்ச நேரம் அவர் கருத்தை கேட்டு விட்டு என்னை அழைத்து சென்றாள் என் செம்பருத்தி. அண்ணன் பழ. நெடுமாறன் அவர்களிடம் அவர்களின் எண்ண குமுறலை கேட்டு மன வேதனையோடு அண்ணன் மணிவண்ணனிடம் அழைத்து சென்றாள் என் செம்பருத்தி. அவர் கனவு பலிக்க வேண்டும் என்று ஆண்டவனை வேண்டி சிந்தனைப் பக்கம் அழைத்து சென்று என்னை மீண்டும் சிந்திக்க வைத்தாள்.

நான் சிந்திக்க, சிந்திக்க என் மடியில் தலை வைத்து சிறு குழந்தை போல் தூங்கிய என் செம்பருத்தியின் அழகோ அழகுதான்.

***காரைக்குட கண்ணதாசன், ஊா அலாம்.***

முகமும் முழு அமைப்பும் மாற்றப்பட்டிருக்கிறது. வெறும் பூச்சுக்களாக இல்லாமல் கணினி மூலமான மெருகேற்றுதல்கள் உயிர் கொடுக்கின்றது என்பது உண்மை. புதிய வடிவமைப்புக் கூட்டணிக்கு பாராட்டுதல்கள். மேலும் புதியவைகள் செய்வார்கள் என்று எதிர்பார்க்கலாம். இதழ் வடிவமைப்பு மிக முக்கியமானதாக, அது செயல்படும் நவீனத்துவ பின்நவீனத்துவ, காலத்திற்கேற்றவாறான இலக்கிய வகையோடு போட்டியிடுவதாக வளர வேண்டும் என்பதற்கு ஒப்பானதாகவே இவ்வளர்ச்சியை நான் காண்கிறேன். மற்ற இலக்கியப் படைப்புகளுக்கு ஒப்பாக விளங்கத் தேவையினை ஒவியநுணுக்கமும் பின்பு அதை கணினி உதவியுடன் மெருகேற்றுவதன் புதிய நுட்பங்களும் காலத்திற் கேற்றவாறு செம்பருத்தியில் அறிமுகமாகியிருப்பது வரவேற்கத்தக்கது. புதிய புதிய தலைமுறையினரின் புதிய கோணங்களோடும் கற்பனைத் தீண்டல்களுடனும் பலகாலம் செம்பருத்தி வர வேண்டும்.

***ஜெ. கரிகாலன்***



படிப்பகம்

www.padippakam.com

அட்டைப்படம்

ஒன்பது முகங்கள்
ஒரு முகம்
தனி முகம்!

இன்னொரு உயிரை
தன்னுயிரில் வைத்துப்
பார்க்கத் தெரிந்தால்
அதற்குப் பொருள்
உயிரை உயிர் வழி அறிதல்
என்பதாகும்!

உயிரை
உயிர் வழி
அறியும்போது
எப்போதுமே

இது போன்ற படங்களைப்
புறந்தள்ளி விடுவோம் -
காரணம்
அவளும் கடமை
புரிகிறாள்
நமதுகடமை நமக்கு
அவளது கடமை
அவளுக்கு
உயிரை
உயிர் வழி அறியும்போது
மகிழ்ச்சி ஏற்பட வேண்டும்
சிரிப்புக்கும் நகைப்புக்கும்
ஏன் இடம் வைக்க
வேண்டும்?

**வாசகர்கள், கோலாலம்பூர்.**

**மாதச் சம்பளம்**

இன்று உள்ள சக இதழ்கள் அட்டைப்படத்தில் சினிமா நடிகர், நடிகையின் படங்களைப் போட்டு வலம் வரும்போது செம்பருத்தி மாத இதழோ அதற்கு அப்பாற்பட்டு வலம் வருகின்றது.

மேலும் கடந்த இதழில் ஆக்கங்கள் எல்லாம் பழமைபோல் இருந்தாலும் முன்பு சொல்லிய விஷயத்தை விட சற்று தணிந்து உள்ளது போல் உள்ளது. அதற்குக் காரணம் ஏதாவது அரசியல் அழுத்தங்கள் இருக்கும் என்று நினைக்கிறேன்.

கடந்த இதழில் தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கத்தின் அறிக்கை போடப்பட்டுள்ளது. அது பெயரில்லாத ஒரு மொட்டை அறிக்கை போலுள்ளது. அதில் கூட்டுறவு சங்கம் அடைந்த இலாபம் என்று ஒரு பட்டியலைப் போட்டு அசத்தியுள்ளார்கள். அத்துடன் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் வழங்கியது என்று குறிப்பிட்டு எழுதியிருந்தீர்கள் அப்படியானால்,

1. நீலாயில் கட்டிக் கொடுக்க இவர்கள் அடைந்த இலாபம் போதாதா?

2. மாதச் சம்பளம் என்கிறீர்களே. அது எவ்வளவு? மலேசியன் ரிங்கிட் 750 கொடுத்துள்ளார்களா?. இல்லையே 380 ரிங்கிட்தானே கொடுத்துள்ளார்களா? அது அந்தக் கூட்டுறவு சங்கத்தில் வேலை பார்க்கும் ஒரு எடுபிடி (பியூன்) எடுக்கும் சம்பளத்தை விட இரண்டில் ஒரு பங்குதானே எடுக்கிறார்கள். ஆக தோட்டத் தொழிலாளர்க்கு மாதச் சம்பளம் கொடுப்பதற்கு இந்த இலாபம் போதாதா?

**வேலன், சிரம்பான்**

## தந்திரக்கணக்கு 8
## பரிசு பெற்றவர் விபரம்

தந்திரக்கணக்கு 8-ல் 34 வாசகர்கள் கலந்து கொண்டனர். இதில் 12 வாசகர்கள் சரியான விடைகளை அனுப்பி யிருந்தனர். அவர்களுள் அதிர்ஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

**மகேஸ்வரன் த/பெ இராஜகுமாரன்**
**புக்கிட் செராக்கா தோட்டம்**

*இவருக்கு இம்மாதத்திற்கான*
*RM 20.00 பரிசு*
*அனுப்பி வைக்கப்படுகின்றது!*

# நவீன இலக்கியச் சிந்தனை

இந்தச் செம்பருத்தி மண்ணின் நட்சத்திர வீதிகளின் மீது படிந்திருக்கும் இலக்கியத் தூசுகளைத் துடைத்தெறிந்து புயற்கவிதை எழுதப் புரவியேறி வரும் புதிய அபிமன்யுவுக்காய் நிலா மகுடம் ஏந்திக் காத்திருக்கும், மலேசியாவில் நவீன தமிழ் இலக்கியத்தின் பால் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய நவீன இலக்கியச் சிந்தனை அமைப்பு விரைவில் நான்காவது புதுக்கவிதைக் கருத்தரங்கினைக் கூட்டும் திட்டத்தை முன்னறிவிப்பதில் மகிழ்கிறது.

புதுக்கவிதை மீதான மீள்பார்வை கண்ணோட்டத்தையும், திறனாய்வுகளையும் அத்துறையின் மீட்சிக்குப் பயனாக்கிக் கொள்ளும் விதத்தில் நான்காவது புதுக்கவிதைக் கருத்தரங்கின் நோக்கம் நிகழ்ந்தெழும்.

மலேசியத் தமிழ் புதுக்கவிதைகளில் மிக மிகச்சிறந்த கவிதைகளைத் தொகுப்பாக்கி தமிழ்கூறு நல்லுலகின் கவனத்திற்குக் கொண்டு செல்லப் படைப்பாளிகளின் கனகம்பீரக் கவிதைகளை மிகவும் எதிர்பார்க்கிறது நவீன இலக்கியச் சிந்தனை.

மலேசியத் தமிழ்ப்புதுக்கவிதைத் தடாகத்தின் ஆழ, அகலங்கள் குறித்தும், எழுதப்படுகிற / எழுதப்பட வேண்டிய கவிதைகளின் மீது தணியாத தீப்பார்வை கொண்டெழுதப்படும் எடைத்திறன்மிக்க விமர்சனக்கட்டுரைகள் பத்து முதல் பதினைந்து பக்கங்களுக்குள் அமைந்து எதிர்பார்க்கப்படுகிறது.

புதுக்கவிதை மீதான ஆய்வுக்கட்டுரைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவைகளுக்குப் பரிசுகள் வழங்கப்படும். நான்காவது புதுக்கவிதைக் கருத்தரங்கிலும் சிறப்பு பெற்ற விமர்சனக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டு, பொது விவாதத்திற்கு விடப்படும்.

நான்காவது புதுக்கவிதைக் கருத்தரங்கில் அமரர் டாக்டர் இரா. தண்டாயுதம் இலக்கியப் பரிசான தங்கப்பதக்கங்கள் மூவருக்கு வழங்கப்படும். புதுக்கவிதை இலக்கியத்தை இந்தச் செம்பருத்தி மண்ணில் வேர் பரப்ப முனைந்து செயற்பட்ட மூவருக்கு அந்த விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள்.

இவ்வாண்டு டிசம்பர்த் திங்களில் ஈப்போ மாநகரில் நடைபெறுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கும் நான்காவது புதுக்கவிதைக் கருத்தரங்கிற்கான ஆய்வுக் கட்டுரைகளையும் கவிதைகளையும் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி உதவுமாறு நவீன இலக்கியச் சிந்தனை அமைப்பு, படைப்பாளிகளை ஆவல்மிகுந்து கேட்டுக் கொள்கிறது.

*அனுப்ப வேண்டிய முகவரி:*

No. 37, Kampung Ambika,
32400 Ayer Tawar,
Perak Darul Ridzuan.



படிப்பகம்

www.padippakam.com

# தொழிலாளர் கூட்டுறவு நாணயச் சங்கம்




## 1999 - செயல்திறன் - ஒரு பார்வை

கூட்டுறவின் மூலம் அதன் பங்குதாரர்கள் / உறுப்பினர்கள் வாழ்க்கையில் பல்நோக்குப் பலன்களை எட்டுவது என்பதே கூட்டுறவின் உயரிய தலையாய நோக்கம். இதன் வழியில் 1080-ம் ஆண்டில் பதிவு பெற்ற 'தொழிலாளர் கூட்டுறவு நாணயச் சங்கம்' அதன் சிறந்த சேவைக்காக மாநில அளவிலும் தேசிய அளவிலும் விருதுகள் பெற்றுள்ளமைக்காகப் பாராட்டலாம்.

இதன் நடப்புத் தலைவர் டாக்டர் மு. லட்சுமணண் அவர்களின் செய்தியின்படி, "சேவையைப் பிரதான நோக்கமாகக் கொண்டுள்ள அமைப்பு என்ற வகையில், உறுப்பினர்களுக்குக் கடனுதவி வழங்குவதையே நாம் இன்னும் முதல் நோக்கமாகக் கொண்டுள்ளோம். இவ்வாண்டில் மட்டும் 71 இலட்சம் ரிங்கிட்டுக்கு மேல் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. கடந்த இருபது ஆண்டுகளில் 7.1 கோடி ரிங்கிட்டுகள் வரை பல்வேறு தேவைகளுக்காக கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வேளையில் நாம் வியாபாரக் கடனாக RM1000.00 முதல் 10,000.00 வரையில் வழங்கி வருகிறோம். வியாபாரத்துக்காக இதுவரை 202 உறுப்பினர்களுக்கு மொத்தம் RM20 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களின் பொருளாதாரச் சிரமங்களைக் களையவும் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரவும் உதவ முடிந்ததை எண்ணிப் பெருமை கொள்வோமாக! கடனுதவி பெற்ற உறுப்பினர்கள் தங்கள் கடனை முறையாகத் திருப்பிச் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்." என்று தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கல்வி நிதி/கடன் உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படுவதானது 1998-ம் ஆண்டு விவரப்படி 279 பிள்ளைகளுக்கு 10 லட்சம் வெள்ளி. 1999-ம் ஆண்டு விவரப்படி 358 பிள்ளைகளுக்கு 17 லட்சம் வெள்ளி என்று வழக்கம் போலவே கூட்டுறவின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாக பங்கு மூலதனம் உறுப்பினர்களிடமிருந்து அதிகரிக்கப்பட்டு 1998ன் 47 லட்சத்திலிருந்து 1999-ல் 52 லட்சமாக உயர்ந்துள்ளது. இவையெல்லாம் சங்க வளர்ச்சியின் மற்றும் அதன் பணிகளின் வளர்ச்சியையும் காட்டுகிறது என்று அறிக்கை தெரிவிக்கிறது. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளது. வியாபார வேகம் திரும்பப் பெறப்பட்டு அந்நியர்களின் முதலீடு நம்பிக்கையுடன் அதிகரித்திருக்கிறது என்று இரண்டு வருடங்களுக்கும் மேலாக பிரதமரால் சொல்லப்பட்டு வருகிறது. உலக வங்கி நிதியிலிருந்து அதன் உதவியில்லாமலேயே நாட்டின் பொருளாதாரம் நிலைநிறுத்தப்பட்டுள்ளதும் உண்மை. ஆனால் கடந்த 1998-ஆம் ஆண்டு மற்றும் 1999ஆம் ஆண்டு, இரண்டு வருடங்களின் அறிக்கையிலும் வார்த்தை பிறழாமல் ஒரு செய்தி வருகிறது. "நாட்டின் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாகவே, கட்டட வாயிலாக கிடைக்கப்பட வேண்டிய வாடகை, முதலீடு மற்றும் வைப்புத் தொகையின் வழி எதிர்பார்த்தது போல் வருமானம் கிடைக்கப்பெறவில்லை. இருப்பினும், பொருளாதார வீழ்ச்சி மீட்சி பெற்றவுடன் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம்".

உண்மையில் நாட்டின் பொருளாதாரம் மீட்சி பெற்றுள்ளது என்பதில் உண்மை இல்லையா என்பது தெரியவில்லை.

| | | |
|---|---|---|
| வாடகை வருமானம் | 1999 | RM 34150.00 |
| வாடகை வருமானம் | 1998 | RM 70 600.00 |
| வாடகை வருமானம் | 1997 | RM 63 872.00 |

1998 - 1999 ஒரு வருட இடைவெளியில் கடந்த வருடத்தை விட RM 36, 450.00 வெள்ளி வருமானக் குறைவு என்பது நாட்டின் பொருளாதார மீட்சி மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

இனிவரும் வருடாந்திர அறிக்கைகளில் கல்விநிதி பெற்ற உறுப்பினர்களின் விபரம், குழந்தை களின் விபரமும் வரும் என்று எதிர்பார்க்கலாம்.

பாலர் பள்ளிக்கான நன்கொடை 1998ன் 4395 வெள்ளியிலிருந்து 1999 ஆண்டு 1313 வெள்ளியாகக் குறைந்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளைவிடப் பாலர் பள்ளிகளுக்கான எழுதுகோல் மற்றும் போதனைப் பொருட்கள் போன்றவற்றிற்கான தனித்தனியான செலவுகள் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளமை பாலர் பள்ளியின் திறமையான சேவையை உணர்த்துகிறது.

***கூட்டுயர்வே நாட்டுயர்வு!***



படிப்பகம்

# இணையத்தில்

## நன்மையும் தீமையும்



கணியன்

இன்று கணினியில் பரவலாகப் பயன்படுத்தப்படும் இணையத்தில் எல்லாம் நல்லவைதான் என்று அறுதியிட்டுச் சொல்லிவிட முடியாது. அளவு கடந்த தீமைகளும் அவற்றுள் புதைந்து கிடக்கின்றன.

தீபத்தை வைத்துக் கொண்டு வீட்டையும் கொளுத்தலாம்; திருக்குறளும் படிக்கலாம் என்பது மாதிரி அது கையாள்வோரின் கரங்களையும் மீறி வம்பு பண்ணிக்கொண்டிருக்கிற வாய்ப்புகள் இப்போது அதிகம். அதை எப்படிப் பயன்படுத்தப் போகின்றோம் என்பதில்தான் நம் வாழ்வு இருக்கிறது.

### வைரஸ்

சமீபத்தில் 'I LOVE YOU என்னும் வைரஸ் ஏற்படுத்திய பரபரப்பு எல்லாருக்கும் தெரிந்ததுதான். புதிது புதிதாக நாள்தோறும் வைரஸ்கள் தோன்றிக் கொண்டுதான் இருக்கின்றன. இவற்றைக் கண்டுபிடித்து அழிக்கக் கூடிய மென்பொருள்களைக் கண்டுப் பிடித்திருந்தாலும் புதிய புதிய தொழில் நுட்பங்களுக் கேற்ப அவற்றை மாற்றிக்கொண்டே இருக்க வேண்டியிருக் கின்றது.

பெரும்பாலும் அனுமதி பெறப்படாத நகல் எடுக்கப்பட்ட மென்பொருள் பயன்படுத்தும்போதும் இணையம்வழி மின்னஞ்சல் பயன்படுத்தும்போதும் வைரஸ் பரவுவதாகக் குறிப்பிட்டுள்ளனர். இதனால் அனுமதி பெற்ற மென்பொருளைப் பயன்படுத்துவதும் மின்னஞ்சல் பயன்படுத்தும்போதும் கவனமாக இருப்பதுப் பயன் தரும்.

### மின்னஞ்சல் ரகசியம்

மின்னஞ்சல் செய்தி அஞ்சல் அட்டையில் உள்ள செய்தி போன்றது. அது யார் கணினியிலும் எப்போது வேண்டுமானாலும் போய்ச் சேர்ந்து விடக்கூடியது. நாம் ஒருவருக்கு அனுப்பும் செய்திகள் மற்றவர்கள் படிக்கிற வாய்ப்புகள் இருக்கின்றபோது அது எப்படி ரகசியமாகும். மின்னஞ்சலில் இப்படியான சங்கடத்தைத் தவிர்ப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சாதாரண மின்னஞ்சல் இப்படி என்றால் நிறுவன ரகசியங்களை எப்படிப் பாதுகாக்க முடியும்? செய்திகளை பிரித்துப் பிரித்து அனுப்பலாம் என்றார்கள் அனுபவம் உள்ளவர்கள்.

### ரகசிய வார்த்தை (Password)

இணையத்தைப் பயன்படுத்துவோர் ஒவ்வொரு வரும் ரகசிய வார்த்தை வைத்துக் கொள்கிறார்கள். அலுவலகத்தில் பணிபுரியும் ஒருவர் அலுவலகத்தின் ரகசிய வார்த்தைகளைக் கொண்டே தன் வீட்டில் இணைய இணைப்பைப் பயன்படுத்தும் வாய்ப்பு இருக்கிறது. அது நண்பர்களுக்குப் போகிறது. இப்படி அதன் எல்லை விரிந்து ரகசியம் என்பதன் பொருள் மாறி விடுகிறது. இதைத் தடுக்க வேண்டுமானால் அடிக்கடி PASS WORD மாற்ற வேண்டும் என்கிறார்கள். அதுதான் நல்லதும்கூட.

### குற்றங்கள்

ஆபாசப் புத்தகங்களைப் படிப்பது போலவே இன்றும் நிழலான பகுதிகளையே பலரும் பார்க்க விரும்புகின்றார்கள். கணினி முன் நாம் மட்டும்தான் உட்கார்ந்திருக்கிறோம். நம்மை யாரும் கவனிக்கவில்லை என்கிற எண்ணம் பல மாணவர்களை இதன்பால் ஈர்த்திருக்கிறது என்கிறார்கள். இதனைத் தடுப் பதற்கும் தவிர்ப்பதற்கும் சில மென்பொருள்கள் பாவனையில் இருந்தாலும் அவைகளை மீறி அந்தப் பக்கங்கள் அவர்களை ஈர்த்துக் கொண்டுதான் இருக்கின்றன.

வங்கிக் கணக்குகளில் மோசடிகள் செய்து தனது கணக்கில் பணத்தை வரவழைத்துக் கொள்ளும் மோசமான குற்றங்கள் தற்போது கணினி வழி பெருகியுள்ளன. இத்தகைய குற்றங்களைத் தடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்ற போதிலும் இவற்றை முற்றிலுமாகத் தவிர்க்க முடியவில்லை. இவற்றைச் சைபர் குற்றங்கள் என்கிறார்கள்.

டெல்லி மாநகராட்சி ஊழியர் ஒருவர் தனது அலுவலகக் கணினியைப் பயன்படுத்தி மூன்று கோடி ரூபாயைத் தனது கணக்கில் மாற்றிக் கொண்டதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இத்தகைய குற்றங்களைக் கண்டுபிடித்துக் குற்றவாளிகளை அடையாளம் காணப் பல நாடுகளில் தனியான புலனாய்வு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

### தொல்லைகள்

தொலைபேசியை எடுத்து ஆபாசமாகப் பேசுபவர்கள் இருப்பவர்கள் போலவே இணையத்திலும் இருக்கிறார்கள். இணையத்தைத் திறந்தாலே இத்தகைய ஆபாசக் களஞ்சியங்கள் நம் முன் நிற்கின்ற அதிர்ச்சியைப் பலரும் சந்தித்திருப்பார்கள். இவற்றைத் தவிர்க்க முயன்று கொண்டிருக்கிறார்கள்.

மின் வணிகம் எனப்படும் E-Comors. முறையில் பொருட்கள் வாங்க அனுமதி கேட்டுவிட்டு அப்பொருட்களை வீட்டுக்குக் கொண்டு வந்து பணம் கேட்டால் நான் அப்படி ஒரு பொருளுக்கு ஓடர் கொடுக்கவில்லை என்பார்கள். காரணம் உங்கள் பெயரில் இன்னொருவர் இந்தப் பொருளை வேண்டுமென்றே ஓடர் செய்திருப்பார். இதைத் தவிர்க்க இப்போது பணம் பெற்றுக் கொண்ட பின்பே பொருளை அனுப்பும் முறையை இவ்வணிகம் மேற்கொண்டுள்ளது.

இணையம் இன்றைய தலைமுறையினருக்கு ஒரு போதைப் பொருள் மாதிரி ஆகிக்கொண்டு வருகிறது. ஆர்வத்துடன் இணையத்துள் நுழைபவர்கள் அதை விட்டு வெளியேற முடியாமல் அதிலேயே அதிகாலை வரை உட்கார்ந்து விடுகிறார்கள். இது உண்மையில் ஒரு போதை தரும் விதமாக மாறிக் கொண்டு வருகிறது.இது போன்ற பல சிக்கல்கள் இருந்தும் இணையத்தின் தேவையும் பயன்பாடும் பெருகிக் கொண்டே வருகிறது. இணையம் தவிர்த்த வாழ்க்கை இனி இருக்காது என்று சொல்கிற வாழ்க்கை நெருங்கிக் கொண்டிருக்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com

# நிதி திரட்ட வேண்டுமா? நிதி கேட்க வேண்டுமா?

இன்று நாடு முழுமையும் உள்ள தமிழ்ப்பள்ளிகள் எதிர்கொண்டிருக்கும் பிரச்சனைகளில் மிகவும் முக்கியமானது பள்ளிக் கட்டடங்களின் பிரச்சனையாகும்.

தமிழ்ப்பள்ளிகளில் பெரும்பான்மையானவை தனியார் நிலத்தில் இருந்து வருவதால் இவை பந்துவான் மோடல் என்னும் அரச உதவிகள் பெறும் பள்ளிகள் என்கிற அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்டுப் புறக்கணிக்கப்படுகின்றன.

இத்தகைய பள்ளிகள் இன்று பழையதாகவும் மிகவும் வசதியற்ற கட்டடங்களாகவும் உள்ளன. பள்ளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்து கொண்டு வருவதினாலும், மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டிருப்பதினால் உண்டாகும் மாணவர்கள் அதிகரிப்பு எண்ணிக்கையையும் சமாளிக்க வேண்டிய சூழலில்தான் இன்றைய தமிழ்ப்பள்ளிகள் இருக்கின்றன.

இதனால் எழுந்துள்ள சிக்கல் என்னவென்றால் இப்படி நலிவடைந்து வரும் தமிழ்ப்பள்ளிகளைச் சீர்படுத்தும் பணி யாருடையது என்பதாகும்.

உதாரணமாக 240 மாணவர்களைக் கொண்டுள்ள பூச்சோங் கின்ராரா தமிழ்ப்பள்ளி தற்போது கட்டடத் தேவையை எதிர்நோக்கியுள்ளது. இப்பள்ளி தனியார் நிலத்தில் உள்ளதால் இதில் அரசாங்கம் புதிய பள்ளியை அமைக்க முன்வராது. அதே வேளையில் புதிய கட்டடம் கட்ட அது மானியம் (உதவி) வழங்கும். அந்த உதவி போதுமானதாக இல்லாத நிலையில் பொது மக்களிடம் இருந்து நிதிவசூல் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது.

தமிழ்ப்பள்ளிகளில் இப்படியான கட்டட நிதி வசூல் என்பது ஆசிரியர், மாணவர், பெற்றோர், பொதுமக்கள் என்று எல்லாத் தரப்பினரும் மாதக் கணக்கில் தமது நேரத்தையும் உழைப்பையும் செலவிட்டுப் பாடுபட வேண்டி இருக்கும்.

சில சமயங்களில் இது தொடர்பாக தலைமையாசிரியர், ஆசிரியர், மாணவர்கள் பள்ளி நேரங்களில் பல மணி நேரங்களைச் செலவிட வேண்டி ஏற்பட்டுவிடுகிறது. இதனால் மாணவர்களின் கல்வி வளர்ச்சியும் பாதிப்பு அடைவதுண்டு.

ஆனால், இவற்றை நாம் ஏன் செய்ய வேண்டும்? இவையெல்லாம் எப்படி நமது தலையில் வந்து வீழ்ந்தது?

மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அதில் கல்வி என்பது மிகவும் முக்கியமானது.

ஆயிரக்கணக்கான பள்ளிக்கூடங்களையும், தொழில் நுட்பக் கல்லூரிகளையும் கட்டித் தள்ளும் நமது அரசாங்கத்தால் தமிழ்ப்பள்ளிகளைச் சீரமைக்க இயலாது என்பது வேடிக்கையானது.

வருடாந்தர வரவு செலவுத் திட்டத்தில் ஆயிரம் கோடி ரிங்கிட்டுக்கும் அதிகமாகத் தாக்கல் செய்யும் அரசாங்கம், தமிழ்ப்பள்ளிகளை மட்டும் தொடர்ந்தாற்போல் புறக்கணித்து வருவது நமது மனத்தை நோகடிக்கின்றது.

நாம் ஒரு வசதி படைத்த சமுகமாக இருந்தால், பள்ளிகளைப் பராமரிப்பதில் சீனர்களைப் போல் விளங்க முடியும். அந்த நிலையில் நாம் இன்று இல்லை என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றுதானே!

நம்மை நாமே நொந்துகொண்டு, இந்தக் கட்டடப் பிரச்சனையைத் தீர்க்க முற்பட்டால் அது தீர்ந்து விடும் என்பது, 'பூனை கண்ணை மூடிக் கொண்டு உலகம் இருண்டது' - என்று கருதுவதைப் போன்றது.

தமிழ்ப்பள்ளிகளைப் பொறுத்தவரை இதன் மறுசீரமைப்பு மற்றும் கட்டடத் தேவை போன்றவைகளுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும். நமது அரசாங்கத்தினால் அதைச் சுலபமாகவே செய்ய இயலும்.

செய்ய வேண்டும் என நமது அரசாங்கத்தைக் கோருவது நமது கடமை! சிந்திப்போமா?


சிந்திப்போமா! ●

இடம்பெறும் படைப்புகளுக்குப் படைப்பாளர்களே பொறுப்பு. கதைகளில் இடம்பெறும் பெயர்கள் பாத்திரங்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.
Editor: **MANYAM SINNAPPAN**, Published by: **SEMPARUTI PUBLICATIONS SDN BHD, (ROC.409768-u)**
LOT 2-6-8, MENARA KLH, BUSINESS CENTER, NO:2, JALAN KASIPILLAY OFF 2 1/2 MILE JALAN IPOH
51200 KUALA LUMPUR. **Printed by: SAMPOORNA PRINTERS SDN BHD.,**
No. 1, Jalan TIB-1/19, Taman Industri Bolton, 68100 Batu Caves, Selangor Darul Ehsan.



படிப்பகம்

www.padippakam.com




## GROUP PRODUCT RANGE : IT, POWER INDUSTRIES & TELECOMMUNICATION

FYM HOLDINGS SDN BHD
Tel : 03-5194611
Fax : 03-5194633

ISOMAS SDN BHD
Tel : 03-7047477
Fax : 03-7047499

EMPIRE ENGINEERING SDN BHD
Tel : 03-5191477
Fax : 03-5195477

BESTIUM CORPORATION SDN BHD
Tel : 03-5194955
Fax : 03-5194933

DYNAMIC ENGINEERING TECHNOLOGIES SDN BHD
Tel : 03-5195233
Fax : 03-5194633

APS TECHNICAL SERVICES SDN BHD
Tel : 03-5191577
Fax : 03-5192577

ISOMAS TRAINING CENTER
Tel : 03-7045045
Fax : 03-7045051

**Webpage : www.fym.com.my**

படிப்பகம்

www.padippakam.com

# MAYLEAD (M) BERHAD

( 257252-D)

SUITE-BG-01, PJ INDUSTRIAL PARK,
JALAN KEMAJUAN SECTION 13,
46200 PETALING JAYA, SELANGOR.
TEL: 603-7569401/603-7569402
FAX: 603-7569329/603-7569330

**எங்கள் நிறுவனத்திற்குச் சொந்தமான உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள்.**

**INCORPORATED IN MALAYSIA :**

MAY SHIPPING (M) SDN BHD (373506-P)
MAY LOGISTIC (M) SDN BHD (444728-K)
MAY MEGA POWER (M) SDN BHD (464223-V)
MAY HIGH TECH DAIRY (M) SDN BHD (284387-P)
MAY MANAGEMENT CONSULTANT (M) SDN BHD (399769-X)

**INCORPORTED IN INDIA :**

MAY INDIA IMPEX LTD. (08/22221/1997)
MAY INDIA LUBE LTD. (08/22004/1999)
MAY MEGA INFO TECH LTD. (08/21211/1999)

**INCORPORTED IN AUSTRALIA :**

MAYLEAD AUSTRALIA PVT. LTD. (ACN 084978530)

**INCORPORTED IN SINGAPORE :**

MAYLEAD SINGAPORE PVT. LTD. (199800225C)



**மலேசிய இந்தியர்களின் பொருளாதாரம் உயர, ஒன்று படுவோம், திறம்பட வியாபாரம் செய்வோம், முன்னேறுவோம்.**

படிப்பகம்